இப்பொழுது
uhavary.com இலும்
படிக்கலாம்

CANADA

முகவரி

MUHAVARY

மாதாந்த சஞ்சிகை எண்: 8 பாதை: 1 ஏப்ரல் 2015



முகவரியில் குடிகொண்டவை....



Contact
5215, Finch Ave. E., Unit 218,
GTA Square,
Toronto, Ontario.
M1S 0C2
Canada.

phone: (+1) 416 628 6214

e-mail: info@muhavary.com
web: muhavary.com

நன்றி வரிகள்...

காலத்தில் செய்த உதவி

'முகவரி'யின் வரவையிட்டு, மகிழ்வுற்று, அது நின்று நிலைக்க ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய, வழங்க முன்வந்த அனைத்து வாசகர்கள், அபிமானிகள், நண்பர்கள், ஊடகங்கள் மற்றும் விளம்பரதாரர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

முகவரி என்று பெறுவோம் நம்பகத் தன்மையை?

நம்பகத்தன்மை என்பது ஒரு தனி மனிதனுக்கு மட்டுமன்றி அமைப்புகளுக்கும் சமுதாயத்துக்கும் அத்தியாவசியமான மிக முக்கியமானதோர் அம்சம். அந்த நம்பகத் தன்மையை ஈட்டுவதென்பது ஒரு நீண்ட செயற்பாடு. அமைப்புக்கள் சமுதாயங்கள் என்று வரும்போது அது ஒரு கூட்டுச் செயற்பாடும் கூட. ஆனால் நம்பகத்தன்மை பற்றிய கரிசனையின்றி, உடனடி வெற்றிகளுக்கும் லாபங்களுக்குமாக செயற்படும்போது அதன் பாரதூரமான விளைவு அப்போது தெரியாது. அந்த வெற்றிகளும் லாபங்களும்கூட எம்மீது புற உலகம் கொண்டிருந்த நம்பகத்தன்மையை நாம் அபகரித்துக்கொண்டதனால் ஏற்பட்ட லாபமே. நம்பகத்தன்மையை இழந்து நாம் ஈட்டும் அவ் வெற்றிகளோ லாபங்களோ, அச் சந்தர்ப்பத்தை எமக்கு அடியோடு இல்லாதாக்குகின்ற நிலைமையை ஏற்படுத்துகின்றன என்பது எமக்குப் புரிவதில்லை.


நாம் கடந்தகாலத்தில் செயலாற்றிய சுயநலச் செயற்பாடுகள் எம்மீதான நம்பிக்கையைச் சிதைத்துவிட்டுள்ளன. நாம் இன்று வாக்குறுதிகளை நம்புவதில்லை. ஒரு கட்சி மற்றொரு கட்சியை நம்புவதில்லை. கட்சிக்குள்ளேயும் ஒருசாரார் மறுசாராரை நம்புவதில்லை. பேச்சுவார்த்தைக்கோ போராட்டத்துக்கோ ஆன விதிகளை நம்புவதில்லை. இவ்வாறான எமது நம்பாமை மறுபக்கமாக எம்மீதும் நம்பகத்தன்மையை இழக்கவைக்கும் என்பதை நாம் உணர்வதில்லை.

நம்பகத்தன்மையை இழந்துவிட்டால் அதை கட்டியெழுப்புவதற்கு வருடங்களல்ல தசாப்தங்கள் சென்றாலும் முடியாது போய்விடும். இலங்கை சுதந்திரம் பெற்றபோது மலையகத் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியிலிருந்து எமது நம்பகத்தன்மை கேள்விக்குறியாகிவிட்டது. அதைத் தொடர்ந்துவந்த வரலாற்றில் நாம் இதனைச் சரிசெய்வதற்குப் பதிலாக மோசமடையவே செய்துள்ளோம். பிரதேசங்களுக்கிடையிலான நம்பகத் தன்மையின்மை பிரதேச வாதங்களாக எம்மிடையே எழுந்தது. ஆயுதப் போராட்ட காலத்திலான நம்பகத்தன்மையின்மை இயக்க மோதல்களாக வெடித்தது, உள்ளியக்க மோதல்கள்ளாகவும் ஊடுருவியது. சிறுபான்மை இனங்களுக்கிடையே முன்னரே வேர்விட்டிருந்த நம்பகத் தன்மையின்மை இக்காலத்தில் மேலும் விரிசல் கண்டது. தற்போது நாம் இழப்புகளைத் தவிர எதையும் ஈட்டிக்கொள்ளாத நிலையிலும் இன்றைய கட்சி மோதல்கள் பொது நோக்கத்தைக் காவு கொடுத்த நம்பகத்தன்மையின்மையின் வடிவங்களாகவே இருக்கின்றன. எமக்குள் நாம் கொண்டிராத நம்பகத்தன்மையை நாம் பிறரிடம் எப்படிக் கோர முடியும்.

எமது அரசியல் தோல்விகளிலும் நம்மீதான நம்பகத்தன்மையின் வீழ்ச்சி காத்திரமான பாத்திரம் வகித்திருக்கிறதென்பதை நாம் திறந்த மனதோடு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

புலம்பெயர்ந்த தமிழ் சமுதாயத்திலும் நம்பகத்தன்மை இன்று கேள்விக்கிடமாகி வருகிறது. சுயநலத்திற்காக இனத்தின் நம்பகத்தன்மையை பலிகொடுப்பது எத்தகைய பாதகங்களைத் தோற்றுவிக்குமென்பது உடனடியாகப் புரியப்போவதில்லை. எம்மால் எமக்குள்ளேயே கூட்டாகச் செயற்பட முடியாத நிலைமை உள்ளது. ஒருவர் நம்பமுடியாதவராகுவது பலரைச் சந்தேகிக்க வைக்கிறது. அடிப்படையில் சமூகமே நம்பமுடியாத ஒன்றென்றாகிவிடுகிறது. இதை மறுவளம் மாற்றுவது கடினம். ஆனால் நாம் இனியாவது மாற்றியாகவேண்டும்.

ஆசிரியர்.





சுமந்திரன் சொல்வதென்ன..?

சென்றமாதம் தனிப்பட்ட விஜயமொன்றின் நிமித்தம் கனடா வந்திருந்த ரிஎன்ஏ முக்கியஸ்தர் சுமந்திரன் பா.உ. அவர்கள் முகவரி சஞ்சிகை உள்ளடங்கலாக, சில கனேடிய ஊடகங்களைச் சந்தித்தபோது பலதரப்பட்ட விடயங்கள் குறித்த கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

போர்க்குற்ற விசாரணை

போர்க்குற்ற விசாரணை பிற்போடப்பட்டமை காலதாமதப்படுகின்ற சிறு பாதிப்பைக் கொண்டிருந்தாலும் எமக்கு சாதகமானதே என்று கூறி அதற்கான 3 காரணங்களைக் கூறினார்.

முதலாவதாக, இந்த விசாரணையைப் பிற்போடச்சொல்லி ஐநா சபையை (புதிய) அரசாங்கமே கோரியுள்ளது. இதில் உள்ள பிடி என்னவென்றால், கடந்த அரசாங்கம் விசாரணை வேண்டாமென்று மறுத்து நின்ற நிலை மாறி, இந்த அரசாங்கம் விசாரிக்கும்படி தானாகவே கோரியுள்ளது - ஒரு காலதாமதத்தை மட்டும் கொடுக்கும்படி வேண்டியபடி. எனவே தானே விசாரிக்கும்படி கோரிய ஒன்றை விசாரிக்க வேண்டாமென அது கூற முடியாத நிலை இங்கு ஏற்பட்டுள்ளது. அது நமக்கு சாதகம்.

அடுத்து இத் தாமதித்த விசாரணைக்கு இவ் அரசாங்கம் ஒத்துழைப்பதாக வாக்குறுதி கொடுத்துள்ளது. அந்த வாக்குறுதியை சாதகமாகப் பயன்படுத்தி, இலங்கைக்குள் விசாரணை நடத்த வாய்ப்புள்ளது. அத்தோடு அரசாங்கம் இவ் இடைப்பட்ட காலத்தில் இவ் விசாரணைக்கான உள்நாட்டு பொறிமுறையொன்றை அமைக்க தொழில்நுட்ப உதவி கோரியுள்ளார்கள். இவை ஐநா சபை நாட்டுக்குள் அதிக அளவு செல்வாக்கு செலுத்த வழிகோலுபவையாக உள்ளன.

மூன்றாவதாக, இக் கால தாமதத்தால், கடந்த ஆட்சிக்கு பயந்து சாட்சியமளிக்க முன்வராத பலர் புதிய ஆதாரங்களோடு சாட்சியமளிக்க முன்வர வாய்ப்புக் கிடைத்துள்ளது. அதனால் மேலதிக விபரங்களோடு நடந்த உண்மைகளை கண்டறிவதற்கு இத் தாமதம் உதவுவதானது எமக்கு சாதகமானதே. அதுமட்டுமன்றி பல புதிய சாட்சியங்கள் வெளிவரத் தொடங்கிவிட்டன அண்மையில் சனல் 4 புலிகளின் தலைவர் யுத்த நியதிகளுக்குப் புறம்பாக சித்திரவதை செய்யப்பட்டே கொல்லப்பட்டதாகத் தெரிவித்திருந்தமை குறித்த ஆதாரங்களை அவர்கள் ஐநாவுக்கு வழங்கியிருக்கவே செய்வார்கள், அதுகுறித்தும் விசாரிக்கப்படலாம். அவ்வாறு முக்கியமான புதிய சாட்சியங்கள் சேர்ந்துக்கொள்ளப்படலாமென்பதை ஐநா உயர்ஸ்தானிகரும் தெரிவித்திருந்தார்.

மேலும் இவ் விசாரணை முடிவில் ஐநா சபை முன்வைக்கும் தீர்ப்புகளிலும் சிபாரிசுகளிலும், வெறும்போரில்நிகழ்ந்ததுஎன்னஎன்பதுமட்டுமன்றி, இந் நாட்டில் இனி சுமுகமாகனதும், நீதியானதுமான நிலைமையைக் கட்டியெழுப்ப என்ன விடயங்களை அரசாங்கம் கடைப்பிடிக்க வேண்டுமென்பனவும் அடங்கியிருக்கும். அதில் இனப்பிரச்சினையின் தீர்வுக்கான சிபாரிசுகள், நில அபகரிப்பு, இராணுவக் குவிப்பு போன்றவற்றை கைவிடவைக்கும் அழுத்தங்கள் ஆகியவற்றை அது முன்வைக்கக் கூடியதாக இருக்கும். இது அரசாங்கத்துக்கு சர்வதேச அழுத்தத்தை ஏற்படுத்துவதாய் அமையும். அவற்றை நடைமுறைப்படுத்த பல சாத்தியங்கள் உள்ளன.

விசாரணையைப் பிற்பபோட்டதற்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றோர் மேற்கொள்ளும் கடுமையான எதிர்ப்புக் குறித்தும், சுமந்திரனின் கொடும்பாவியை லண்டனில் எரித்தமை, யாழில் எரித்தமை போன்றவைகுறித்தும் பேசிய அவர், முன்னர் இது சர்வதேச விசாரணையே அல்லவென்றும் இவ் விசாரணயால் பயனில்லையென்றும் ஆர்ப்பாட்டம் செய்த இவர்கள்தான் இப்போது விசாரணையைப் பிற்போட்டதற்கு கூச்சலிடுகிறார்கள் என்றார்.

முன்னர் இது சர்வதேச விசாரணையே இல்லையென்றும் இவ் விசாரணையால் பயனில்லையென்றும் ஆர்ப்பாட்டம் செய்த இவர்கள்தான் இப்போது இவ் விசாரணையைப் பிற்போடுவதற்குக் கூச்சலிடுகின்றனர்.

நில ஆக்கிரமிப்பு

தற்போதும் இராணுவம் நில ஆக்கிரமிப்புகளில் ஈடுபடும் சம்பவங்கள் நிகழ்கின்றனவே என்று கேட்கப்பட்டபோது, ஆம், சில இடங்களில் நிகழ்ந்துள்ளன. அவற்றை நான் கண்டித்துள்ளேன். நிலைமை என்னவென்றால் அரசாங்கம் மாறியிருக்கிறதேயன்றி, இராணுவம் இன்னும் அரசாங்கத்தின் வழிக்கு வரவில்லை. புதிய அரசாங்கமென்பதால் அப் பிரச்சினை அதற்கு உள்ளது. விரைவில் அவர்கள் முழுக் கட்டுப்பாட்டையும் எடுத்து கொள்கையளவில் அவர்கள் இணங்கியுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவார்களென எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார். இதேவேளை அவர்களுக்கான அவகாசத்தைக் கொடுக்காமல் அதிதீவிரத் தன்மையை வெளிப்படுத்துவது மஹிந்தவைத் திரும்பிவரவைக்கவே வழிகோலுவதாய் முடியும் என்றார்.

ஜனாதிபதிமுறை ஒழிப்பு

ஜனாதிபதி முறையை ஒழிப்பதை தாம் ஏன் ஆதரிக்கிறார்கள் என்பதை விளக்கியபோது, தற்போதைய நிறைவேற்று



அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையின்கீழ், அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளுநர் மூலம் மாகாண சபையின் அதிகாரங்கள் முடக்கப்டுகின்றன. இந் நிறைவேற்று அதிகர ஜனாதிபதிமுறை ஒழிக்கப்பட்டால்மாகாணசபைகளைஆளுநர்மூலம் ஜனாதிபதி கட்டுப்படுத்தும் நிலை இல்லாதொழியும். இதுஎம்மாகாணசபைகளைகூடுதல்சுதந்திரத்துடன் செயற்படச் செய்ய வாய்ப்பளிக்கும் என்றார்.

ரிஎன்ஏ பதிவு

தமிழ் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்யும்படி உங்கள் கூட்டமைப்புக் கட்சிகள் குரல் கொடுக்கின்றனவே என்று கேட்டதற்கு, ரிஎன்ஏ ஏற்கெனவே பதிவுசெய்யப்பட்டுத்தான் உள்ளது என்று ஒரு எதிர்பாராத பதிலைத் தந்தார். அதை விளக்கும்போது, இலங்கையில் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் இரண்டு வகையாக அதை மேற்கொள்ளலாம். ஒன்று, ஒரு கட்சியாகப்

போட்டியிடுவது. மற்றயது பல கட்சிகளின் கூட்டமைப்பாகப் போட்டியிடுவது. இந்தவகையில் பல கட்சிகளின் கூட்டமைப்பாக, தமிழ் தேசிய கூட்டமைப்பு போட்டியிடுகிறதென்பது பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இவர்கள் அப்படியன்றி, ரிஎன்ஏயை ஒரு கட்சியாகவே பதிவு செய்யும்படி கோருகின்றனர்- அதாவது ரிஎன்ஏக்குள் இருக்கும் நான்கு கட்சிகளுடன் இது ஐந்தாவது கட்சியாக பதிவு செய்யப்பட வேண்டுமென்கின்றனர். அவர்கள் அப்படிக் கேட்பதற்கு ஒரு காரணமுள்ளது. அவர்களது தற்போதய கட்சிகளின் கடந்தகாலம் குறித்த அவப்பெயர்களின் நிமித்தம் அவர்கள் அப் பெயர்களில் தேர்தலில் நிற்க விரும்பவில்லை. அதேவேளை தமிழரசுக் கட்சியில் இணையவும் விருப்பமில்லை. இதுவே நிலமை என்றார்.

புலம்பெயர்ந்தோர் ஆதரவு


நீங்கள் உங்களுக்கு புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் ஆதரவு தேவையில்லையென்று கூறினீர்களா என்று கேட்டதற்கு, அதை மறுத்த சுமந்திரன், உங்கள் சொற்களை எனது வாய்குள் திணித்து அவற்றைப் பதிலாக எடுக்க வேண்டாம், நான் அப்படிக் கூறவில்லை. தெளிவாகக் கூறுகிறேன். எமக்கு முதலில் இலங்கை வாழ் தமிழ் மக்களின் ஆதரவு தேவை. அந்த ஆதரவிற்கு புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மற்றும் தமிழ் அமைப்புகளின் ஆதரவும் தேவை. இதை நான் இரண்டாகப் பிரித்துத்தான் சொல்கிறேன். ஆனால் புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் ஆதரவு தேவையில்லையென்று நான் சொல்லவில்லை என்றார். ஆனால் புலம்பெயர்ந்த அமைப்புகளுடன் தான் பேசி வருவதாகவும் சிலரே விடயங்களைத் திரித்துக் கூறுகிறார்கள் என்றும் கூறினார்.

உட்கட்சி முரண்பாடு

வட மாகாணசபை முதலமைச்சர் விக்னேஸ்வரன், இனப்படுகொலை நிகழ்ந்ததாக நிறைவேற்றிய தீர்மானம் குறித்து கேட்டபோது, அத் தீர்மானம் நிறைவேற்றப்போவது தமக்குத் தெரியாதென்றார். அதனால் சிக்கல் எழாதவாறு தாம் அரசாங்கத்தைக் கையாண்டு சமாளித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

உங்கள் மீது உங்கள் கூட்டமைப்புக்குள்ளேயும் கட்சிக்குள்ளேயும் காரசாரமான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகிறதே என்றதற்கு அதனால்தான் தான் இம்முறை தேர்தலில் நின்று மக்களின் அங்கீகாரத்தைப் பெற முடிவு செய்துள்ளதாக தெரிவித்தார்.

தேர்தலில் பல கட்சிகளின் கூட்டமைப்பாக, தமிழ் தேசிய கூட்டமைப்பு போட்டியிடுகிறதென்பது பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இவர்கள் அப்படியன்றி, டீஎன்ஏயை ஒரு கட்சியாகவே பதிவு செய்யும்படி கோருகின்றனர்



சம்பூர் அனல் மின் திட்டம் உத்தேசிக்கப்பட்ட முறையில் முன்னெடுக்கப்படும் என்று சிறிலங்கா மின்சார சபைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தத் திட்டத்தின் மூலம் பாரியளவிலான பொதுமக்கள் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்படும் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. சிறிலங்காவின் தேசிய அனல் மின்வலு கூட்டுத்தாபனத்தினால் சாத்திய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தத் திட்டம் இந்தியாவின் மின் நிறுவனத்துக்கும் சிறிலங்கா மின்சார சபைக்கும் இடையிலான கூட்டு முயற்சியாகும் என்று சிறிலங்காவுக்கான இந்தியத் தூதரகத்தின் தகவல் அதிகாரி தினகர் அஸ்தான தெரிவித்திருந்தார். இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பல இடங்கள் ஆய்வு செய்யப்பட்டன. தொழில்நுட்ப மற்றும் பொருளாதார சாத்தியங்களின் அடிப்படையில் மின் திட்டத்திற்கான இடம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. சம்பூர் பிரதேசத்தில் மின்திட்டம் அமைக்கப்பட வேண்டும் என்று இந்திய அரசாங்க மின் நிறுவனம் பரிந்துரைக்கவில்லை என்று 2007 ஆம் ஆண்டில் இந்திய தூதரகப் பேச்சாளர் நக்மா மாலிக் தெரிவித்திருந்தார்.

சம்பூர் அனல்மின்திட்டம் – ஒரு கேடு

– நிஸாத் முகம்மது இஸ்மாயில்

சுமார் 500 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் இந்தத் திட்டம் அமைக்கப்படவுள்ளதாகவும், 2012 ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தை பூர்த்தி செய்ய முடியும் எனவும் கூறப்பட்டது. தற்போது 2015 வரை எதும் முடிவடையவில்லை இருப்பினும் 2017ல் முடியுறும் என கூறப்படுகின்றது.



2006 ஆம் ஆண்டு சிறிலங்காப் படைத்தரப்பிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல் காரணமாக சம்பூர் பிரதேச மக்கள் அப்பிரதேசத்தை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அவர்கள் தற்போது இடைத்தங்கல் முகாம்களில் வசித்து வருகின்றனர். சம்பூர் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்கள் அதிஉயர் பாதுகாப்பு வலயமாக சிறிலங்கா அரசாங்கம் அறிவித்தது. சம்பூர் பிரதேச மக்கள் அச்சம் காரணமாக அப்பிரதேசத்தை விட்டு வெளியேறியுள்ளனர். வெளியேறிய பலரிடம் தங்களின் உடமைகளை உறுதிப்படுத்தக்கூடிய எவ்வித ஆவணங்களும் தற்போது கைவசம் இல்லை.

பிரதேச மக்களின் வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. எனினும் பல தலைமுறைகளாக அப் பிரதேசத்தில் அவர்கள் வாழ்ந்து வந்துள்ளனர்.

இரண்டாம் இராஜசிங்க மன்னனால் கோணேஸ்வரத்திற்கு பதிலீடாக தம்பலகாமத்தில் ஓர் கோயில் அமைக்கப்பட்டதாகவும், கோயிலுக்குத் தொண்டாற்றும் பணிகள் சம்பூர் மக்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் டச்சு வரலாற்றுத் பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சம்பூர் ஓர் மிகச் சிறந்த விவசாய நிலம். மின்நிலையத்தை அமைப்பதற்கு பொருத்தமான இடம் அதுவல்ல. இந்த மின்சாரத் திட்டத்தின் மூலம் பாரிய சூழல் பிரச்சினை உருவாகக் கூடும். மூதூர் கிழக்குப் பிரதேசத்தில் 20,000 ஏக்கரை ஒதுக்குவதன் மூலம் 16,000 மக்கள் இடம்பெயர வேண்டியேற்படும். இந்தப் பிரதேச மக்கள் அடையக்கூடிய பாதிப்புக்கள் குறித்து அரசாங்கம் எந்தவித கரிசனையும் காட்டவில்லை. சுமார் 50 அனல் மின் நிலையங்களை அமைக்கக் கூடியளவு நிலத்தை அரசாங்கம் பெற்றுக் கொண்டுள்ளது ஆனால் அந்தப் பிரதேச மக்களிடம் இது குறித்து எவ்வித கருத்தும் அறியப்படவில்லை என்று என்று மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் ஒன்றியத்தைச் சேர்ந்த ராஜன் கூல் சுட்டிக்காட்டியுள்ளார். எறிகணைத் தாக்குதல்களின் காரணமாக பிரதேச மக்கள் வெளியேறினர். அந்த சம்பவங்களில் எத்தனை பேர் உயிரிழந்தார்கள் என்பது பற்றிக் கூட சிறிலங்கா அரசாங்கம் கவலைப்படவில்லை. அந்தப் பிரதேச மக்களிடம் கருத்துக்கள் அறியப்பட்டிருக்க வேண்டும், அவர்களுக்கு நியாயமான சலுகைகள் வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

அந்தப் பிரதேச மக்கள் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்படாது என அரசாங்கம் குறிப்பிடுகின்றது. மறுபுறத்தில் அகதி முகாம்களில் தங்கியிருக்கும் பிரதேச மக்களிடம் வேறு இடங்களுக்கு செல்வதற்கு விருப்பம் தெரிவிக்கும் கையொப்பங்களை அரசாங்கம் தந்திரமாக பெற்றுக் கொள்கின்றது. மாற்றீடாக வழங்கப்படவுள்ள பிரதேசங்கள் மிகவும் மோசமான பயனற்ற பிரதேசங்களாக காணப்படுகின்றன. சம்பூருக்கு மாற்றீடாக பரிந்துரைக்கப்பட்டுள்ள ரால்குளி- மகாவலி கங்கை பெருக்கெடுத்து ஓடும் காலங்களில் நீரில் மூழ்கிவிடும். மற்றைய தென்பகுதியில் வறட்சி நிலைமை காணப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சம்பூர் பிரதேசத்தில் மின்நிலையம் அமைக் கப்படுவதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தது. சம்பூரில் மின் நிலையத்தை அமைப்பதன் மூலம் சுற்றுலாத்துறை உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க சிறிலங்கா அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.


பாரிய கப்பல்களின் மூலம் நிலக்கரியை இறக்குமதி செய்ய சம்பூர் மிகவும் உசித மான இடமாக அமைந்துள்ளது, பாரிய கப்பல்கள் போக்குவரத்து செய்யக்கூடியளவு ஆழ்கடல் பரப்பு காணப்படுகின்றது.

பிரதேச மக்கள் இடம் நகர்த்தப்பட்டமை தொடர்பாக வினவிய போது, இந்தப் பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வு பெற்றுக்கொடுத்ததாக தெரிவிக்கப்படுகின்றது. எனினும், உயர் பாதுகாப்பு வலயங்களில் எவருக்கும் தங்க அனுமதியில்லை என குறிப்பிடப்படுகின்றது. இராணுவக் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாக சம்பூர் கருதப்படுவதாக இராணுவப் பேச்சாளர் வேறு தெரிவித்திருந்தார். திருகோணமலை துறைமுகம், பிறீமா மா ஆலை உள்ளிட்ட மிக முக்கிய இலக்குகள் காணப்படுகின்றமை குறித்தே அவர் இதை தெரிவித்திருந்தார்.

சம்பூர் பிரதேச மக்களை இடம் நகர்த்த வேண்டிய அவசியம் எதுவுமில்லை. மின்சாரத் திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் இராஜதந்திர காய் நகர்த்தல்களை இந்தியா மேற்கொள்வதாக இந்திய ஊடகவியலாளர் ஒருவர் குறிப்பிட்டிருந்தார். பிராந்தியத்தின் அபிவிருத்தி மற்றும் இராஜதந்திர விவகாரங்களில் தலையீடு செய்வதற்கு இந்திய அரசாங்கத்தின் ஓர் தந்திரோபாயமாக மின்சாரத் திட்டம் அமைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டுகின்றார். அத்தோடு இந்தியாவில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மின்வலு பிரச்சினைக்கு தீர்வு காணும் முக்கிய உபாயமாகவே பிராந்தியத்தின் பல நாடுகளுடன் கூட்டு மின்சக்தி திட்டங்களை அமுல்படுத்த இந்தியா முனைப்பு காட்டி வருவதாக அந்த ஊடகவியலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆனால் இதுவரைக்கும் மூதூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட மக்கள் நீதிமன்றம் சென்று சட்டரீதியாக தடுப்பதற்கு முன்வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் மூதூர் அரசியல் தலைமைகளும் எதிர்வரும் 2015 இன் பொது தேர்தல் பற்றிய வியூகங்களை அமைப்பதிலும் அடிமட்ட அப்பாவி மூதூர் பிரதேச மக்களின் வாக்குகளை தக்கவைப்பதிலுமே ஆர்வம் காட்டுகின்றனர்.

(நன்றி: லக்பிம)



RIGHT AT HOME
"1 Brokerage in the GTA"


MORTGAGE ALLIANCE
Lic # 10530

Brokerage Office :112-895, Don Mills Rd, Toronto, ON, M3C 1W3
Brokerage - 416-391-3232

Corporate Offfice: Sheppard Aver E, Suite 200, Toronto, ON, M2J 5B4
Toll Free : 1-877-366-3487

மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

MORTGAGE & LINE OF CREDIT



- ⇨ நல்ல ரேட்ல மோட்கேஜ்
- ⇨ லைன் ஒப் கிரெடிட்
- ⇨ ரீபைனான்ஸ்
- ⇨ 2வது, 3வது மோட்கேஜ்
- ⇨ பாங்க்ரப்சி நிலையில் மோட்கேஜ்
- ⇨ எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க

பவர் ஒப் சேல் பிரச்சினையா ?

WIN UP TO
$100,000*
WHEN YOU USE
THE RIGHTBROKER™
ASK ME HOW!
*See contest rules at
www.mortgagealliance.com/JeyRasathurai/contest.asp

மற்றும் எதுவாக இருந்தாலும் அழையுங்கள்.
"மோட்கேஜ் கிளினிக்" ✓
உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

BEST RATE GUARANTEED

MORTGAGE IN ANY SITUATION

416-613-2788 / 416-816-9011

திங்கள்—வெள்ளி (call for appointment)

வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00 மணி வரை



எமது முகவரி :
1504 Markham Rd, Toronto,
ON, M1B 2V9
(Markham & HWY 401)



சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 12001741
Cell : 647-861-8240

ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
Cell : 416-624-4843

Real Estate Service

உங்கள் விற்பனைக் கொமிசனை நீங்களே தீர்மானியுங்கள்!!

வீடு வாங்க , விற்க , வாடகைக்கு விட அல்லது பெற்றுக்கொள்ள...

"To Every Bird, Its Own Nest is Beautiful"

A tradition of trust......



Vaughan, Price $ 669,900
Basement finished
Close to Vaughan mills
wonderland and schools ,
4 bedrooms and 4 washrooms



Brampton, Price $ 949,000
5 bedrooms and 4 washrooms
about 4000 square feet
Hardwood floor throughout
Close to 407 highway all amenities



Ajax Price $ 679,990
4 bedrooms and 3 washrooms
2622 square feet Lots of money
spent on upgrades throughout
the house Close to schools, shops,
401 highway, public and go transit



Scarbrough, Price $ 799,900
4 bedrooms +2 bedrooms in
the basement Finished basement
with a kitchen for additional income
Excellent location with a walking
distance to schools and TTC access



Mississauga Price $ 549,000
inished basement 4 bedrooms
+3 bedrooms with additional
income Hardwood throughout
the main floor Close to all amenities



Brampton, Price $719900
5 bedrooms + 1 bedroom, nearly
3500 square feet
Backing on to the ravine
Close to all amenities

HomeLife Today Realty Ltd., Brokerage*

*Independently owned and operated.

Higher Standard Agents.. Higher Results™

உங்கள் முழு மன நிறைவுடன் வீடு
வாங்க, விற்க, முதலிட...

Charles A . Arulanandam

Sales Representative



Business : 416 298 3200
Dircect: 416 459 0445

charlesantonysa@gmail.com
www.homelifetoday.com

210 - 31 Progress Ave ., Toronto. ON M1P 4S6

Not intended to solicit properties that are under contract

Creaa Design

இலங்கை இன முரண்பாட்டில் நிகழ்ந்தேறிய தமிழினப் படுகொலைகள் வரலாற்றுப் பதிவுகளாக இங்கே தொடர்ச்சியாகப் பதிவிடப்படும்.




1958 ஆம் ஆண்டு இனக்கொலை என்பது திடீரென ஏற்பட்ட ஒன்றல்ல. இதற்குப் பலமான பின்புலம் ஒன்று இருக்கிறது. 1956 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட முப்பத்து மூன்றாம் இலக்கச் சிங்களம் மட்டும் சட்டம் ஏற்படுத்திய தாக்கத்தின் விளைவாகத் தமிழர் தரப்பின் 1956 ஆம் ஆண்டு யூன் மாதம் ஐந்தாம் திகதி கொழும்பு காலி முகத்திடலில் சிங்களம் மட்டும் சட்டத்திற்கு எதிராகச் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தினார்கள். இந்தப் போராட்டம் சிங்களக் காடையர்களால் வன்முறை பிரயோகிக்கப்பட்டு ஒடுக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக 1957ம் ஆண்டு தமிழர் தரப்பினர் திருமலைக்குப் பாதயாத்திரை சென்று அங்கே ஒரு மாநாடு நடாத்தினார்கள். பண்டாரநாயக்கா அரசிற்கு ஒரு வருட காலக்கெடு கொடுத்து அதற்குள் தமிழ் மொழிக்குச்

1958 ஆம் ஆண்டு இனக்கொலை

சமவுரிமை கொடுக்கவேண்டும் என்றும் தமிழ்ப் பிரதேச அபிவிருத்திகளுக்காக பிராந்திய சபைகள் அமைக்கப்பட வேண்டும் என்றும் திருமலை மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த வேண்டுகோளுக்கு அமைய பண்டாரநாயக்கா அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவதென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனடிப்படையில் தான் அப்போதைய பிரதமர் பண்டாரநாயக்கா தந்தை செல்வநாயகத்தோடு ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்தார். இதன் விளைவாக 26.07.1957 அன்று தந்தை செல்வநாயகம் தலைமையில் தமிழரசுக் கட்சியோடு பண்டாரநாயக்கா ஒரு உடன்படிக்கை செய்தார். இதுவே புகழ்பெற்ற-1957 பண்டா-செல்வா உடன்படிக்கையாகும்.



இந்த உடன்படிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் ஜே.ஆர் ஜெயவர்த்தனா கண்டிக்குப் பாதயாத்திரை போனார். அத்தோடு ஐக்கிய தேசியக் கட்சியானது முதல் காலடி என்ற வெளியீட்டையும் வெளியிட்டு இனவாதப் பரப்புரையில் ஈடுபட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் பரப்புரை நாளேடான "சியரட்ட" மிக மோசமான இனவாதப் பரப்புரையைத் தமிழருக்கு எதிராக மேற்கொண்டது. கண்டிக்குப் பாதயாத்திரை போகப் புறப்பட்ட ஜே.ஆர் இன் பாதயாத்திரை இம்புள்கொட என்ற இடத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பண்டாரநாயக்கா தலைமையில் வந்த இன்னொரு குழுவால் தடுத்து நிறுத்தப்பட்டது.இதற்கிடையில் பண்டாரநாயக்காவைப் பதவிக்குக் கொண்டுவந்த பிக்கு பெரமுனவைச் சேர்ந்த பௌத்த பிக்குமாரும், ஜாதிக விமுக்தி பெரமுனவைச் சேர்ந்த வெலிமடை எம்.பி கே.எம்.பி இராஜரட்னாவும் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அதிபர் மெத்தானந்த போன்றவர்களும் சிங்கள தேசிய முன்னணியைச் சேர்ந்த ஆர்.ஜி. சேனநாயக்கா போன்றவர்களும் பண்டா-செல்வா ஒப்பந்தத்தைக் கிழித் தெறியுமாறு பண்டாரநாயக்காவுக்கு அழுத்தம் கொடுத்ததுடன், பிரதமர் பண்டாரநாயக்காவின் கொழும்பு ஏழு, றொஸ்மீட் பிளேசிலுள்ள அவரது இல்லத்திற்கு முன்னால் வைத்து பண்டா-செல்வா உடன்படிக்கையைக் கிழித்து எறியுமாறு முழக்க மெழுப்பினார்கள்.



அவர்களது முழக்கத்திற்கும், வேண்டுகைகளுக்கும் அடி பணிந்த பண்டாரநாயக்கா, தந்தை செல்வநாயகத்துடன் செய்துகொண்ட பண்டா-செல்வா உடன்படிக்கையைக் கிழித்தெறிந்தார்.

இதனைத் தொடர்ந்து 1958ஆம் ஆண்டு மே மாதம் இருபத்துநான்கு, இருபத்தைந்து, இருபத்தாறு ஆகிய திகதிகளில் தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட மாநாட்டுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. வவுனியா மாநாட்டிற்கு வருகை தந்து கொண்டிருந்த மட்டு-அம்பாறையைச் சேர்ந்த தமிழரசுக் கட்சித் தொண்டர்கள் பயணம் செய்த தொடருந்துபொலநறுவை மாவட்டத்தில் கிங்குராகொட என்னும் தொடருந்து நிலையத்தில் வழிமறிக்கப்பட்டு அதிலிருந்த தொண்டர்கள் சிங்களக் காடையர்களால் தாக்கப்பட்டார்கள். இதே காலப்பகுதியில் நுவரெலியா மாநகரசபையின் மேயர் செனிவிரட்ண மட்டக்களப்புக்குச் சென்று கொண்டிருந்த போது மட்டக்களப்பில் வைத்து தனிப்பட்ட காரணங்களுக்காகக் கொல்லப்பட்டார். பிரதமராக இருந்த பண்டாரநாயக்கா இதைப் பெரிதுபடுத்தி இலங்கை வானொலியில் பரப்புரை செய்தார். இதைத் தொடர்ந்து தீவு முழுவதும் தமிழர்களுக்கு எதிரான இனக்கொலை வெடித்தது. தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். பல பெண்கள் பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்டார்கள். தமிழ் மக்களது சொத்துக்கள் சூறையாடப்பட்டன. பாணந்துறையில் சிறீ கதிர் வேலாயுத சுவாமி கோயிற் குருக்கள் ஆலயத்திற்குள் வைத்து உயிரோடு கொழுத்தப்பட்டார். பொலநறுவை அரசினர் வைத்தியசாலையில் சிங்கள மக்களுக்குச் சிகிச்சை அளித்த தமிழ்த் தாதியான பாலிப்போடி என்பவரின் மனைவி பாலியல் வல்லுறவிற்கு உள்ளாக்கப்பட்டார்.

இவ்வளவும் நடந்தும் பண்டாரநாயக்காவினுடைய அரசு அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தவோ அல்லது ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தவோ இல்லை. தமிழர்கள் தாக்கப்படுவதாக புகார் செய்யப்பட்டபோதும் பண்டாரநாயக்கா தமிழர்கள் பட்டு அனுபவிக்கட்டும் என்று கூறினார். இந்த இனக்கொலையின் போது தமிழ் மக்களின் பல வீடுகள் தீ வைத்துக் கொழுத்தப்பட்டன. பல தமிழ்க் குழந்தைகள் கொதிக்கும் தாரில் போடப்பட்டார்கள். மேலும் இக்கட்டத்தில் இலங்கையில் தங்கியிருந்த பிரபல ஆங்கில நாளேட்டாளரான டாசி வித்தாச்சி அவர்கள், பண்டாரநாயக்கா அரசினால் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்ட பின் தனது தாய் நாட்டிற்குச் சென்று "அவசரகாலச் சட்டம் ஐம்பத்தெட்டு" என்ற நூலை எழுதி வெளியிட்டார். இன்று இந்நூல் உலகப் புகழ் பெற்ற நூலாகக் கருதப்படுகின்றது.

இக்காலத்தில் எல்லாமாக முன்நூறுக்கும் மேற்பட்ட தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக அக்காலகட்டத்தில் வெளியான நாளேடுகள் வாயிலாக அறிய முடிகின்றது. பல நூற்றுக்கணக்கான மக்கள் வெட்டி அங்கவீனப்படுத்தப்பட்டார்கள். தமிழ் மக்களது சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டன, அவர்களது உடைமைகள் தீவைத்து எரிக்கப்பட்டன. இக்காலகட்டம் பற்றி எத்தகைய விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை. பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு எத்தகைய நிவாரணமோ நட்ட ஈடோ வழங்கப்படவில்லை.

- வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகம்

பகிரங்கக் கடிதம்

நிச்மண்ட்கில்
கனடா.
1-4-2015

திரு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கட்கு.

அண்மையில் ஸ்காபுறோவில் "மாற்றத்திற்கான குரல்" என்ற பெயரில் நிகழ்ந்த கூட்டம் ஒன்றே இக் கடிதத்தைத் தங்களுக்கு எழுத என்னைத் தூண்டியது. அத்தோடு தங்கள் தாத்தா - தந்தை - தாங்களென நடத்திவரும் பரம்பரை அரசியல் செயற்பாடுகளை தொடர்ந்து அவதானித்து வந்ததாலும் தங்களிடம் பேச வேண்டுமென்ற ஆர்வம் எனக்கு தொடர்ந்து இருந்து வந்தது.

விடயத்துக்கு வருகிறேன். "மாற்றத்துக்கான குரல்" தங்களைத் தனியான ஒரு அமைப்பாக காட்டிக்கொள்ள எத்தனித்தாலும் அது தங்களின் குரல்தான் என்பதை அதன் பட்டவர்த்தனமான உங்களுக்கான கோரிக்கைகள் காட்டிக்கொடுக்கின்றன. தங்களை ரிஎன்ஏ யில் இணைத்து இரண்டு பாராளுமன்ற ஆசனங்களுக்குப் போட்டியிடுவதற்கான இடம் கொடுக்க வேண்டுமென்றும். இல்லையேல் ரிஎன்ஏயை அம்பலப்படுத்தி புதுக் கூட்டணி அமைக்கப்போவதாகவும் எச்சரிக்கிறார்கள். நல்லது.

இதில் எனக்கு எந்தக் காய்தல் உவத்தலும் இல்லை. ஆனால் நெருடுவதென்னவென்றால். மக்களுக்கு சரியான தலைமை இல்லையென்றால் அதை உருவாக்க முனைவது வேறு. ஆசனம் இல்லையென்றால் அம்பலப்படுத்துவதற்காக ஒரு கட்சி தொடங்குவது வேறு. மற்றப்படி கட்சி. கூட்டணி என்று எதைத் தொடங்குவதும் தங்கள் சுதந்திரம். பிரச்சினை என்னவென்றால் நீங்கள் என்ன மார்க்கத்தை முன்வைக்கிறீர்கள் என்பதே.

நீங்கள் ஆர்ப்பாட்டங்களைத் தூண்டுகிறீர்கள். தீவிரமான கோரிக்கைகளை முன்வைக்கிறீர்கள். புதிய அரசாங்கத்துடன் கடும் போக்கை மேற்கொள்கிறீர்கள். தமிழர் தரப்பில் அரசாங்கத்தோடும் சர்வதேசத்தோடும் பேசுகின்ற பொறுப்பைக் கொண்டிருக்கும் ரிஎன்ஏயை சோரம்போகிறார்களென விமர்சிக்கிறீர்கள். ஒன்றுமே தப்பில்லை. ஆனால் இவற்றை வெறும் பாராளுமன்ற ஆசனங்களைப் பெறுவதற்கான தந்திரோபாய வழிமுறையாக கையாளாது. உண்மையான மக்கள் விடுதலைக்கான போராட்டமாக முன்னெடுத்துச் செல்ல முடியுமானால் எதுவுமே தப்பல்ல. தமிழ்நாட்டில். கருணாநிதி ஆளும்போது ஜெயலலிதா. பல தீவிரமான கோஷங்களுடன் மேடைப் பேச்சுக்கள் நடத்தி அவர் எதையுமே செய்யாதிருக்கிறாரெனச் சாடுவார். பின்னர் அவரே ஆட்சிக்கு வந்தபிறகு அவற்றையிட்டு எதுவும் செய்யமாட்டார். இப்போது கருணாநிதி அவரை வெளுத்து வாங்குகிறார். பொறுப்பில் இல்லாதிருக்கும்போது எத்தனை தீவிரத்தையும் பேசலாம். ஏனெனில் பேசியவற்றை செய்து காட்டவேண்டிய தேவை அப்போது இருக்காது. பதவியைப் பிடிக்கும் நோக்கம் மட்டுமே இருக்கும். உங்கள் கோஷங்கள் மட்டுமே தீர்வுகளைப் பெற்றுத்தராது. உங்கள் கோஷங்களைச் சமாளிக்க உங்களுக்கு ஆசனங்கள் தந்தாலும். நீங்கள் அங்கு போனதும் உங்களுக்கு அஞ்சி எல்லாவற்றையும் அள்ளித் தரப்போகிறார்களா என்ன? கோஷத்தை நம்பி வாக்குப்போட்ட நாம் எப்போதும் வெற்றுக் கோப்பையுடன்தானே நின்றோம்?

உங்களுக்கான சின்னதோர் சோதனை இதுதான். பாராளுமன்றத்திலோ எந்த அரசியல் சபையிலோ ஆசனங்கள் ஏதும் வேண்டாமென்றுவிட்டு. உங்கள் போராட்டத்தை மக்கள் போராட்டமாக முன்னெடுக்க உங்களால் முடியுமா? அப்படியானால் உங்களுக்கான தெளிவான அரசியல் இலக்குகளை முன்வைத்து. அவற்றை வென்றெடுப்பதற்கான மார்க்கத்தை வகுத்து. அவ் இலக்கை எய்த முடியும் என்ற நம்பிக்கையை மக்களுக்கு ஊட்டி. அதற்குத் தலைமை தாங்கி முன்னெடுத்துச் செல்லுங்கள். இப்போது இதுவரை நிகழ்ந்த மக்கள் போராட்டங்களதும். ஆயுதப் போராட்டங்களதும் படிப்பினைகளிலிருந்துதான் நீங்கள் தொடங்கவேண்டியிருக்கும். அவை யாவற்றாலும் இத்தனை உயிரிழப்பின் பின்னும் பெற முடியாததை. எப்படிப் பெறப்போகிறீர்கள் என்று நீங்கள் சொல்லியாகவேண்டியிருக்கும். இன்று நொந்து நொடிந்துபோயிருக்கும் எமது சமுதாயத்தை வெறும் வார்த்தை ஜாலங்களால் உசுப்பேற்றி. மீண்டும் பேரழிவொன்றுக்குத் தள்ள இது வெறும் விளையாட்டல்ல. எதைச் சொல்கிறோமோ அதை முதலில் நாமே செய்ய முன்வர வேண்டும். செய்வீர்களா?

உங்கள் உண்மையுள்ள
மகேந்திரன்



முட்டாள் கூண்டு

உங்களுக்கு இந்தப் பாட்டு தெரியுமா?

"புத்திசாலிகள் நாங்கள் புத்திசாலிகள்..."

அந்தப் பாட்டு?

என்ன . தெரியுமா? எங்க மீதி வரிகள சொல்லுங்க? ஆ .. தெரியேல்ல பார்த்தீங்களா?


சரி . எதுக்கு சொல்லுறேனெண்டால் கடவுள் எங்கள படைத்தபோது முட்டாள்களை ஒரு கூண்டுக்குள்ளேயும் புத்திசாலிகளை இன்னொரு கூண்டுக்குள்ளேயும் போட்டு அனுப்பிவைத்தார். அப்போ. நாம் பூமில போய் மிக்ஸ் ஸாயின பிறகு அடையாளம் காணுறது எப்படி எண்டு கேட்டதற்கு புத்திசாலிகளுக்கு மட்டும் ஒரு பாட்டைச் சொல்லிக் கொடுத்தார். அதுதான் அந்தப் பாட்டு.

ஆமா. உங்களுக்கு அந்தப் பாட்டு தெரியாதில்ல! நீங்கள் எந்தக்கூண்டு எண்டு புரிஞ்சிட்டுது!

என்ன . எங்களப் பாடிக்காட்டச் சொல்றீங்களா? கெக்கே! அந்தப் பாட்டைத் தெரிஞ்சுகொண்டு நீங்களும் புத்திசாலியெண்டு காட்டவா? அந்தப் பாச்சா பலிக்காதுங்க!

கணிதத்தின் வரலாறு





ஒருவன் இந்த சமூகத்தோடு படிப்பறிவு இல்லாமலும் ஒன்றி வாழ முடியும். ஆனால் அவனுக்கு சிறிதளவாது கணித அறிவு இருக்க வேண்டும். அப்போது தான் அவனால் இந்த சமூகத்தில் வாழ முடியும். பண்டை காலத்தில் வாழ்ந்த புலவர்கள் கூட தங்கள் பாடல்களை ஒரு குறிப்பிட்ட கணித விதிப்படி தான் அமைத்தனர். உதாரணத்திற்கு திருக்குறளையே கூறலாம். இத்தகைய கணிதம் எப்படி தோன்றி வளர்ந்து இன்றைய கணிப்பொறி வரை வளர்ந்தது என்பதை பார்ப்போம்.

ஆதிகாலத்தில் வாழ்ந்த மக்கள் பொருள்களை ஒப்பிட அறிந்தபோதே கணிதம் வளர தொடங்கிவிட்டது. ஆதி மக்கள் தங்கள் கால்நடைகளையும், மற்ற பொருட்களையும் கணக்கிடுவதற்கு கற்கள், குச்சிகள் போன்றவற்றை பயன்படுத்தினர். ஆதி மக்கள் தங்களின் உற்பத்தி பொருட்களை பரிமாற்றிக்கொண்டனர். இதனால் பண்டமாற்று முறை நடைமுறைக்கு வந்தது. இதனால் பொருட்களை அளந்து கொடுக்க தொடங்கினர்.

அப்போது தோன்றியது தான் முகத்தல் அளவைகள். இதற்கு அடுத்து சேர், அழாக்கு, படி, முழம் போன்ற அளவைகள் கண்டுபிடிக்கப்பட்டன.



இதன் பிறகு மக்களின் வாழ்க்கைத்தரம் படிப்படியாக உயர ஆரம்பித்தது. இதையடுத்து பல அறிஞர் பெருமக்கள் தோன்றி பல கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்தனர். ஆரம்ப காலத்தில் எண்ணிக்கையை கணக்கிட அறிந்த மக்கள் பின்னர் கூட்டல், கழித்தல், வகுத்தல், பெருக்கல் போன்றவற்றை பொருள்களையும், கற்களையும், குச்சிகளையும் கொண்டு செய்ய ஆரம்பித்தனர். இந்த காலகட்டத்தில் சீனர்கள் கம்பிகளை கொண்ட ஒரு மணிச்சட்டத்தை உருவாக்கி அதன் மூலம் கூட்டல், கழித்தல், வகுத்தல், பெருக்கல் போன்றவற்றை செய்தனர்.

> *கணிதத்தில் சிறந்தவர்கள் ஏனைய துறைகளிலும் சிறந்தவர்களாக விளங்குவது ஏன் தெரியுமா? சதாரணமாக நாம் வடிவங்களின் உதவியுடனேயே சிந்திக்கிறோம். ஆனால் கணிதமானது வடிவமற்றே சிந்திக்கின்ற முன்னேறிய நிலைக்கு எம் மூளையைப் பயிற்றுவித்து விடுகிறது. அதனால் ஏனைய துறை களை கிரகித்துக்கொள்வது இலகுவாகிவிடுகிறது.*

இவர்கள் உருவாக்கிய சட்டத்தில் கம்பிக்கு 7 மணிகள் வீதம் இருந்தன. இதற்கு அபகஸ் என்று பெயர் வந்தது. இதையே இரு மணிகளை குறைத்து ஜப்பானியர்கள் சோரபான் என்று பெயரிட்டனர். இவ்வாறு கணிதவியலின் அடிப்படை செயலிகள் அறிமுகமாயின. இன்றைய கணிப்பொறி பிறக்க இந்த மணிச்சட்டமே அடிப்படையாக இருந்தது என்று அறியப்பட்டுள்ளது. பின்னர் ஜான் நேப்பியர் என்ற அறிஞர் மேலும் சில மாற்றங்களை செய்து ஒன்பது மணிச்சட்டம் கொண்டு ஒரு கருவியை அமைத்தார். இதற்கு நேப்பியர் சட்டங்கள் என பெயரிட்டனர். இதன் மூலம் வர்க்க மூலம் வரை கணக்கி முடிந்தது. இவரின் இந்த அரிய கண்டுபிடிப்புதான் சில மாற்றங்களுடன் இன்று நாம் மடக்கை என்ற பெயரை பயன்படுத்துகிறோம்.

காலத்தை -குறிப்பாக பழங்காலத்தில் மணல் சாடிகளை பயன்படுத்தி மணல் செரிந்த அளவை கொண்டு நேரத்தை கணக்கிட்டனர். பின்னர் மண லுக்குப் பதில் நீரை பயன்படுத்தினர். இக்காலகட்டத்தில் வானவியல் பற்றி கலிலியோ, ஆர்யபட்டர் என பலர் பல ஆராய்ச்சிகளைச் செய்து பூமி தன்னைத்தானே சுற்றிக்கொள்ள 23 மணி 56 நிமிடம் 4.091 நொடி என்று கூறினார். அவை பின்னர் விஞ்ஞானி பூர்வமாக நிருபிக்கப்பட்டு அதுவே ஒரு நாளைக்கு 24 மணி நேரம் எனக் குறிக்கப்பட்டது.

இதிகாசங்களில் வெறுமை அல்லது வெற் றிடம் என்பதை குறிக்க சூன்யம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. பின்னர் சுன்னம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. இதையே கணித மேதைகள் மதிப்பில்லாதவைகளுக்கு புள்ளியை பயன்படுத்தினர். பின்னர் குழப்பத்தை தவிர்க்க புள்ளியை சுற்றி வட்டமிட்டனர். பின்பு, வட்டம் என்று பயன்படுத்தினர். இந்த சூன்யம் என்ற சொல் வெவ்வேறு மொழிகளில் மாறி பின்னர் பிரஞ்சு மொழி ஜ/ரோ என்று பெயரிடப்பட்டு அதுவே நிலைத்துவிட்டது. இதை கண்டுபிடித்து உலகிற்கு வழங்கிய பெருமை இந்தியாவையே சேரும். இதை வழங்கியர் ஒரு பெயர் அறியப்படாத இந்தியர் என்று அறியப்பட்டுள்ளது. இந்த 0 தான் இன்று கணிப்பொறியில் தலையாய எண்ணாக உள்ளது.

பிளாட்டோ என்ற தத்துவ மேதை கிமு 387ம் ஆண்டு ஐரோப்பாவில் முதல் பல்கலைக்கழகமாகிய ஏதென்ஸ் அகாடமியில் வடிவங்களை அளக்க சில கருவிகளை உருவாக்கினர். அவர் உருவாக்கியவை தான் அளவு கோள், காம்பஸ் போன்றவை. அவை தான் இன்று நடைமுறையில் உள்ளது. பல கணித மேதைகள் உருவாக்கிய அடிப்படை தகவல்களைக் கொண்டு கோப் நிக்கஸ் என்ற போலந்து நாட்டு அறிஞர் கோணகணிதம் என்ற பிரிவை வழங்கினர். பின்னர் இவரின் கண்டுபிடிப்புகளை பயன்படுத்தி கலிலியோ போன்ற வானவியல் அறிஞர்கள் அண்டத்தை பற்றி பல உண்மைகளை கண்டறிந்தனர். இயக்கம், விசை போன்ற உண்மைகளை கண்டறிய இவரின் கோணகணிதம் தான் பயன்பட்டது.

உங்களின் சகல விதமான மோட்கேஜ் தேவைகளையும் சிறந்த முறையில் பூர்த்தி செய்யப்படும்!



BonaFide
Mortgage Solutions Inc.

SUREN NATHAN
MORTGAGE BROKER

416 436 1111

7 Eastvale Drive, Unit 203, Markham, Ontario L3S-4N8
Office: 416 548 7475 | Fax: 416-548-7496 | Email: suren@bmsic.com



கிறிஸ்தவமும் இந்துவும் ஒன்றா?

சென்ற இதழ் தொடர்ச்சி


ந. முத்துமோகன்



கீழை நாட்டு மதங்களின் ஆராய்ச்சியில் செர்மானியர்களின் நுழைவு வரலாற்றுச் சிறப்பு (வரலாற்றுச் சிக்கல்) மிக்கது. வாழ்க்கையில், நடை முறையில் செய்ய இயலாமல் போனதை செர்மானியர்கள், அவர்களது தத்துவத்தில் செய்தார்கள் என்று கார்ல் மார்க்ஸ் அவரது காலத்தில் சொன்னார். கீழை நாடுகள் விடயத்திலும் அப்படித்தான் நடந்தது. ஆங்கிலேயர்கள் உலகம் முழுவதையும் தமது ஆட்சியின் கீழ் கொண்டுவந்தார்கள். செர்மானியர்களால் அதனைச் செய்ய முடியவில்லை, எனவே உலக வரலாற்றுக்குத் தாமே முதல்வர்கள் என்பது போல ஒரு கோட்பாட்டை உருவாக்கினார்கள். சமஸ்கிருத மொழி குறித்த சில கண்டுபிடிப்புகள் செர்மானியர்களின் வரலாற்றுக் கொள்கைக்கு முகாந்திரமாக அமைந்தன. எப்படி? முதலில், சமஸ்கிருத மொழி கிரேக்கம், லத்தீன், யூதர்களின் ஹிப்ரூ போன்ற மொழிகளை விடப் பழமையானது என்று செர்மானிய மொழியியல் நிறுவனம் ஒன்றில் "கண்டுபிடித்தார்கள்". இரண்டாவதாக, சமஸ்கிருத மொழி ஐரோப்பிய மொழிகள் பலவற்றின் தாய் மொழி, எனவே அது பூர்வீகத்தில் ஓர் இந்தோ-ஐரோப்பிய மொழி என்று "நிறுவினார்கள்". மூன்றாவதாக, சமஸ்கிருத மொழி ஓர் ஆரிய மொழி என்றார்கள். இன்னும், ஐரோப்பிய மொழிகளுக் கிடையில் செர்மானிய மொழியே சமஸ்கிருதத்திற்கு மிகவும் நெருக்கமானது என்றும் "கண்டறிந்தார்கள்".

மொழி அடிப்படையில் இதுவரை பேசப்பட்ட விடயத்தை செர்மானியர்கள் அதன்பின் வரலாற்று ரீதியாகவும், சமய வரலாற்றுரீதியாகவும் (இன அரசியலாகவும்) பலப்படுத்தினார்கள். சமஸ்கிருத மொழியே உலகின் ஆகப் பழமையான மொழி என்று ஆகி விட்டதால், இறைச் செய்தி வரலாற்றில் முதலில் வழங்கப்பட்ட மொழி இந்த மொழியே என்று ஆகிவிடுகிறது. வேதங்களே முதல் இறைச் செய்திகளைக் கொண்ட ஆரிய நூல்களாகும். இந்த முடிவின்படி யூதர்களின் ஹிப்ரூவையோ, கத்தோலிக்கர்களின் லத்தீனையோ, கடவுளை அறியாத கிரேக்கத்தையோ இனி பற்றிப்பிடிக்க வேண்டியதில்லை. செர்மானியர்களின், இந்தோ-ஐரோப்பியர்களின் சொந்த மொழியான சமஸ்கிருதத்திலேயே இறைவன் முதலில் பேசினார். இறைவன் முதலில் பேசிய அந்த ஆரிய மொழியே உலக வரலாற்றின் மிகத் தூய்மையான புனித மொழி.

உலகின் மிகப்பழமையான மதம் வேத மதம். உலகின் மிகப் பழமையான தத்துவம் வேதாந்தம். இவை இரண்டுமே ஆன்மீகம் பேசுபவை. மதத்தையும் தத்துவத்தையும் பிரித்தறிய முடியாத ஓர் ஆன்மீகத் துவக்கத்தை உலகவரலாறு கொண்டுள்ளது. செர்மானிய அறிஞர் ஹெகலின் தத்துவம் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள்! அது ஆன்மாவில் தொடங்கி ஆன்மாவில் முழுமையடையும்! "பிதா, சுதன்" ஆகியோரைவிட, உயிர்த்தெழுந்த ஏசுவின் (உடலற்ற) பரிசுத்த ஆவியே சீர்திருத்த கிறித்தவர்களுக்கு அதிகம் நெருக்கமானது. அதுவே எல்லாம். அந்த தூய ஆவியின் செயல்பாடுகளைப் பற்றிப் பேசுவதுதான் ஆன்மீகம். கீழை நாடுகளில் அத்வைத வேதாந்தமும் பௌத்தமும் பரிசுத்த ஆவியின் இறையியல்கள் போல் தோற்ற மளிக்கும். செர்மானியர்கள் உலகையும் உலக வரலாற்றையும் கோட்பாட்டுரீதியாகக் கைப்பற்றி விட்டார்கள்!





இத்தாலிய மறுமலர்ச்சி, கிரேக்கத் தத்துவம், யூதர் களின் பழைய ஏற்பாடு போன்ற வரலாற்றுத் துவக்கங்களை செர்மானியர்கள் ஒரே தாவலில் தாண்டிக் குதித்து விட்டார்கள். நவீன ஐரோப்பாவின் பகுத்தறிவு, அறிவொளி இயக்கம், விஞ்ஞான அறிவுபோன்றவற்றையும் முறியடித்து விட்டார்கள். ஒரே கல்லில் எத்தனை மாங்காய்கள்!

> ஆனால் நமது நாடுகளின் தேசியவாதிகள் மொழிகளைவிட மதங்களையே அடிப்படையான அடையாளமாகக் கொண்டார்கள்...

கீழைநாட்டுத் தேசியவாதிகள்

காலனிய அறிவாளிகள், செர்மானிய கீழைத்தேய வாணர்கள் (Orientalists) ஆகியோரிடம் பாடம் படித்தவர்கள் நமது நாடுகளின் புதிய அறிவாளிகள். மரபுரீதியாகமேட்டுக்குடிகளாகவும் மேட்டிமைச் சாதியினராகவும் அமைந்து போனவர்கள். இவர்கள்தாம் நமது நாடுகளின் தேசியவாதிகளாக நமக்குக் கிடைத்தவர்கள். இந்த தேசியவாதிகளுக்கும் நமது நாடுகளின் சாதாரண விவசாயிகளுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்று அறிஞர்கள் எழுதுகிறார்கள்.

நமது நாடுகளின் அடித்தள விவசாயிகளைக் கண்டு நமது தேசியவாதிகள் எப்போதுமே அச்சப்படுவார்கள் என்றும் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். மரபான மேட்டிமை அந்தஸ்தை இழக்க விரும்பாத இவர்கள் மதங்களின் அடிப்படையிலேயே தேசியங்களை உருவாக்கி னார்கள்.

ஐரோப்பாவில் நீண்ட நெடிய இடைக்காலத்தில் நிலவிய (கிறித்தவ) மதத்தைப் பின்னுக்குத் தள்ளி, அந்தந்த நாடுகளின் மொழி அடிப்படையில் தேசியங்களை உருவாக்கினார்கள். அந்த தேசியங்கள் சமயச் சார்பற்ற தேசியங்களாகவும் இருக்க முடிந்தது. ஆனால் நமது நாடுகளின் தேசியவாதிகள் மொழிகளைவிட மதங்களையே அடிப்படையான அடையாளமாகக் கொண்டார்கள். அடித்தள மக்களிடமிருந்து இன்னும் போதுமான ஆதரவைத் திரட்ட முடியாத (திரட்ட விரும்பாத)

தேசியவாதிகள் மதங்களின் அடிப்படையில் தேசியங்களை உருவாக்கினார்கள். தேசியம் என்ற நவீன அடையாளம் உருவாகாமல் தவித்தபோது, அதன் இடைவெளிகளை இட்டு நிரப்ப மதம் தேவைப்பட்டது. தேசியம் என்பது ஒரு நவீன அரசியல் கொள்கை. ஒரே நேரத்தில் தேசிய உருவாக்கமும் நவீன மத உருவாக்கமும் இங்கே நடந்தன. அரசியலும் மதமும் இணைந்து செல்வது என ஒன்றையொன்று பற்றிப் பிடித்துக் கொண்டன. இதன் விளைவுகள் பாரதூரமானவை.

தேசியத்தை நமது காலத்தின் மதமாக மாற்று வோம் என சில தேசபக்தர்கள் கூறியதுண்டு. ஆனால் நடந்ததென்னவோ, மதங்களே தேசியங்களாக மாற்றப் பட்டன. இந்து தேசியம், பௌத்த தேசியம், நாட்டின் மொழி, நிலப்பரப்பு, தேசியம், மதம் இன்னும் கூடுதலாக அரசாங்கம் ஆகியவை பரஸ்பரம் ஒன்று படுத்தப்பட்டு, ஒன்றுக்கொன்று ஒத்தாசையாக உள்ளன. விலகுபவர்கள் வெளியேறவேண்டும். காலனி ஆட்சிக்காலத்திய எண்ணிக்கை அரசியல் போல தேசியத்திற்கும் எண்ணிக்கை அரசியல் தேவைப் படுகிறது. தேசியம் ஓர் ஒருமைவாதம், ஓரிறைக் கொள்கை போல. அதற்கு வேறுபாடுகளைப் பிடிக்காது. அது வேறுபாடுகளைச் சகிக்காது. அது வேறுபாடுகளைக் கொன்றுவிடவே செய்யும்.

கிறித்தவ மதத்தைப் பார்த்துப் பாவனை செய்து இந்து மதத்தையும் பௌத்த மதத்தையும் நாம் உண்டாக்கிக் கொண்டது போல ஐரோப்பியரைப் பார்த்துப் பாவனையாக நமது தேசியங்களையும் உருவாக்கிக் கொண்டோம். பாவிக்கப்பட்ட மதங்கள், பாவிக்கப்பட்ட தேசியங்கள். நமது மதங்களும் தேசியங்களும் உள்ளுக்குள்ளிருந்து வரவில்லை.

அவை முழுக்க நமக்கே சொந்தமானவை அல்ல. அவை வருவிக்கப்பட்டவை (Derivative Religions and Derivative Nationalisms), கைமாறி வந்தவை, போலச் செய்யப் பட்டவை, கலப்பு (Mimicry, Hybrid) என்றுஓர்அறிஞர்எழுதுகிறார். மதங்கள்இறைவனுக்கு எதிராக ஒரு சாத்தானைக் காட்டுவதைப்போல, தேசியங்களும் தேசவிரோதிகளை உற்பத்தி செய்து காட்டுகின்றன. ஆனால் கால ஓட்டத்தில் எதிரிகள் மாற்றப்பட்ட கதைகளெல்லாம் உண்டு. காலனி ஆட்சியாளர்களையும் கிறித்தவ மதத்தையும் நம்மூர் மதங்கள் ஒரு காலத்தில் எதிரிகளாகச் சித்தரித்ததுண்டு. ஆனால் கிறித்தவ எதிரிகள் மறைந்து போய், இந்தியா போன்ற நாடுகளில் முஸ்லீம்கள் இந்துத்துவத்தின் முதல் எதிரிகளாக மாற்றப்பட்டு விட்டார்கள். எப்போதுமே கிறித்தவர்கள் தாம் எதிரிகளாக இருக்க வேண்டுமென்று நான் கருத வில்லை. ஆனால், உலக அரசியலில் மேற்கு நாடுகளின் எதிரிகள் என்ற முத்திரையைப் பெற்ற முஸ்லீம்களே எப்படி கீழை நாட்டவருக்கும் (முஸ்லீம்களும் கீழை நாட்டவர்தான்) எதிரிகளானார்கள்? என்பது ஓர் அரசியல் விசித்திரம். காலனி ஆட்சியாளரை நோக்கி வெளிமுகமாக உருவான எதிர்ப்பு, எப்போது, ஏன் உள்முகமாகத் திரும்பியது? என்பது ஒரு சிக்கலான கேள்வி. வெவ்வேறு நாடுகளில் வெளிப்பட்ட வெளிமுகமான எதிர்ப்புகள் மிக விரைவில் உள்முகமாக மாற்றப்பட்டு நாம் உள்ளுக்குள்ளேயே ஒருவரை ஒருவர் கொன்றழிப்பவர்களாக மாற்றப்பட்டிருக்கிறோம். இது எப்படி? சாமுவேல் ஹன்டிங்டன் முன்வைத்த நாகரிகங் களின் மோதல் (மதங்களின் மோதல்) என்ற வேலைத் திட்டத்தை நோக்கி உலக நாடுகள் வேகவேகமாக வழிநடத்தப்படுவது போன்ற தோற்றம் கிடைக்கிறது. மதங்களின் மோதல் என்ற வேலைத்திட்டம் நடை முறைக்கு வரும்போது மூன்றாம் உலக நாடுகள் ஒவ்வொன்றுமே போர்க்களமாக மாறும் நிலையைச் சந்திக்க வேண்டி வரும்.

கடைசியாக, சில கேள்விகளை முன்வைத்து, இந்த விவாதத்தை இப்போதைக்கு ஒரு முடிவுக்குக் கொண்டு வருவோம். காலனி ஆட்சியாளர்களை எதிர்த்து உருவான நமது நாடுகளின் தேசியவாதிகள் ஐரோப்பிய முன் மாதிரியிலான, ஒற்றை வடிவிலான மதத்தையும் தேசியத்தையும் ஏன் சுவீகரித்துக் கொண்டார்கள்? மிகப் பழமையான, மிகச் செழுமையான தமது சொந்த மதங்களின் ஆற்றல்களை மீட்டெடுக்க அவர்கள் ஏன் முயற்சி செய்யவில்லை? தமது சொந்த நாடுகளின், சொந்தக் கலாச்சாரத்தின் அனுபவங்களிலிருந்து ஒரு கோட்பாட்டை அவர்களால் ஏன் உருவாக்க முடியாமல் போனது? பாவனை, வருவித்தல், கைமாற்றிப் பெறுதல், கலப்பு வடிவம் போன்ற பம்மாத்தான நிலைப்பாடுகளை அவர்கள் ஏன் தேர்ந்தெடுத்தார்கள்? நாட்டு விடுதலைக்குப் பின்னரும் மேலைநாட்டவரின் தொங்கு சதைகளாக இவர்கள் தொடர்ந்து தொழிற்பட்டு வருவது ஏன்? காலனி ஆட்சியின் தொடர்ச்சிதான் இப்போதைய ஆட்சிகளே தவிர, புதிதாக, சொந்தமாக இந்த ஆட்சியாளர்களிடம் எதுவும் மிச்சமில்லை என்பதைத்தானே இது குறிக்கிறது! இந்துத்துவம் என்பது உள்ளூர்ச் சரக்கல்ல, அது ஒரு வெளிநாட்டுச் சரக்கு என்பது புரிகிறதா? - முற்றும்!

நுணாவில் குளத்து தாமரைப்பூச்சாமியார்...!



என்னூரில் ஒரு வயோதிபர்
சிறு குழந்தைக்கு வைக்கப்படும் நெத்திப்பொட்டின்
நிறத்திலொரு தேகம்
இளக்கயிறும் அவர் முடியும் ஒரே மாதிரி
உருண்டு திரண்டு
நீண்டுதொங்கிய தலைமுடி
கறுப்பு நிறத்திலொரு ஆதிசிவன்

அவர் பிறவிப்பயன் யாதெனில்
பனிபடர்ந்த நுணாவில் குளத்தில்
அதிகாலை சூட்டை
முறித்தெடுக்கும் சில்லிட்ட குளிர் நீரில்
தாமரைப் பூப்பறித்து முருகனுக்கு சூட்டுவது.

இடுப்பிலே கட்டிய ஒரு முளவேட்டி தவிர
வேறெதுவும் சொத்துமில்லை
ஏனென்று கேட்க ஏதொரு சொந்தமில்லை

சுவாமிக்கடன் முடித்து வீட்டுப்பக்கம் வருமிவர்
ஆவி பறக்கின்ற வென்நீரோ
இனிப்பிருக்கோ இல்லையோ என
நாவே அறியாத் தேனீரோ
பருகிப்போவார்

ஞாபகம் சரியாய் இல்லை
ஏதோ ஒரு நாளில் விமானக்குண்டுக்கு
விடைபெற்றுப்போனார்

ஒரு முளத்துண்டுக்கே ஆசைப்படாச் சாதுக்கு
எதனைக்கேட்டதனால் வந்திருக்கும் சாவு
பிஞ்சுப்பெடியெனுக்கு
விளங்கவில்லை அப்போது
பிரபஞ்சத்தின் முழுமை இலாது
வாழ்கையின் முதிர்வு வாராது
யாக்கை பறிபோகுமோ

வருசங்கள் எத்தனை வழிந்த போதிலும்
விழியில் வழிந்தொழுகிறது
வென்னீர்க்குளம்

போர் தின்ற சனங்கள்
பிரிந்த நாய்
விடை பெற்றுப்போன அப்பா
இப்படியே இப்படியே
நினைவுகளைக் கொழுத்தியெறிய
தெரியாமல் போகிறதே...!
– மட்டுவில் ஞானக்குமாரன்

PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS

$559,900

Whitby - Country Lane/Rossland
4 Rooms, 3 Washrooms
Basement finished

$569,900

Pickering - Dixie/Finch
4 Rooms, 3 Washrooms

$575,000

Ajax - Taunton/Westney
4 Rooms, 3 Washrooms

$578,800

Pickering - Whites/Finch
4+1 Rooms, 4 Washrooms
Basement finished

$579,900

Ajax - Westney/Lake Driveway
3 Rooms, 3 Washrooms

$595,000

Ajax - Rotherglen/Hwy#2
4+3 Rooms, 5 Washrooms

$590,000

Pickering - Brock/Dellbrock
4+2 Rooms, 4 Washrooms

$599,000

Whitby - Nichol
4+2 Rooms, 4 Washrooms
Basement finished

$599,900

Whitby - Taunton/Garden
4 Rooms, 5 Washrooms
Basement finished

$609,900

Oshawa - Grandview St N/Conlin Rd E
4+1 Rooms, 4 Washrooms

$610,000

Ajax - Westney/Rossland
4 Rooms, 3 Washrooms

$619,000

Pickering - Woodview/Twyn Rivers
3 Rooms, 4 Washrooms
Basement finished

$619,000

Pickering - Brock/Dellbrook
4+1 Rooms, 4 Washrooms

$618,000

Ajax - Salem/Rossland
4 Rooms, 3 Washrooms

$639,900

Ajax - Taunton/Salem
4 Rooms, 4 Washrooms
Basement finished

$648,900

Ajax - Harwood/Taunton
4 Rooms, 4 Washrooms



HomeLife/Future Realty Inc., Brokerage
#205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
Bus : 905 201 9977 / Fax: 905 201 9229
Independently Owned and Operated, REALTOR * Sales Representative

HOMELIFE HIGHER STANDARDS

Uthayan Sivarajah 416 301 5555
Sugan Sivarajah 905 201 0066
Raj Sivarajah 416 843 3333
SivaKumar Sivarajah 416 453 7777



உக்ரேன்

நேட்டோ - ஐரோப்பிய கூட்டணியால் ரஷ்யாவிற்கு எதிரான பிரகடனப்படுத்தப்படாத யுத்தத்தின் மூதற்களம்

உக்ரேனை முன்னிறுத்தி ரஷ்யா மீது நிழல் யுத்தம் நடத்தி வரும் நேட்டோ கூட்டணி தற்போது உக்ரேனுக்கு படைகளை நேரடியாக அனுப்பி ரஷ்யாவிற்கு எதிரான யுத்தத்திற்கு முஸ்தீபு போடும் நிகழ்வுகள் அவசரமாக முன் நகர்த்திச் செயல்படுகின்றவோ என்று சந்தேகிக்கும்படியாக அண்மைக்காலச் செயற்பாடுகளைக் காணக் கூடியதாக இருக்கின்றன.

சோவியத் யூனியனின் வலிந்த உடைவுக்கு பின்பு சோவியத் யூனியனில் இருந்து உருவான நாடுகளில் ரஷ்யாவிற்கு அடுத்தபடியாக பலம் மிக்க, வளம் மிக்க நாடாக உருவெடுத்தது உக்ரேன் நாடாகும். முன்னாள் சோவியத் யூனியனின் வெளிநாட்டு அமைச்சர் ஷிவ நாட்சேவ் இன் தலைமைத்துவத்துடன் ரஷ்யாவுடன் நெருங்கிய உறவை வைத்துக் கொண்டு வெற்றி நடைபோட புறப்பட்ட நாடு என்றால் அது உக்ரேனுக்கே பொருந்தும்.

சோவியத் யூனியனின் வலிந்த உடைப்பின் பின்னர் தன்னிச்சையாக மூன்றாம் உலக நாடுகள் மீது தனது மேலாண்மையைச் செலுத்தலாம். மறுப்பவர்கள் மீது மனித உரிமை மீறல், ஜனநாயக மறுப்பு என்று கூறிக்கொண்டு ஒருதலைப்பட்சமாக தனது வலிந்த யுத்தங்களை நாடுகள் மீது நடாத்தலாம் என்று கற்பனையில் வீழ்ந்த நேட்டோ கூட்டணிக்கு ஐரோப்பிய யூனியனின் தோற்றம் சற்று இடைஞ்சல் போல் ஆரம்பத்தில் தோற்றம் அளித்தது என்னமோ உண்மைதான்.



ஆனால் 3ம் உலக நாடுகளின் வளங்களை கொள்ளையிடுவதில் நாமும் உங்கள் பங்காளிதான் என்ற ஐரோப்பிய கூட்டமைப்பு தனது செயற்பாடுகள் மூலம் நிரூபிக்க தொடங்கியதும் நேட்டோ கூட்டணி தனது நேசக் கரங்களை ஐரோப்பிய யூனியனுடன் இணைத்துக் கொண்டது. இதன் பின்பே எண்ணை வள நாடுகளான மத்திய கிழக்கு நாடுகள் மீதும், இரட்டைக் கோபுரத்தை காரணம் காட்டி ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதல் என்ற கைகோர்த்த யுத்தங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

தமது ஐரோப்பிய பிராந்தியத்தில் தமக்கு அருகில் இருக்கும் ஒரு நாடு தமது இந்த வலிந்த யுத்தங்களைப் பற்றி கேள்வி எழுப்புவதா என்பதை நேரடியாக முகம் கொடுக்க முடியாத நேட்டோ - ஐரோப்பிய கூட்டணிகள் கண்டுபிடித்த புதிய எதிர்ப்பு வலைப் பின்னல்தான் உக்ரேனில் இவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஆட்சி மாற்றம் ஆகும்.

ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட உக்ரேன் அரசை உள்ளூர் கிளர்ச்சியாளர்களை உருவாக்கி இவர்களுக்கு பணமும், ஆயுதமும், ஆலோசனையும் கொடுத்து ஊக்குவித்து அரசு அதிகாரத்தை வன்முறை மூலம் மாற்றிவிட்டு தமக்கு ஆதரவான பொம்மை அரசை முதலில் நிறுவினர். இவ்வாறான ஜனநாயக விரோதச் செயற்பாட்டை செய்தவர்களை உக்ரேன் மக்கள் எதிர்த்து வீதியில் இறங்கிப் போராடினார்கள். இவர்களுக்கு எதிராக அமெரிக்க கூட்டமைப்பின் ஆலோசனைப்படி பிரகடனப்படுத்தாத யுத்தத்தை உக்ரேன் பொம்மை அரசு மூலம் ஏவிவிட்டு உள்ளூர் யுத்தம் ஒன்றை ஏற்படுத்தினர் இவர்கள். ஆயுதங்களை ஆயுதங்களால் சந்திக்கப் புறப்பட்ட இந்த கூட்டமைப்பிற்கு எதிரான போராட்டம் வலுவடைந்த நிலையில் இந்த போராளிகளுக்கு ரஷ்யா பின்புலமாக இருந்து செயற்படுகின்றது என்ற குற்றச் சாட்டுடன் களம் இறங்கியுள்ளது நேட்டோ- ஐரோப்பிய யூனியன் கூட்டணி.

தனது பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிக்கக் கட்டம் கட்டி நிற்கும் செயற்பாடுகளை பார்த்துக் கொண்டு ரஷ்யா இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. இதன் தொடர்ச்சியாக உக்ரேனின் ஒரு பகுதியாக இருந்த கிறைமியா பிரிந்து ரஷ்யாவுடன் இணைவதற்கு தேவையான பௌதிக, புவியியல் காரணங்களை ரஷ்யா தனது கவனத்தில் எடுத்து செயற்பட்டது. இதனை எவ்வகையிலும் தடுத்து நிறுத்த முடியாமல் போன





நேட்டோ கூட்டணி உக்ரேனை முன்னிறுத்திப் புதிய தலையீடுகளை ரஷ்யா மீது ஏற்படுத்தியிருக்கின்றனர்.

வழமை போல் பொருளாதாரத் தடை என்று பட்டினிச் சாவை ஏற்படுத்தும் பிரகடனப்படுத்தாத யுத்தம் ஒன்றை திணித்துள்ளனர் ரஷ்யாவிற்கு எதிராக. இந்த ஆரம்ப பொருளாதார தடைகளினால் தமது எண்ணங்களை நிறைவேற்ற முடியாத அமெரிக்க கூட்டணி ரஷ்யாவிற்கு மேலும் பொருளாதார நெருக்கடியை ஏறபடுத்தும் முகமாக உலக சந்தையில் பெற்றோலியப் பொருட்களின் விலையைக் குறைத்து ரஷ்யக் பொருளாதாரத்திற்கு பெரும் அடியினைக் கொடுக்க முற்பட்டனர்.

சிவா மு. ஈஸ்வரமூர்த்தி

இது கண்ணாடி வீட்டில் இருந்து கொண்டு கல்லெறிவது போன்ற செயற்பாட்டை அமெரிக்க கூட்டணிக்கு ஏற்படுத்தியது. இவ் விலைக்குறைப்பு ரஷ்யாவை அதிகம் பாதித்தது என்பதைவிட எண்ணை வியாபாரத்தில் ஏகபோகம் காட்ட முயலும் அமெரிக்கா, அதன் நேசநாடுகளின் பொருளாதாரத்திலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது. ரஷ்யாவிற்கு எதிரான இந்த எண்ணை யுத்தத்திலும் கையைச் சுட்டுக் கொண்ட அமெரிக்க கூட்டணி தற்போது நேரடி யுத்தம் ஒன்றை ரஷ்யாவிற்கு எதிராகத் தொடங்கத் திட்டமிட்டது போன்ற நகர்வில் ஈடுபட்டு வருகின்றது.

இதுவரை காலமும் உக்ரேனில் அமைக்கப்பட்ட தனது பொம்மை அரசிற்கு ஆயுதம், பணம், தொழிநுட்ப உதவிகளை வழங்கி வந்த நேட்டோ கூட்டணி தற்போது நேரடியாக படையணிகளை உக்ரேன் நாட்டிற்குள் அனுப்பி உக்ரேன் அரசிற்கு எதிராக போராடும் போராளிகளை ஒடுக்குகின்றேன் என்று புறப்பட்டுள்ளது. பழைய ஹிட்லரின் செயற்பாட்டை நினைவுபடுத்தும் செயற்பாட்டை இவர்கள் தற்போது ஐரோப்பாவில் கொண்டு வருவதற்கு முயல்வதாக மக்களால் உணரப்படும் வகையில் நகர்வுகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. அண்மையில் அமெரிக்க செனற் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் **(The U.S. House of Representatives passed a resolution asking President Obama to send lethal arms to Ukraine, media said. Representatives endorsed the resolution in a 348 to 48 vote, and such a proposal is also likely to enjoy widespread support in the Senate. Monday's measure urges Obama to provide Ukraine with "lethal defensive weapon systems" that would enhance Ukraine's ability to "defend their sovereign territory from the unprovoked and continuing aggression of the Russian Federation.")** இதனை நிறுவி நிற்கின்றன.

கூடவே அமெரிக்காவின் நேச நாடுகள் ஐரோப்பாவில் நகர்த்தி வரும் இராணுவ நகர்வுகளும் இவற்றிற்கு வலு சேர்த்து நிற்கின்றன.

அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் றீகனின் சூழ்ச்சி வலையைப் புரிந்து கொள்ளாத மிகையில் கோப்பச்சேவ், சுயநிர்ணய உரிமை என்பது பிரிந்து போவதற்கான விருப்பையும் உள்ளடக்கியது என்பதை சோவியத் ஒன்றியத்தில் பயன்படுத்த அனுமதித்தன் விளைவாக, இணைந்து பலமாக வளர்சியடைந்து வந்த சோவியத் ஒன்றியத்தின் பலமிக்க முன்னோக்கிய நகர்வு சின்னா பின்னம் ஆகியது. இதற்கு கோமாளி போல் செயற்பட்ட ரஷ்யாவின் நாட்டின் தலைவர் பொறிஸ் யெல்சன் பதவி கொடுத்த சௌகரியத்தால் மிகவும் உதவிகரமாக இருந்தார். அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் (நேட்டோ) உலகின் சமாதானத்திற்கு சவாலாக விளங்கும் வலிந்த யுத்தங்களை அன்று உலகில் இருந்த இரு அரசியல் முகாம்களால் பனிப்போர் என்ற வலைப் பின்னலினால் கட்டிப் போடப்பட்டிருந்த நிலமை இதனால் இல்லாமல் போனது.

தான் விரும்பிய வகையில் ஆயுதங்களை விற்பனை செய்யும் ஆயுத வியாபாரிகளின் நலன்களை பாதுகாக்கும் பொருளாதாரக் கொள்கைகளைக் கொண்டிருந்த அமெரிக்காவிற்கும் அதன் கூட்டாளி நாடுகளுக்கும் எண்ணைக்கு மேலாக அதிக இலாபம் ஈட்டி வந்த ஆயுத வியாபாரம் தொடர்ந்து நடைபெற்றால் தான் நவீன முதலாளித்துவக் கொள்கை(ள)யின்படி 'யுத்தம் மூலம் அழிவுகளை ஏற்படுத்தல், பின்பு மீள்நிர்மாணம் மூலம் பணம் ஈட்டுதல்' என்ற இரண்டையும் ஒருவரே செய்யலாமென எண்ணினர். இந்த மனித குலத்தின் வாழ்வியலுக்கு எதிரான செயற்பாட்டை இவர்கள் தொடர்ந்தும் செய்வதை நீங்கள் ஆப்கானிஸ்தானில் ஆரம்பித்து, அண்மையில் இவர்களால் இல்லாமல் செய்யப்பட்ட லிபிய நாடுவரை பார்க்க முடியும்.

இவர்களின் இந்த செயற்பாட்டை தட்டிக் கேட்கும் உலகின் இரு முகாம் என்ற செயற்பாடு அறவே இல்லாமல் எல்லாம் நாமே என்ற ஏகபோகம் தேவைப்படுகின்றது. இதற்கு இன்று பெரிய முட்டுக்கட்டையாக இருப்பது ரஷ்யாவே. ஏனைய சீனா, வடகொரியா, தென் அமெரிக்க நாடுகள் தமது நாடுகளின் செயற்பாடுகளில் அதிகம் கவனம் செலுத்தும் நிலையில் ரஷ்யா தமது கொல்லைப் புறத்தில் பலமாக நின்று கொண்டு கேள்விகளை எழுப்புவது வெஞ்சினத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

உக்ரேனில் நடைபெற்றுவரும் உள்ளூர் யுத்தம் என்ற வகையிலான செயற்பாட்டை தனது கையில் எடுத்து ரஷ்ய எதிர் அமெரிக்க கூட்டணி என்ற படிநிலையிற்கு கொண்டு சென்றதற்கான காரணங்கள் மேற் கூறியவையே. யுத்த நிறுத்தங்கள் உக்ரேன் அரசு - கிளர்சியாளர்கள் இடையே ஏற்படுத்தப்பட்டாலும் அர்த்தம் உள்ள யுத்த நிறுத்தம் சாத்தியப்படாமல் போவதற்கான நிலைமைகள் "பிள்ளையைக் கிள்ளி விட்டு தொட்டிலை ஆட்டும்" செயற்பாடுகளால் சாத்தியம் இல்லாமல் செய்யப்படுகின்றன என்பது வெள்ளிடை மலை. தமது உலக பொலிஸ்காரன் செயற்பாட்டிற்கு கேள்வி எழுப்பும் நிலை ரஷ்யாவிடம் இருக்கும் வரை உக்ரேனில் போர் நிறுத்தமும் சமாதானமும் நிலவுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை. இதே வேளை உலகில் மனிதன் மனிதனாக மாறும் வரை இரு முகாம்கள் என்ற செயற்பாடுகளும் தேவையாகத்தான் இருக்கின்றன. சோவியத் யூனியனின் உடைவின் பின்னரான அனுபவங்கள் மனித குலத்திற்கு எடுத்தியம்பி நிற்கும் வலுவான செய்தி இதுதான். ●

ஒரு போஸ்ட் / ஒரு பதில்!

போஸ்ட்

சீனாவைச் சேர்ந்த இளைஞன் ஒருவனை இந்தியப் பெண் காதலித்து திருமணம் செய்து கொண்டாள். முதல் வருடத்தில் அவர்களுக்கு அழகான குழந்தை பிறந்தது. மறு வருடம் யாரும் எதிர்பாராத நேரத்தில் அந்த சீன இளைஞன் இறந்து போனான்.

இந்தியப் பெண்ணிடம் துக்கம் விசாரிப்பதற்காக உறவினர்களும், அந்தப் பகுதி மக்களும் கூடி அவளுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இரண்டு வருடத்தில் இந்தியப் பெண்ணின் காதல் கணவன் இறந்து போனது அவர்களுக்கும் அதிர்ச்சியாகத் தான் இருந்தது. அந்தப் பெண்ணோ எதையும் காதில் வாங்கிக் கொள்ளாமல் "எனக்குத் தெரியும்! எனக்குத் தெரியும்!" என திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

நீண்ட நேரமாக அவள் ஒரே வார்த்தையை திரும்பத் திரும்பச் சொல்லி புலம்பிக் கொண்டிருந்ததைக்கண்ட ஒரு இளைஞன் அவளிடம் சென்று கேட்டான். "சகோதரி! எனக்குத் தெரியும் என்கிற வார்த்தையை நீண்ட நேரமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறாய். இப்பொழுதாவது தெளிவாகச் சொல் உனக்கு என்ன தெரியும்?" அழுது கொண்டே சொன்னாள். "எனக்குத் தெரியும். சீன பொருட்கள் இரண்டு வருடத்தில் காலாவதியாகிவிடும்" என்று.

பதில்

உலகில் அதிக வயதுடையவர்கள் வாழ்ந்ததாக கின்னஸ் சாதனை கொண்ட இடம் சீனா. ஆரோக்கியத்தில் முன்னணி வகிப்பவர்கள் சீனர்கள். குங்பூ கலையால் கடும் உடற்பயிற்சியும் உடற் கட்டும் கொண்டவர்கள். தொப்பை விழுவதை மறைக்கமுடியாது திண்டாடும் நாம் அவர்களை எள்ளிநகைப்பதை என்ன சொல்வது? எமக்கு மற்றையோரை மட்டம் தட்டுவதையும் பழம் பெருமையையும் தவிர என்ன தெரியும்? இப்படியே திண்ணைப் பகிடியோடு காலம் கழிப்போம். நெட்டில் செயர் பண்ணி பல்லாயிரம் லைக் வாங்கிக் குவிப்போம். மற்றவர்கள் எம்மைவிட எங்கோ தொலைவுக்குப் போனபின்பு நின்று முழிப்போம்!

காசி ஆனந்தன் கதைகள்

காட்டில் இருந்த மூங்கில் ஒருநாள் கத்தியால் வெட்டப்பட்டது. நெருப்புக் கம்பி தன்னைத் துளைத்தபோது "ஐயோ உடல் புண்ணாகிறதே..." என்று கதறி அழுதது.

"கொஞ்சம் பொறுமையாக இரு..." என்று மூங்கிலைப் பார்த்து ஆறுதல் சொன்னது காற்று.

மூங்கில் புல்லாங்குழல் ஆனது.


புடம்



மேடையில்–
உலகமே மயங்கும் இசையை
அள்ளிப் பொழிந்து கொண்டிருந்த
புல்லாங்குழலைப் பார்த்து
மேனி சிலிர்த்தது காற்று.

அது சொன்னது–

'புண்பட்டவன்
பண்பட்டவன்'



CAPS
இலங்கையில் தொடர்பு கொள்ள
077-386-7458
021-205-2240
வெளிநாட்டுக் கல்வியையும் வேலைவாய்ப்பையும் இலக்காகக் கொண்ட பாடத்திட்டங்கள்.
இமிகிரேசன் உதவிகள்.
IELTS
NURSING
Etc.
யாழ்
திருநெல்வேலி
சந்திக்கருகில்
Canadian Academy of Professional Studies
52, Palaly Road, Thirunelvely, Jaffna.

என் நினைவில் அவள்

(சிறுகதை)

-கனவுப் பிரியன்

படிச்ச வேலை உடனே எங்கே கிடைக்கிறது. சரி கிடைச்ச வேலை பார்ப்போம்ன்னு சென்னை வந்தாச்சு. எஞ்சினியரிங் முடிச்சிட்டு டேட்டா என்ட்ரி ல அக்கௌண்ட்ஸ் எழுதிய பராக்கிரம பாண்டியன் நானாகத்தான் இருப்பேன்.

கிரெடிட் ன்னாங்க டெபிட் ன்னாங்க கான்ட்ரா என்றி ன்னாங்க ஒரு மாசம் தப்பு தப்பாத்தான் எழுதினேன் கம்ப்யூட்டரில். அப்புறம்

பழகிட்டாங்க. நான் தப்பு தப்பா எழுதுறதை திருத்துறத.

அது ஒரு ஆடை உற்பத்தி நிறுவனம். என்ன ஆடை பெரிய ஆடை .... லுங்கி தயாரிச்சாங்கன்னு சொல்லுவியா....ஆமாங்க லுங்கி தயாரிச்சாங்க ஹான்ட்லும் பவர்லும்ன்னு. அங்கதான் நான் பாவுன்னா என்ன ஊடுன்னா என்னன்னு தெரிஞ்சிகிட்டேன்.



ப்ரோபிட் (profit) ன்னு ஒரு அதர பழைய சாப்ட்வேர் வச்சிருந்தாங்க. ஒரு எழவுக்கும் ஆகாது. ஏதாவது என்ட்டர் செஞ்சா அதை மாற்றவே முடியாது. அப்போ தான் Tally சாப்ட்வேர் வந்த புதுசு. வெர்சன் 4.

ராகவன் ன்னு ஒருத்தர் வந்து வித்திட்டு போயிட்டார். போகும் போது Tally சொல்லிக்குடுக்க ரெண்டு நாள் கழிச்சி ஒரு பொண்ணு (நோட் திஸ் பாய்ன்ட் யுவர் ஆனர்) வரும்ன்னு சொல்லிட்டு போயிட்டார்.

நிறைய பேரு வேலை செய்கிற இடம். நான் ஒருத்தன் தான் கம்ப்யூட்டர் ஆபரேட்டர். எனக்கு தனி ரூம் வேற. ஒரு சின்ன கிளாஸ் டோர் மட்டும் தான் இருக்கும். மற்றபடி உள்ளே என்ன நடக்கிறது என தெரியாது.

கூட வேலை செய்யும் எல்லாரும் ஒரு பெண் சொல்லிக் கொடுக்க ஒரு வாரம் வர போகிறாள் அதுவும் கனவுப்ப்ரியனுடன் தனியாக இருக்க போகிறாள் என்ற வைத்தெரிச்சலை தாங்க முடியாமல் நேரடியாக கேலி செய்தும் மறைமுகமாக சாபம் இட்டும் திரிந்தனர்.

ரெண்டு நாள் கழித்து அந்த பெண் வந்தாள். " ஹாய் மாலினி ....நான் இதை சொல்லியே ஆகணும். நீ அவ்வளவு அழகு " ன்னு சினிமாவில் வந்த டயலாக் நான் என்றோ சொன்னது. சொன்னா நம்புங்க. அவ்வளவு அழகு அவள். கொஞ்சம் ஜெயப்பிரதா கொஞ்சம் அனுஷ்கா சேர்ந்த கலவை அவள். சிரிச்சா அப்படி ஒரு அழகு. ஆனா ரொம்ப கோபம் வரும்ன்னு சொல்லிகிட்டாங்க. குண்டாக இருந்தாலும் நல்ல அழகு. முகத்துல ஒரு சாந்தம் தெரியும். அவள் பேரு பத்மா. படைப்பையில் இருந்து தினமும் வருவதாக கேள்வி. MCA படிச்சிருக்கா. இன்னும் கூடுதல் தகவல் ஐயங்கார் வீட்டு பொண்ணு. அப்புறம் அவளுக்கு நிச்சயம் ஆயிருச்சாம். வரும் டிசெம்பரில் கல்யாணம்... ஐய்யய்யோ அந்த புள்ள சொல்லிக் கொடுக்க வந்த கதையை விட்டுட்டு அவளை பற்றி பேசிகிட்டு இருக்கேன்.

ரெண்டு நாள் கழித்து வந்தாள். ஆபிஸில் ஆனு உடன் பேசிகொண்டிருக்கும் போது ஆனு மகன் வந்து எல்லா விபரமும் அறிந்து கனவுப்ப்ரியனுக்கு எல்லாம் சொல்லி கொடுக்க வேண்டாம் அவன் சுமார் மூஞ்சி குமாரு. அதனால எனக்கு சொல்லிக் கொடுங்க என்று அவளை அழைத்து கம்ப்யூட்டர் அறைக்கு வந்தான்.

என்னை அறிமுகம் எல்லாம் செய்து வைக்கவில்லை. நான் தேமே என்று ஓரமாக நின்றிருந்தேன். நான் இருப்பது அவனுக்கு பிடிக்காமல் போக " மக்கா நீ அக்கௌன்ட் செக்சன் போ " என அனுப்பி விட்டான் (விரட்டிடான்னு வெளியே சொல்லவா முடியும்).

நான்கு நாட்கள் அவர்கள் இருவரும் சென்று ட்ரையல் வெர்சன் பழகினார்கள். நான்கு நாட்கள் கழித்து ஆனு என்னை அழைத்து பத்மா இனி உனக்கு மட்டும் தான் சொல்லி தரும். மகன் வரமாட்டான். இன்னும் இரண்டு நாட்கள் கழித்தபின் நீதான் எல்லாம் செய்யவேண்டும் முடிந்தவரை கற்றுக்கொள் என அனுப்பி வைத்தார்.

(தொடர்ச்சி மறுபக்கம்)


AGR FOREX
உலகளாவிய பணமாற்றுச் சேவை
Currency Exchange
இலங்கை, இந்தியா, மற்றும் ஐரோப்பிய
நாடுகளுக்கு பணம் அனுப்பவும் எடுக்கவும்
US DOLLARS, EURO, POUNDS, SWISS FRANCS, RUPEES
நாணயங்களை வாங்கவும், விற்க்கவும்
Tel:- 416-261-0003 Fax:- 416-261-9592
Email: info@agrforex.com www.agrforex.com
1143 Morningside Ave., Unit #5, Scarborough, ON


ARUN BAKERY
ARUN BAKERY
TAKEOUT & CATERING
905 303 4141
சுவை மிகு இலங்கை, இந்திய
சைவ. அசைவ உணவுவகைகள்
பாண், கேக் போன்றவ்றையும்
தரமாகவும், மலிவாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
தங்கள் வீட்டில் நடைபெறும்
அனைத்து விசேட
வைபவங்களுக்கும் தேவையான
உணவு வகைகளை முன்கூட்டியே ஓடர்
செய்து பெற்றுக்கொள்ளலாம்
9699 Jane Street,
Unit 23 Maple, ON. L6A 0A4
Jane&Major Mackenzie


Ancaster, ON
Fabulous 4 Bedroom house
with Swimming Pool
Cottage
An hour from Toronto
3 Bedroom cottage.
Potential Rental Income
Coffee shop
Prime Location! Great Opportunity To
Own And Operate
Your Own Coffee House
Hwy 7/Kinsale (Pickering)
Build your dream home
In Old Pickering
I can find you the right home faster!
DINESH JEGANATHAN
Sales Representative
Cell: 647-895-3466
Lets Begin the Search for Your Dream Home
HomeLife Today
Realty Ltd., Brokerage*
each office independently owned and operated
talk2dinesh@live.com

இருவரும் கம்ப்யூட்டர் அறைக்கு உள்ளே நுழைந்ததும் அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது என்றேன். என்னை ஏற இறங்க பார்த்தாள் " ரெண்டாவது லூசு " என்று மெதுவாக வாய்க்குள் முனங்கினாள்.

நான் " நீங்க நேரடியாவே திட்டலாம்". என்றேன்.

மீண்டும் ஏற இறங்க பார்த்தாள். ஒன்னு தெரியுமா பொண்ணுங்களுக்கு சீன் போடுற யாரையும் பிடிக்கவே பிடிக்காது. தப்பா இருந்தாலும் உண்மையை சொல்பவனை ரொம்ப பிடிக்கும். "எஞ்சினியரிங் படித்துவிட்டு அக்கௌன்ட்ஸ் வேலைக்கு ஏன் வந்தாய் என்றாள்.

"சோத்துக்கு வேற வழி தெரியல என்றேன்."



இப்படித்தான் எப்பவும் பேசுவியா " என்றாள்.

"இல்லை இல்லை எப்போவுமே இப்படித்தான் பேசுவேன் " என்றேன். சிரித்தாள்

ரெண்டு நாளில் அதிகம் தெரிந்து கொண்டாதாய் ஆச்சர்யமாய் சொன்னாள்.

பின் மெதுவாய் ஆனு மகனை பளார் என கன்னத்தில் அறைந்த கதையை அரைகுறையாய் கூறினாள். " உங்களுக்கு கல்யாணம் நிச்சயம் எல்லாம் ஆகவில்லை எனக்கு தெரியும் என்றேன். அரைகுறை தைரியத்துடன்.

"அதெல்லாம் இல்லை என்று வாதாடினாள் பின் "உனக்கு எப்படி தெரியும்" என்று வழிக்கு வந்தாள்.
"உங்க கண்ணு சொல்லுது..."
"கண்ணா ....என்ன சொல்லுது "
"என் சம்பளம் தாண்டா வீட்டை காப்பாத்துதுன்னு சொல்லுது " என்றேன்.
"அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம் "
"இருக்கு....வெளியே வேலைக்கு வந்திட்டீங்க. அழகா வேற இருக்கீங்க. எங்க போனாலும் ஒரு பஞ்சாயத்து வந்திரும். அதை தவிர்க்க உங்களுக்கு நிச்சயம் ஆயிருச்சுன்னு சொன்னா ஒரு பாதுகாப்புன்னு நினச்சி ஒரு வளையம் போட முயற்சி செய்றீங்க. பொம்பளையா என்ன பார்த்து பார்த்து நோகடிகாதீங்கடா ...எனக்கும் கஷ்டம் இருக்குடான்னு பௌடரை தாண்டி உங்க முகம் காட்டி கொடுக்குது அப்படியே உங்க கண்களும்" என்றேன்.
பெருமூச்சு விட்டாள். உடல் நலமில்லாத ஒரு தகப்பனையும் சேர்த்து வைத்து காப்பாற்றுவது ஒரு பொண்ணுக்கு எவ்வளவு கஷ்டமான விஷயம் தெரியுமா என வருத்தம் தெரிவித்தாள் வீட்டுக்கு ஒற்றைக்கு ஒரே மகளான அவள்.
சொல்லி தருவதை இன்னும் ஒரு வாரத்திற்கு நீட்டித்தாள். பெயர் சொல்லி அழைக்கும் அளவுக்கு நல்ல தோழி ஆனாள்.

பத்தாம் நாள் சனிக்கிழமை மாலை 7 மணி அவளுடன் அவள் வீடு செல்ல பீச் எலெக்ட்ரிக் ட்ரைன் ஸ்டேசனில் காப்பி குடித்து கொண்டு இருவருமாய் நின்றிருந்தோம்.
இங்கிருந்து தாம்பரம் வரை சென்று அங்கிருந்து பஸ் பிடித்து அவள் வீடு செல்வதாய் உத்தேசம்.

ட்ரெயினில் சென்றுகொண்டிருக்கும் போது " டேய் ...எனக்கு இந்த கம்பியை பிடித்து கொண்டு வாசலில் நின்று வர நீண்ட நாள் ஆசை. ஆண்களாய் நிற்பார்கள். அதனால் செல்ல பயப்படுவேன். இப்போ தான் யாரும் இல்லையே நீ வந்து நில்லு துணைக்கு. நான் கம்பியை பிடிச்சுகிட்டு ட்ரைன் வாசலில் நின்று வரனும் வா ...." என்று அழைக்க ஓடும் ட்ரைன் வாசலில் நின்று கொண்டேன். தனியாய் நடு கம்பியை பிடித்து கொண்டு வெளியே எட்டி பார்ப்பதும் காற்று சில் என அடிக்க சிரித்த வண்ணம் தலையை உள்ளே இழுப்பது பின் மீண்டும் தலையை வெளியே நீட்டுவது என சிறுமி போல விளையாடி கொண்டிருந்தாள்.

ஒத்தையில தனி ஆளா பெண் குழந்தைகள் வளர்வதை என்னவென்று சொல்ல...அக்கா தங்கச்சிகளுக்கு இருக்கும் சின்ன சின்ன ஆசைகளை நிறைவேற்றவாவது வீட்டுக்கு ஆண் பிள்ளை வேண்டும்.

அவள் ஒரு தொடர்கதை படத்தில் மட்டுமல்ல கண் எதிரேயும். ஓரிரு வருடங்கள் கழித்து புரசைவாக்கம் மதார்சாவில் துணி எடுக்க நின்றிருந்த போது அவளையும் அவள் கணவனையும் சந்தோஷ நிலையில் கண்டது மகிழ்ச்சியான விஷயம். வாழ்வின் மகிழ்ச்சியான செய்தி காலத்திடம் மட்டுமே இருக்கிறது. ●

அண்ணாச்சி பதில்கள்

ரமேஷ், ஸ்காபுரோ: சனல் 4 சொல்வதெல்லாம் உண்மையா? புலிகளின் தலைவர் சரணடைந்ததாகவும் சித்திரவதை செய்து கொல்லப்பட்டதாகவும் இந்த நேரத்தில் புதுக்கதை அவிட்டு விட்டிருக்கிறதே. இது எமது போராட்டத்தைக 'கொச்சைப்படுத்தும் முயற்சியா?

அண்ணாச்சி: பதட்டப்படாதீர்கள் ரமேஷ். இதுநாள்வரை சனல் 4 வெளியிட்டு வந்த ஆதாரங்களை வைத்துத்தானே இலங்கை அரசாங்கம் சரணடைந்த போர்க் கைதிகளை கொன்றிருப்பதாக குற்றம்சாட்டி வந்தோம். ஐநா சபைக்கும் சனல் 4 ஆதாரங்களைக் கொண்டுசென்றோமல்லவா? நாம் இலங்கை அரசாங்கம் யுத்த விதிகளையும் மனித உரிமைகளையும் மீறியிருப்பதை முன்னிலைப்படுத்துவதா, எம் வீரர்கள் சரணடைவது அவமானம் என்று கௌரவம் பார்ப்பதா? நாம் கௌரவம் பார்த்து நின்றால், உண்மைகளை மறுதலித்தால் எமக்கு எப்படி நீதி கிடைக்கும்? பொறுங்கள். சனல் 4 சொல்வது என்ன என்பது முழுமையாக வெளிவரட்டும். அது கூறுபவற்றுக்கான ஆதாரங்களை முன்வைக்கட்டும். எது எப்படியானாலும், சரணடைந்த அல்லது கைதான ஒருவரை (அப்படி உண்மையில் நடந்திருந்தால்) கொல்வது யுத்த விதிகளை மீறும் செயல் – அதற்கான நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும்.

சந்திரன் ஸ்காபுரோ: லண்டன் சென்ற இலங்கை ஜனாதிபதி மைத்திரிக்கு புலம் பெயர் தமிழர் கறுப்புக்கொடி காட்டியது சரியா?

அண்ணாச்சி: யாழ்ப்பாணம் சென்ற மைத்திரிக்கு யாரும் கறுப்புக்கொடி காட்டவில்லை. யாழ் மாகாணசபை முதலமைச்சர் "உங்களை எங்கள் ஜனாதிபதியாகக் கருதி வரவேற்கிறோம்" என்றார். இலங்கையில் நடந்தது இனப்படுகொலையே என அண்மையில் தீர்மானம் நிறைவேற்றியவரே இப்படி சிங்கக்கொடியின்கீழ் அமர்ந்து அவரை வரவேற்கும்போது, இத்தனை கொடுமை நடந்தும் மைத்திரியிடம் எமக்கு நம்பிக்கை உள்ளது என்று கூறுவதுபோல்தானே அமைகிறது? இந்நிலையில் இலங்கையில் இருக்கும் தமிழ் மக்கள் தாங்கள் நினைப்பதென்ன, இங்கு வாழும் சில புலம்பெயர் அமைப்புகள் நினைப்பதென்ன என்பவற்றுக்கிடையே வேறுபாடு எழுகிறது. இலங்கைவாழ் தமிழர்கள் தங்கள் தலைவிதியை தாமே நிர்ணயிக்க இப் புலம்பெயர் அமைப்புகளிடம் சுயநிர்ணய உரிமை கோரவேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டாலும் ஆச்சரியமில்லை. மைத்திரியையும் கடுப்பேற்றி, மஹிந்தவாக மாற்றிவிடுவதால் என்ன ஈட்டப் போகிறோம்? உலகம் நாட்டைப் பிரிந்து இவர்கள் கையில் கொடுத்துவிடுமா என்ன?

ரோகினி, மிஸிஸாக்கா: கன்டிடா என்ற பங்கஸ் பற்றிய கட்டுரை பயனுள்ளதாயிருந்தது. எனக்கே அப்படியொரு ஆபத்து வயிற்றுள் இருப்பது தெரிந்திருக்கவில்லை. இதுபோல் பயனுள்ள விடயங்களை அதிகம் தாருங்களேன்.

அண்ணாச்சி: நிச்சயமாக. வாசகர்களாகிய நீங்கள் எதை எதை அதிகம் விரும்புகிறீர்கள் என்று அறிவதன் மூலமே இச் சஞ்சிகையின் விடயதானங்களை நாம் திட்டமிட உதவ முடியும். ஏனைய விடயதானங்கள் பற்றியும் உங்கள் கருத்துக்களை எதிர்பார்க்கிறோம்.

மாதவி, பிரம்டன்: பாலியல் கல்வி கொண்டுவருகிறார்களாமே? என்ன செய்யப் போகிறீர்கள்?

அண்ணாச்சி: என்ன செய்யப்போகிறீர்களென்றால்..? இதென்ன வம்பாய்ப் போச்சு. அதுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? என்ன திங்க் பண்ணிறீங்களென்னடு புரியுது. உங்க பிள்ளைகளுக்கு எல்லாம் புரிஞ்சா பிஞ்சில பழுத்துடுவாங்களே எண்டதுதானே கேள்வி. டோன்ட் வொரி மை டியர் மாதவி. நீங்கள் எந்த உலத்தில இருக்கிறீங்க? நீங்கள் சமைக்கிறதுக்கிடையில அதுகள் இன்டநெட்டால தேவலோகத்துக்குப் போய் இந்திரன் வீட்டு அந்தப்புர ரகசிங்களையெல்லாம் அப்படி அப்படியே பாத்திட்டு வரக்கூட வசதியிருக்கு. அதுக்கு முன்னாடி அதெல்லாம் நார்மல்தான் எண்டு உங்களால சொல்ல முடியாதத ஸ்கூலில சொல்லித்தாராங்க. விடுங்க!

சாஜன் மார்க்கம்: வித்தியாசமான சினிமா விமர்சனம். ஆனால் இது திரைப்படக்காரரை யோசிக்க வைக்கப்போகுதா என்ன?

அண்ணாச்சி: இப்படியாவது உங்களை யோசிக்க வைக்குதுதானே! ரசிகர்கள் யோசிக்கத் தொடங்கினால் தயாரிப்பாளர்களும் யோசிக்கத்தானே வேணும். குளத்து நீர் உயர்ந்தால் தாமரைத் தண்டு நீளத்தானே வேணும்? ஆகா ஓஹோ போட்டு இடையில திருஷ்டி கழிக்க ஒன்டிரண்டு நொட்டையச் சொல்லிட்டுப் போற விமர்சனங்கள் உங்கள் ரசிகா உணர்வை பண்படுத்துமா? திரைப்படத்தின் விடயங்களை ஓரளவாவது புரிந்திருந்தால்தானே தரமான திரைப்படங்களை இனங்காண முடியும். அதுதான் இந்த வித்-தி-யாசம்!

குகன், ஸ்காபுரோ: தண்ணீருக்குள்ளால் நெருப்பைக் கொண்டுபோக முடியுமா?

அண்ணாச்சி: தண்ணீருக்குள் நெருப்பை வைத்து அடைத்துத் தருகிறார்களே! நீங்கள் மது அருந்துவதில்லைபோலும். நல்ல பழக்கம். ஆனால் இது புரட்சிகரமான கருத்தொன்றை முற்றிலும் எதிரான நிலைமையில் முன்னெடுப்பதைக் குறிப்பது. முடிந்தால் பண்ணுங்கள்.



பாடசாலைகளில் பாலியல் கல்வி

பாலியல் கல்லிஎன்றால் என்ன என்பது முதலில் வரைவிலக்கணப்படுத்தல் வேண்டும்.

இரண்டு பால்கள் அதாவது ஆண் பெண் என்ற வித்தியாசத்தை உடலியல், உளவியல், ஹோர்மோன்கள் என்பவற்றினூடாக இனப்பெருக்கவியல், கூர்ப் பியல் ஆய்வு மூலம் அறிந்து கொள்ளல் என்பதேயாகும். எம்மில் பலரிடம் இருக்கும் வரைவிலக்கணம் ஆண் பெண் உடலுறவு பற்றிய கல்வியென்பதேயாகும்.

அண்மை காலங்களில் இந்திய சஞ்சிகைகளில் வெளிவரும் செய்திகளில் அதிகமாக வரும் விடயங்களில் ஒன்று 'தனது காதலை ஏற்றுக்கொள்ளாத பெண்ணின் மீது அசிட் வீச்சு' அல்லது 'ஓடும் பஸ்ஸில் ஐந்து வாலிபர்கள் பல்கலைகழக மாணவியை வன்புணர்வு செய்து கொலை செய்தனர்' போன்ற செய்திகள் பரவலாக வெளிவந்தவண்ணம் உள்ளன. இவ்றுக்கான எதிப்பு அலைகளும் ஒன்றுபட்ட போராட்டங்களும் நடைபெற்றன என்பதும் உண்மைதான்.

இந்த நிகழ்வுகளின் விளைவாக நடைபெற்ற ஆய்வுகளின் பிரதிபலிப்பாக வெளிப்பட்டவைகளில் முக்கியமான ஒன்று குற்றம் இழைத்தவர்களின் மீது வழங்கப்படும் தண்டனைகளின் கடுமையை அதிகரிக்க வேண்டும் என்பதாகும். அப்படிப்பார்த்தால் இந்தக்குற்றங்களிற்கு அடிப்படை காரணம் தனிமனித இயல்புகள்தான் என்பதாகின்றது. இதற்கான சமூகவியல் கலாச்சார அம்சங்கள் போன்ற அடிப்படைகள் நிராகரிக் படுகின்றன.

இந்த பாலியல் குற்றங்கள் என்பன உண்மையில் சமூகவியல் கலாச்சார அடிப்படைகளின் பக்கவிளைவுகள்தான். பாலியல் கல்வியென்பது கலவி பற்றிய கல்வி என்பதுதான் எம்மவர்களிடையே பெரும்பாலும் கொள்ளப்படுகின்ற அறிவு. இந்த அறிதலை மாற்றவேண்டும் என்பதே அடிப்படை தேவை.

ஆசிய அறிவில் அதிலும் பார்க்க தமிழ் அறிதலில் பெண்களை ஆண்களிற்காக படைக்கப்பட்ட, அதாவது மனிதஜீவிக்கு சற்று குறைவான பிறப்பாகவே தொண்ணுறு வீத ஆண் பிறவி நம்புகிறது. அதாவது பெண்கள் ஆண்கள் என்ற பகுதிப்பிரிவில் உடலியல் கூறுகள் அவை சார்ந்த கோர்மோன்கள், சுரப்புகள், உணர்வுகள் கணக்கெடுக்கப்படுவதில்லை.

பெண்கள் பூப்படைவதை போன்று பன்ம வயதை அடையும் சிறுவர்கள் ஆரம்ப பாலியல் அறிகுறிகளை தாம் செய்யும் குற்றங்களாகவே உணர்கின்றனர். இதன் விளைவு தாம் இயற்கையாக உணர்கின்ற உடலியல்தேவைகளை பற்றிய அறியாமையினால் அவற்றை தீர்த்துக்கொள்ளும் வெளிப்பாடுகளில் குற்றவாளிகளாகவே எண்ணி குற்றம்கள் இழைக்கத் தயாராகின்றனர்.

அனேகமாக இருபத்தைந்து வயது வரையில் நமது இளைஞர் யுவதிகள் தமது சுயகுற்றங்களாகவே தமது உடலியல் தேவைகளை கருதுகிறார்கள். இது பாரிய உளவியல் சார்ந்த பாதிப்புகளை ஏற்படுத்தவல்லன.

கனடாவில் பதின்ம வயதினர்கள் ஆண் பெண் இணைந்து பாடசாலை ரீதியாக செல்லும் இரண்டு மூன்று நாள்கள் தங்குகின்ற முகாம்களிற்கு (காம்ப்) கருத்தடை மாத்திரைகள், ஆணுறைகளைக் கொடுத்தனுப்புவது சதாரண நடைமுறை.

இந்தியா இலங் கை போன்ற நாடுகளில் இவை சார்ந்த கல்வி ஆரம்பத் திலேயே நிராகரிக்கப் படுகின்றது. இதற்கான காரணமாக மதம், கலாச்சாரம் என்பன முக்கியமாக இருக் கின் றன. ஆண் பெண் தனித் தனி பாடசாலைகளில் கல்வி கற்றவர் களுக்கும் கலவன் பாடசாலைகளில் கற்றவர்களிற்கும் குணாம்சத்தில் வித்தியாசத்தை காணலாம். கலவன் பாடசாலைகளில் கற்றவர்கள் சகஜமாக இருபாலாரிடமும் பழகும் தன்மையை காணலாம். இவற்றிற்கு மேலாக எமது மதங்கள் பாரிய பாத்திரம் வகிக்கின்றன. எமது கலாச்சாரம் என்பது பெரும்பாலும் மதத்திலேயே தங்கியிருக்கிறது. மதம் சார்ந்த இலக்கியங்கள் கடைப்பிடிக்கப்படும் நடைமுறைகள் எல்லாமே பெண்ணை கேவலப்படுத்தும் வேலையைத்தான் செய்கின்றன. கற்பு என்ற கற்பிதமும் நம்மவர்களிடையே கலை, சினிமா, சஞ்சிகைகள் மூலம் ஆழமாக புதைக்கப்பட்டதன் விளைவும் எமது அறியாமைக்கு முக்கியமான காரணமாகும்.



பாலியல் கல்வியென்பது கலவி பற்றிய கல்வியென்பதே எம்மவரின் அறிவு. இதை மாற்றவேண்டும்

பெண்களை இன்னுமொரு மனித ஜீவியாக, தன்னைப்போன்ற உணர்வுகளை கொண்டவர்களாக உணர்ச்சிகளைக் கொண்டவர்களாக எண்ணப் பண்ணுவதே கல்விப்போராட்டத்தின் அடிப்படை வெற்றியாகும். இதற்கான மூலக்கூறே இந்த பாலியல் கல்வியென்பது. "இனப்பெருக்கம்" என்ற இன்றிமையாத தேவைதான் காதல், காமம், போன்றவற்றின் அடிப்படை என்பதனை பாலியல் கல்விதான் எடுத்து இயம்ப முடியும்.

பத்தாம் வகுப்பு காலங்களில் முதல் முதலாக ஆண் பெண் இனப்பெருக்க உறுப்புகளை பற்றிய கல்வியும், படங்களும் அறிமுகமாகும் பொழுது மிகப் பெரிய சங்கோயத்துடனே பலர் அதனை எதிர்கொள்ளின்றனர். ஆனால் அது கல்வி என்பதனால் அது கலாச்சார, சமய மரபுகளை தாண்டி கல்வியாக ஏற்கின்றனர்.

இதற்கான உண்மைகளை உடலியல் விளக்கங்களுடன் புரிந்து கொள்வதன் மூலம்தான் தமக்கான கட்டுப்பாடுகளையும், வரையறைகளையும் தாமா கவே தமக்கென வகுத்துக்கொள்ளும் பக்குவம் இளைய சந்ததியர்க்கு ஏற்பட வாய்பு ஏற்படும். இல்லாமல் வெறும் தண்டனைகளாலோ இல்லை சட்டவரையறைகளாலோ இப்பாலியல் குற்றச்செயல்களை கட்டுப்படுத்த முடியாது.

எதிரும்

எந்தவொரு விடயத்துக்கும் குறைந்தது இரு மாறுபட்ட கருத்துக்கள் இருக்கத்தான் செய்யும். எப்போதும் ஒன்று மட்டுமே சரியாக இருப்பதில்லை. எனவே மாறுபாட்ட கருத்துக்களை மோதவிட்டுப் பார்க்கும் இவ் "எதிரும் புதிரும்" பகுதியின் நோக்கம் இதில் எந்தத் தரப்பினரிடமிருந்தும் கிடைக்கும் தர்க்க நியாயங்கள் எம் கருத்துக்களைச் செழுமையூட்ட உதவும் என்பதே. கவனிக்கவும், இத் தர்காங்கள் சர்ச்சைக்குரியவையாக இருக்கக் கூடும். இவை எவையும் முகவரியின் சொந்தக் கருத்தல்ல, அத்தோடு அக்கருத்துக்களுக்கு ஆதரவோ, எதிர்ப்போ, எமக்கில்லை - அவற்றுக்குப் புறம்பாக நின்று அவற்றை செவிமடுக்கும் மூன்றாம் தரப்பாகவே நாம். கருத்துக்கள் கருத்துக்கூறுபவர்களுக்கே உரியவை. எந்தக் கருத்துக்களோடும் உடன்படுவதும், விடுவதும் உங்களைப் பொறுத்தது.

ம்ருதிபு

விடயம்:

ஒன்டாரியோ மாகாண அரசு எதிர்வரும் செமஸ்டரிலிருந்து பாடசாலைகளில் சிறு வகுப்பு முதல் பாலியல் கல்வியை அறிமுகப்படுத்த தீர்மானித்துள்ளது. பெற்றோர் யாரும் விரும்பாதவிடத்து தமது பிள்ளைகளுக்கு அப் பாடத்தைத் தவிர்த்துக்கொளவும் முடியும். 5 வருடங்களுக்கு முன்னர் இவ்வாறொரு தீர்மானத்தைக் கொண்டுவர முயன்று, எதிப்புகளால் கைவிட்டிருந்தது. இப்போது எமது கேள்வி என்னவென்றால், தமிழராகிய எமது பிள்ளைகளுக்கு இக் கல்வி தேவையா இல்லையா என்பதே. இத் திட்டதின் பிரகாரம் கற்பிக்கவுள்ள பாடத்திட்டம்:

Grade 1:	(age 6): Genitalia & consent
Grade 3:	(age 8): Gender as a changeable social construct
Grade 3:	Homosexuality
Grade 4:	(age 9): Romantic dating
Grade 6:	(age 12): Masturbation
Grade 7:	(age 13): Anal intercourse & Oral
Grade 8:	"Make a personal plan' about sexual activity
Grade 8:	Keep a condom with you



சரியா? தப்பா?

பாலியல் கல்வியென்று தனியான கல்வி எமக்குத் தேவையே இல்லை. இதெல்லாம் மேற்கத்தேய விடயங்கள். மேற்கத்தேய நாகரீகத்துக்கும் வாழ்க்கை முறைக்கும் இந்தப் பாலியல் கல்வி பொருந்தலாம். ஆனால் எமக்கு அது பொருந்தாது - பெரும் அதிர்ச்சிகரமான குழப்பங்களையே ஏற்படுத்தும்.

மேற்குலகில் அவர்களது வாழ்க்கைத்துணைக்கான தேர்வு டேட்டிங் மூலம் நிகழ்கிறது. அங்கே எல்லோரும் டேட்டிங்கிற்கூடாக சென்று வந்தவர்கள்தான். பல டேட்டிங்கிற்குப் பின்னர்தான் தாம் இனித் திருமண வாழ்க்கைக்குப் போகத் தயாரென உறுதிசெய்துகொண்டு, அவ் டேட்டிங்களில் தமக்குத் தோதாக அமைந்த துணையைத் தேர்ந்தெடுப்பார்கள். அப்போது அத் துணையும் பல டேட்டிங்கள் செய்தவராயும் மற்றவர் பல டேட்டிங் செய்திருப்பாரென்பது தெரிந்தவராயும்தான் இருப்பர். இதையிட்டு எவருமே மற்றவரிடம் கேள்வி கேட்பதில்லை. இதுதான் வாழ்க்கை முறை என்றாகிவிட்டதால் அப்படிக் கேட்டோ, அல்லது இதற்குப் புறம்பாகவோ அங்கு யாரும் வாழ முடியாது.

> நாகரீகம், முன்னேற்றம் என்பது மேற்கத்தய விடயங்களுக்கு அப்படியே மாறிச் செல்வதே என்பது ஒரு போலி மயக்கம்!

அத்தோடு, அத் திருமணங்களை நிரந்தரமான முடிச்சுக்களாகவும் அவர்கள் கருதுவதில்லை. வாழ்க்கையில் ஒவ்வாமை ஏற்பட்டால் இலகுவாகப் பிரிந்து போய்விடுவார்கள்.

இது ஒருபுறமிருக்க, மேற்கில், குறிப்பாக கனடாவில், ஒரினச் சேர்க்கைகள் ஒரினத் திருமணங்கள்வரை ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள். ஒன்டாரியோ மேயர்கூட பகிரங்கமாக தன்னை அப்படி அடையாளப்படுத்திக்கொண்டு தேர்தலில் நின்று வெற்றியீட்டியவர்தான். இத்தகைய ரீதியில் சென்றுகொண்டிருக்கும் மேற்கத்தேய வாழ்க்கை முறையில் இப் பாலியல் கல்வி சகஜமான ஒன்றாக ஏற்றுக்கொள்ளக்கூடியதுதான்- ஏன் அது அவசியமானதாக அவர்களால் உணரப்படக்கூடியது. அச் சமூகப் பின்னணியில் ஏற்கெனவே இவ் விடயங்களுக்குப் பரீச்சயமானவர்களான மாணவர்களுக்கு இவற்றை முற்கூட்டியே கற்பிப்பது உகந்ததாக இருக்கலாம். அதனால் அவர்களிடையே குழப்பம் ஏற்படப்போவதில்லை.

ஆனால் எமது தமிழ்ச் சமூகத்துக்கு இது பொருந்தாது. நாரீகம், முன்னேற்றம் என்பது மேற்கத்தய விடயங்களுக்கு அப்படியே மாறிச்செல்வதே என்பது ஒரு போலித்தனமான மயக்கம். அப்படிப் போவதானால் நான் மேலே சொன்ன, அனைத்துக்கும் மாறி, நாம் நாமில்லாமல் மண்ணிறத் தோல்போர்த்த வெள்ளையர்களாக மாறிப்போய் நிற்போம்.


சிலர் கூறலாம் இந்தக் கல்வி பாலியல் நோய்களைத் தடுக்க உதவுமென்று. அதற்கு ஏன் பாலியல் கல்வி? அந்த நோய்பற்றிக் கற்பிக்க வேண்டி வரும்போது அந்த நோயோடு அதற்கான பாதுகாப்பு வழிமுறைகளென இவற்றைக் கற்பித்துவிட்டுப் போக வேண்டியதுதானே. எம் தம்தபதியினருக்குச் சரியான பாலியல் விளக்கமின்மையால் பல மன உளைச்சல்களுக்கும், மகப்பேறின்மை போன்ற சிக்கல்களுக்கும் உள்ளாகின்றனர் என்று மற்றொரு காரணம் கூறுகிறார்கள். அதற்கு டாக்டர்களை, சுகாதார நிலையங்களை நாடவேண்டியதுதானே?

இதையெல்லாம் சிறு பருவத்தில் சொல்கிக்கொடுத்தால்தான் அவர்களுக்கு விகாரமான எண்ணங்கள் தோன்றாது என்பது இன்னொரு தர்க்கம். யார் சொன்னார்கள் அப்படி? இதோ எல்லாம் அப்பட்டமாகத் தெரிந்த மேற்குலகில், கற்பழிப்புகள் நிகழ்வதில்லையா? சிறுவர் துஷ்பிரயோகங்கள் இங்கு ஒரு அச்சுறுத்தலாகவே எழுந்துள்ளதே. இங்கு இவை கட்டுக்கடங்காமல் பெருகாதிருக்க சட்டம் தண்டணை பற்றிய அச்சம்தான் காரணமேயன்றி, விபரம் தெரிந்ததால் பக்குவப்பட்டுள்ளார்கள் என்று அர்த்தமல்ல. அத்தோடு இவர்கள் ஏழை நாடுகளுக்குப் படையெடுத்துச் சென்று சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுவது ஏன்?

பருவம்வருமுன்னரே, பாலியல்அறிவை சொல்லிக்கொடுப்பது என்ன விளைவைத் தருமென்று பரிசோதித்துப் பார்க்கவில்லை எவரும். அது அவர்களைப் பண்படுத்துமா இல்லை பருவத்துக்கு முந்திய பாலியல் உந்தல்களுக்கு இட்டுச்செல்லுமா என்பது யாரும் எதிர்வு கூற முடியாது. அதுவும் வேறு கலாசாரப் பின்னணியில் வளர்ந்த எம் தமிழ் மாணவர்களுக்கு இது அதிர்ச்சியாகவும், தூண்டலாகவும் அமையலாம். அத்தோடு அவர்களது பெற்றாருக்கு இதுகுறித்து அவர்களை வழிப்படுத்தவும் முடியாது.

இப் புதிய திட்டத்திலுள்ள பாடங்களைப் பாருங்கள். 1ஆம் வகுப்பிலேயே பாலியல் உடலுறுப்புகளை விளக்கப்போகிறார்களாம். 3ம் வகுப்பில் ஓரினச் சேர்க்கை பற்றியும் நான்காம் வகுப்பிலேயே டேட்டிங் பற்றியும் சொல்லி ஏழாம் வகுப்பில் உடலுறவு பற்றியே படிப்பிக்கப் போகிறார்களாம் - அதாவது இதனால் பரவும் நோய்கள் என்ற போர்வையில் எட்டாம் வகுப்பில் கொண்டம் வைத்திருக்கும்படி அறிவுரை வேறு. இப்போ சொல்லுங்கள், எட்டாம் வகுப்புக்குள்ளேயே இவ்வளவற்றையும் உங்கள் பிள்ளைக்குச் சொல்லி கொண்டம் வைத்திரு என்று அட்வைஸ் வேற குடுப்பீர்களா? இது தமிழ் சமூகத்துக்கு ஒத்துவருமா?

வெள்ளைக்காரர் செய்வதெல்லாம் நாமும் செய்ய இயலாது. அவர்களின் கல்வியில் அவற்றை அவர்கள் புகுத்தினால் நாமும் அப்படியே பின்பற்ற இயலாது. சமூகங்களது கலாசாரத் தனித்துவங்களுக்கு ஏற்பவே நாகரீகங்கள் அமைகின்றன. நாம அநாகரீகமெனக் கருதுபவை மற்றவர்களுக்கு நாகரீகமாக இருந்தால் இருக்கட்டும். அதைக் கல்வியில் புகுத்தும்போது நாம் தவிர்த்துக்கொள்வது அவசியமாகிறது. விரும்பினால் தவிர்க்கலாமென்று அவர்களே சொல்லும்போது நாம் தவிர்ப்பதுதான் உகந்தது.


iocatering
IT'S THE REAL FUSION
WWW.IOCATERING.COM
WE DO
DIET FOR
DIABETIC
FREE
Home
DELIVERY
TEL: 416.615.1079
IOCATERING@YAHOO.CA
1079 MIDLAND AVE. | TORONTO | ON | M1K 4G7


Mornelle I·D·A· Drug Mart
இது உங்கள் மருந்தகம்
We accept all drug plans
முதியோர்களுக்கும், சமூகநல உதவி பெறுபவர்களுக்கும் $2 அறவிடப்படமாட்டாது
We do not charge $2 deductible for seniors & welfare recipients
Contact: Jeyanthy or Chiman Mistry (Jimmy)
Tel: 416-289-2010
fax: 416-289-4064
1200 MARKHAM RD., SUITE 101, [AT ELLESMERE] SCARBOROUGH, ON, M1H 3C3


PS RENOVATION
MOEN
Buy it for looks. Buy it for life.®
DELTA
see what Delta can do
Touch$_2$O® Technology
RE-MODELING, RE-FACING
RE-DESIGN, FLOORING &
BASEMENT FINISHING
அனைத்து விதமான வீட்டுதிருத்த வேலைகளுக்கும், தரம் வாய்ந்த சமையலறை,
குளியலறை உபகரணங்களைப் பொருத்துவதற்கும் தள வேலைகளுக்கும்
CALL FOR FREE ESTIMATE
faucets from $100 installed.
THANUSAN:
647-996-6491

புலம் பெயர்ந்தோர் வாழ்வியல்

நிறம் மாறும் கோலங்கள்!

சமூக உளவளத் தொடர் - 3

சென்ற தடவை ஆப். லிங்கனைச் சந்தித்தீர்கள் - அதுதான் எங்கள் அப்புலிங்கம். (அந்தப் பெயரைச் சென்னாலே கோபிப்பார்.) அவரது கனேடியன் கெட்-அப்பையும் பார்த்து அசந்துபோய், அவரது ஆங்கிலப் பீத்தல்களைக் கேட்டு அருண்டுபோய், நீங்களும் ஆங்கிலம் செப்பாவிட்டால் அவர் கண்ணுக்குக் கரப்பான் பூச்சியாகத் தெரிவீர்களெனப் பயந்து, "யா, யா" வாவது சொல்லித் தப்பிக்கொள்ள முயன்றிருப்பீர்கள். - அது தான் கரைதலாக்கம் எனும் புகலிடக் கலாசாரத்தோடு கரைந்துவிடும் கோளாறு.



இப்போ நாம் எங்கள் சிவகாடாச்சம் வாத்தியாரைச் சந்திப்போம். அவர் மனதில் தானே சிவன் என்ற எண்ணம்! அவரை வெள்ளிக்கிழமை சிவன் கோயிலில் தவறாமல் சந்திக்கலாம். சந்தித்த உடனே பேச்சுக் குடுக்கலாமென்று மட்டும் எண்ணிடாதேங்கோ. அவர் கண்மூடித் தியானமிருந்து முடித்து, அட்டாங்க நமஸ்காரம் செய்து எழுந்தபிறகுதான் உங்களை ஏறெடுத்தும் பார்ப்பார். உங்களது உடை அந்த இந்த மாதிரி இருந்தால் அவற்ற முகத்தில சுழிக்கிற சுழியே உங்களச் செருப்பால அடிக்கும். வீட்டு நம்பர் தொடக்கம், பேரப்பிள்ளையிண்ட பெயர்வரைக்கும் எண்சாத்திரம் பார்த்துத்தான் தெரிஞ்செடுத்தவர். உங்கட பெயரை வைச்சே குணங் குறி கண்டு விலத்தி வைச்சிடுவார் கவனம்! பிள்ளை குட்டிகள் கனடாக் காத்துப் பட்டு எக்கணம் கெட்டுக் குட்டிச்சுவராயிடுவாங்களோ எண்ட ஏக்கத்தில பொத்திப் பொத்தி வளர்த்தவர். வேற கவனம் திரும்பக்கூடாதெண்டே அடுத்தடுத்து சங்கீதம், நடனம், தமிழ் கிளாஸ் எண்டு ஏத்தி இறக்கினவர். இப்ப பேரப்பிள்ளைகள் தொட்டதுக்கும் "ஏன் எதுக்கெண்டு" குதர்கம் பேசிறதக் கண்டிச்சுக் களைச்சுப்போய் நிக்கிறார். அதுகள் ஐப்பாடும் லப்டொப்புமெண்டு அறைக்குள்ள புகுந்துகொண்டு நோண்டுறதப் பார்க்கப் பார்க்க இவருக்கு நெருப்புப் பத்துது.



டென்மாக்கிலிருந்து
மருத்துவர் வீ. கதிர்காமநாதன்

இப்பிடிப் பழங் கலாச்சாரத்தைக் கட்டிப்பிடித்துக்கொண்டு, வந்தேறிய நாட்டோடு ஒட்டாமல் வாழும் வாழ்க்கை வகையைத் தனியாகம் என்பர்.

தனியாக்கம் (Segregation)

தனியாக்கமானது கரைதலாக்கத்துக்கு நேர் எதிர்ப் போக்கு எனலாம். இவர்கள் கிணற்றுள் போட்ட கல்லுப் போல, அங்கிருந்து வந்த சடங்குகள் சம்பிரதாயங்களைக் கட்டிப்பிடித்துக்கொண்டு, மாறாமல் அப்படியே இருப்பார்கள். இவர்களைப் பொறுத்தவரை "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்ற மனப்பாங்குடன் தமது கலாசார விழுமியங்களை "கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முந்திய தமிழ் விழுமியங்கள்" என்ற தொனியில் தமது தமிழ் மொழி காலாசாரத்தின் பழமையைப் பற்றி இறும்பூதி நிற்பர். கனேடிய நவீன கலாசார அம்சங்களை அருவருக்கத்தக்க விலங்குவகைக் கலாசாரமாகத் தரக்குறைவாகப் பேசி மல்லுக்கட்டி நிற்பர்.

> பிள்ளை குட்டிகள் கனடாக் காத்துப் பட்டு எக்கணம் கெட்டுக் குட்டிச் சுவராயிடுவாங்களோ எண்ட ஏக்கத்தில பொத்திப் பொத்தி வளர்த்தவர், இப்ப பேரப்பிள்ளைகள் தொட்டதுக்கும் "ஏன் எதுக்கெண்டு" குதர்கம் பேசிறதக் கண்டிச்சுக் களைச்சுப்போய் நிக்கிறார்.

"உலோகாயத" முறை விழுமியங்களை முன்நிறுத்தி இயங்கும் கனேடிய தொழில் மயப்பட்ட இலத்திரனியல் கலாசாரப் பண்புகொண்ட "தனிமனித வாழ்வியல்" காலத்துக்கு ஒவ்வாததவை என்றும் சீரழிவுக் கலாச்சாரம் என்றும் மல்லுக்கட்டி நிற்பர். இந்தவகை காழ்ப்புணர்ச்சி மிக்க எதிர்மறை கருத்துப்பாங்கு அவர்களை கனேடியக் கலாசாரத்திலிருந்து வெகுதூரத்தில் நிற்க வைக்கிறது. இது அவர்களின் "தனியாக்கம்" என்ற இணைவாக்க செயற்பாட்டுக்கு அடிப்படையாக அமைகிறது. மேலைத்தேச சமூகவியல் ஆய்வுகள் இவ் வகையினரை "குப்பம் அல்லது சேரி (Glectto) உருவாக்கம் என்றும் சமாந்திர சமூகங்கள் (Parrallel Societies) அமைப்பாக்கம் என்றும் விபரிப்பர்.

இவர்களைப் பொறுத்தவரை கனடா என்பது தற்காலிகமாக தஞ்சமடைந்த நாடு. இங்கு காணப்படும் நவீனத்துவங்களை ஒதுக்கிவிட்டு, தமது கலாசாரத்தை இயன்றவரை பேணிப் பாதுகாத்து வளர்த்து வருவதுடன் தாய்நாட்டின் தொப்புள்கொடி உறவுவழி உறவுகளோடு தம் கலாசாரத்தை இணைத்துக்கொள்வதிலேயே நாட்டம் காட்டுவர். இவர்களது வாழ்வும் எண்ணமும், தமிழ் உணர்வைப் பேணுதல், தாய்நாட்டு கலாசார விழாக்களை இங்கு இயன்றவரை அப்படியே நடத்துதல், ஊர் கோயில்களின் பெயரில் கிளைக் கோயில் அமைத்தல், தம்மையொத்தோரை அடையாளங்கண்டு வட்டங்கள் அமைத்து தமக்குள் இவற்றைப் பேசி மகிழ்தல் என்பவற்றிலேயே கழியும். எடுத்ததற்கும் கேள்வி கேட்கும் பிள்ளைகளிடம் காரணம் தெரியாத சடங்குகளை நிர்ப்பந்திப்பதுதான் இவர்களின் மிகப்பெரிய சவால்.

இந்த வகையினர் வந்த நாளிலிருந்து இன்றுவரை ஊர் கோவில்களோடும் ஊர் நினைவுகளோடும் கனவுடன் வாழ்ந்து வருகிறார்கள். நல்ல நிலைமை வரும்போது திரும்பச் செல்லப்பேவதுபோல் ஓர் கற்பனையான ஆத்ம திருப்தியுடன் வாழ்பவர்கள். **(தொடரும்)**

அடுத்த இதழில் "ஒரங்கட்டலாக்கம்"

விளையாட்டு





இலங்கை அணியின் படுதோல்வி!

ICC உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் கால் இறுதிப் போட்டியில் மிகுந்த எதிர்பார்ப்புடன் களமிறங்கிய இலங்கை அணி ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களின் பிழையான தெரிவினால் முதல் ஓவரில் 3 புள்ளிகளுக்கு ஒரு விக்கட்டை இழந்தது. நம்பிக்கை நட்சத்திரமான டில்சனை 5 ஓட்டத்தில் இழந்தது. பின் களமிறங்கிய அனுபவம் வாய்ந்த சங்கக்கார மிக மெதுவாக புள்ளிகளைச் சேர்க்க ஆரம்பித்தாலும், தென்னாபிரிக்காவின் பந்து வீச்சும், அபாரமான பந்துத் தடுப்பும் மளமளவென்று விக்கட்டுகளை இழந்து இலங்கை அணி படுதோல்வி அடைந்தது.

ICC WORLD CUP 2015 ஒரு பார்வை

தென்னாபிரிக்காவின் அபாரமான போட்டி

தென்னாபிரிக்கா - நியுசிலாந்து அணிகளுக்கிடையிலான முதல் அரை இறுதிப் போட்டி கிரிக்கெட் ரசிகர்களை கதிரையின் நுனிக்கே கொண்டு சென்றது என்றால் அது மிகையாகாது. இடையில் ஏற்பட்ட மழை காரணமாக 50 ஓவர்களை 43 ஓவர்களாக D/L முறைக்கு அமைய குறைத்துக் கொண்டு இரு அணிகளும் மிகத் திறமையாக ஒருவருக்கொருவர் சளைக்காதவர்களாக ஆடியது கிரிக்கெட் இரசிகர்களுக்கு மிகவும் வரப்பிரசாதமாக அமைந்நது. தொடர்ந்து சிறந்த பந்துவீச்சும், களத்தடுப்பும் தங்கள் திறமையை தென்னாபிரிக்கா அணி காட்டத் தவறவில்லை. ஆனாலும் கிடைத்த சில (Run Out) முறையில் அவுட் ஆக்கும் சந்தர்ப்பங்களை தவறவிட்டதால் தென்னாபிரிக்கா அணி தோல்வியை தழுவிக் கொண்டது.





இந்தியாவின் தோல்வி

இந்தியா, அவுஸ்ரேலியாவை எதிர்த்து இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் உற்சாகத்துடன் களத்தடுப்பில் இறங்கியது. துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலியா அணி இந்திய அணியின் பந்து வீச்சுக்களை மிகவும் திறமையாக பொறுமையாக எதிர்கொண்டு மொத்தப் புள்ளியாக 328 எடுத்து இந்தியாவுக்கு நெருக்கடியைக் கொடுத்தது. இந்தியாவின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் Rohit Sharma 34 ரன்கள் இருந்தபோது ஆட்டமிழக்க நட்சத்திர நாயகன் Kohli 13 பந்துகளைச் சந்தித்து 1 ரன் எடுத்த போது ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த கெப்டன் டோனி வெல்லும் நம்பிக்கையை சிறிது இரசிகர்களுக்குக் கொடுக்கத் தவறவில்லை. 65 புள்ளிகள் எடுத்து ஆட்டமிழந்தார் என்றாலும் அவுஸ்ரேலியா அணியின் அபாரமான பந்து வீச்சினால் இறுதியில் இந்தியா தோல்வியைத் தழுவிக் கொண்டது.

இறுதிப் போட்டி





அரையிறுதிப் போட்டியில் தென்னாபிரிக்காவின் வெற்றியை அதிஷ்டவசமாக தட்டிப் பறித்த நியுசிலாந்து அணி இறுதிப் போட்டியில் அவுஸ்ரேலியாவுடன் களமிறங்கியது. உலகம் முழுவதும் வாழும் கிரிக்கெட் இரசிகர்களில் பெரும்பாலாரின் ஆதரவு நியூசிலாந்து அணிக்கு இருந்தது. அதற்கு மிக முக்கிய காரணம் நியூசிலாந்து அணி உலகக் கோப்பையை இதுவரை வெல்லவில்லை. இரு அணிகளுக்கும் மைதானத்தில் சமமான ஆதரவு இருந்தாலும் அவுஸ்ரேலியா அணி மிகவும் உற்சாகத்துடன் போட்டியை எதிர்கொண்டது. நியூசிலாந்து அணி முதல் துடுப்பெடுத்தாட்டத்தை தெரிவுசெய்து களமிறங்கினாலும் அணியின் கெப்டன் Brendon McCullum மூன்று பந்துகளை எதிர்கொண்டு பூச்சியத்துடன் ஆட்டமிழந்தது அவுஸ்ரேலியாவின் வெற்றிக்கு அடிகோலியது. நியூசிலாந்து அணி 183 புள்ளிகளுடன் சுருண்டு விழ, இரசிகர்கள் ஏமாற்றமடைந்தனர். கடைசியில் இறுதிப்போட்டி பலமான போட்டியில்லாமலேயே அவுஸ்ரேலியா அணி மீண்டும் உலக் கோப்பையைத் தட்டிச் சென்றது.

International Cricket Council

கனவுக் குழு Dream Team


நடந்து முடிந்த 2015 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் விளையாடிய சிறந்த வீரர்களை தெரிவுசெய்து ஒரு கனவுக்குழுவாக (Dream Team) உலகக் கிரிக்கெட் கவுன்சில் அறிவித்து உள்ளது. அதில் நியூசிலாந்தின் கப்டன் பிரண்டன் மெக்கல்லம் கெப்டனாகவும், இலங்கை சங்கக்காரா விக்கட் கீப்பராகவும் மாட்டின் குப்டில் (நியூசிலாந்து), கோரே ஆண்டர்சன் (நியூசிலாந்து), டேனியல் வெட்டோரி (நியூசிலாந்து), ட்ரெண்ட் பவுல்ட் (நியூசிலாந்து), ஸ்டீவன்சுமித் (அவுஸ்ரேலியா), கிளைன்மெக்ஸ்வெல் (அவுஸ்ரேலியா), மிட்செல்ஸ்டார்க் (அவுஸ்ரேலியா), டிவில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா), மோர்கல் (தென்னாபிரிக்கா), பிரண்டன் டெய்லர் (சிம்பாபே) ஆகிய வீரர்களைக் கொண்டுள்ளது.

IPL இந்தியன் பிரிமியர் லீக்

8வது ஐ.பி.எல் டி20 கிரிக்கெட் தொடர் இந்தியாவின் 12 மைதானங்களில் 8ம் திகதி முதல் மே மாதம் 24ம் திகதி வரை நடைபெறவுள்ளது. 7வது ஐ.பி.எல் தொடரில் நடப்பு சாம்பியனான கொல்கத்தா அணியின் கப்டன் கௌதம் கம்பீர் சாம்பியன் கிண்ணத்தை முறையாக மீண்டும் நடக்கவிருக்கும் விளையாட்டு தொடருக்கு அறிமுகப்படுத்தி முதல் போட்டி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படும். இலங்கையின் கிரிக்கெட் நட்சத்திரங்களான சங்கக்காரா, ஜெயவர்த்தனா இதுவரை எந்த அணிகளுக்காகவும் விலை கொடுத்து வாங்கப்படவில்லை.



இலங்கை கிரிக்கெட் இனவாதத்திற்கு சாட்சியமான சாந்திகுமார்



உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் எம் பிறந்த பூமி இலங்கை அணி நல்ல வீரியத்துடன் இருந்தும் அநியாயத்துக்கு தோற்றுப்போனபோது நம்ம நாட்டு அணியாச்சே என்ற கவலை இலங்கையருக்கு ஏற்பட்டுத்தான் இருக்கும். அதில் வியப்பில்லை. ஆனால் இலங்கையின் இனவாத அரசியல் இத்தகைய விளையாட்டிலும் விளையாடியிருப்பது பலருக்குத் தெரியாது.

இவ் உலகக் கிண்ணப் போட்டி நிகழ்ந்துகொண்டிருக்கும்போது, இலங்கை கிரிக்கட் அணியின் முன்னாள் உறுப்பினரான திரு. காந்தரட்ணம் சாந்திகுமாரிடம் இக் கிரிக்கெட் நிலவரம் குறித்து அளவலாவியபோது அவரின் அடிமனதில் இருந்த ஒரு காயம் தெரிந்தது.


யாழ் சென்றல் கல்லூரி கிரிக்கட் அணியில் வேகப் பந்து வீச்சாளராக ஜொலித்த சாந்திக்குமார் 1972ல் யாழ் பாடசாலைகளுக்கான கிரிக்கெட் அணிக்கு காப்டனானார், அப்போது இலங்கை வந்த அவுஸ்ரேலிய அணியுடன் அபாரமாக விளையாடி 55 ரன்களில் 7 விக்கெட்டுகளை வீழ்த்தி, அவுஸ்ரேலிய அணித் தலைவர் செஸ்லா பென்னட்டால் "Found a best fast baller in Sri Lanka" (மிகச் சிறந்த வேகப்பந்து வீச்சாளரை நான் இலங்கையில் கண்டேன்) என்று பாராட்டப் பெற்றார்.

1977ல் இலங்கை பாடசாலைகள் அணிக்கு தெரிந்தெடுக்கப்பட்டார். அவருடன் டுலுப் மென்டிஸ் (பின்னாளில் இலங்கை அணித் தலைவர்) பந்துல வர்ணபுர, ரணில் அபயநாயக்க போன்ற முன்னணி வீரர்கள் அவ் அணியில் இருந்தனர். இந்திய அணியுடன் நிகழ்ந்த போட்டியில் அன்றைய புகழ்மிக்க இந்திய அணித்தலைவர் வெங்கட் ராகவனை வீழ்த்தி, 32 ரன்களுக்கு 3 விக்கெட் என்ற சாதனை ஏற்படுத்தி பத்திரிகைகளால் பாராட்டப்பட்டிருந்தார்.

1977ல் அவர் இலங்கை கிரிக்கட்டுக்கான தேசிய அணிக்கான விளையாட்டு வீரர்களின் குழுமத்தின் 19 உறுப்பினர்களில் ஒருவராக தேர்ந்தெடுக் கப்பட்டார். ஆனால் அதன்பின் இனவாதம் அவரது திறமையில் கைவைத்தது.

இலங்கை அணி வீரர்களின் பந்து வீச்சாளர் களுக்கான தர வரிசையில் அவர் தொடர்ந்து முன்னிலை யில் இருந்தார். ஆனாலும் 1977 முதல் 1981ம் ஆண்டு அவர் விரக்தியுடன் வெளி யேறும்வரை இலங்கை அணியின் எந்தவொரு மெட்சிலும் அவருக்கு விளையாட சந்தர்ப்பமே வழங்கவில்லை.

இதேவேளை 19 உறுப்பினர் களாக இருந்த வீரர்கள் குழு 31 உறுப்பினர்கள் வரை அமைச்சர் கள் மற்றும் செல்வாக்கு மிக்க வர்களின் தலை யீடு களால் அதிகரிக்கப்பட்டது. அப்படிப் புதிதாக



இணைக்கப்பட்டவர்கள் உட்பட 30 பேருக்கும் விளையாட சந்தர்ப்பம் வழங்கப்பட்டும் சாந்திக்குமார் மட்டும் இறுதிவரை ஓரங்கட்டப்பட்டார். 1977ல் நிகழ்ந்த உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியும் அதில் ஒன்று.

இதில் பரிதாபம் என்னவென்றால் 1980ல் சாந்திகுமாரின் திறமையைக் கண்டு இங்கிலாந்தின் ஹோர் விச் லங்கா ஷெலிக் நிறுவனம் அவரை தமது அணியில் இணையக் கேட்டனர். அந்த அழைப்பை 81ம் ஆண்டுவரை நீடித்திருந்தனர். ஆனால் சாந்திகுமாரோ இலங்கை அணிக்காக அதை நிராகரித்துவிட்டு நின்றும் 81ம் ஆண்டிலும் அவரை இலங்கை அணியில் விளையாட அனுமதிக்கவில்லை. அவர் மிகுந்த விரக்தியுடன் நாட்டை விட்டு வெளியேறி பாரின் சென்று பாரின் நாட்டு தேசிய கிரிக்கெட் அணியின் காப்டனாக விளையாடினார். அப்போது பாரினில் மிக மதிப்புக்குரிய கனவான்கள் பட்டியலில் ஒருவராக அந்நாட்டு "கல்ஃப் டெய்லி நியூஸ்" பத்திரியால் தெரிவு செய்யப்பட்டு மதிப்பளிக்கப்பட்டார்.

1986ல் கனடா வந்தபின் கனேடிய கிரிக்கெட் அணியில் இணைத்துக்கொள்ளப்பட்டு, ஐசிசி ட்ரோபிக்கான மெட்சுகள் உட்பட பல மெட்சுகளில் விளையாடினார். 98ல் வட அமெரிக்க அம்பயார் அசோஸியேசனால் நடுவராக தெரிவு செய்யப்பட்டு சர்வதேச கிரிக்கட் மெட்சுகளுக்கு அம்பயராக செயலாற்றி வருகிறார். 2007ல் கனடாவின் தேசிய ஜூனியர் அணிக்கான பயிற்றுவிற்பாளராகத் தெரிவானார். சிலோன் கிரிக்கெட் அகாடமி எனும் நிலையம் ஒன்றை ஸ்தாபித்து 6 வயது முதல் 19 வயதுவரையானவர்களுக்கு கிரிக்கெட் பயிற்சி வழங்கி வருகிறார். இதேவேளை, டொரென்டோ மற்றும் டிஸ்ட்ரிக் கிரிக்கெட் அசோசியேஷனிலும் வாராந்தப் பயிற்சி வழங்கி வருகிறார்.

சொந்த நாட்டில் மதிப்பளிக்கப்படாத அவரது திறமையை வந்து சேர்ந்த நாடுகள் மெச்சிப் பாராட்டின. இருந்தும் அவருக்கு அன்று பட்ட காயம் இன்னும் வலித்துக்கொண்டுதான் இருக்கிறது.

(தற்போது கனடாவில் ஒரு பாதிரியாராக சேவையாற்றிவரும் அவரை என்டிபி கட்சி ஸ்காபுரோ ரூஜ் பார்க் தொகுதி பாரளுமன்ற வேட்பாளராக நிறுத்தியுள்ளதென்பது ஒரு மகிழ்ச்சியான செய்தி) ●

வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்கா வரை

கப்பலோட்டிய தமிழர்கள்

அத்தியாயம் 02

வல்வெட்டித் துறை துறைமுகத்தில் இரண்டாம் மகா யுத்தத்திற்கு முன்பாக சுமார் அறுபது பெரிய பாய்மரக் கப்பல்கள் இயங்கிக் கொண்டு இருந்தன. மூவாயிரத்திலிருந்து பதினாறாயிரம் வரையான மூடைகள் ஏற்றக்கூடிய பெரும், பெரும் பாய்மரக்கப்பல்கள் திரைகடலோடி வாணிபம் செய்து கொண்டு இருந்தன. அந்தக் கப்பல்களில் தண்டையல்களாக இருந்தவர்கள் முழுக்க முழுக்க வல்வெட்டித்துறைவாசிகள் தான்! கப்பல் செலுத்துவதில் நன்கு அனுபவம் பெற்று, மாலுமி சாத்திரத்தை கற்றுத் தெரிந்தவர்களையே தண்டையல்கள் என்று அழைத்தார்கள். இவர்கள் கப்பலொன்றின் கப்டனுக்கு நிகரானவர்கள்.

– ஏ.கே. இராஜகோபால் –

தண்டையல் என்றால் எப்படி இருப்பார் என்பதனை விளக்க ஒரு உதாரணம்: வல்வெட்டித்துறைத் தண்டையல்களில் ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறந்தவர் நாராயணபிள்ளைத் தண்டையல்! பர்மாக்காரனுக்குச் சொந்தமான பாய்மரக் கப்பலில், அவர் அப்போது தண்டையல்! இந்தப் பெரிய கப்பலில், இருபத்தினான்கு பர்மாக்காரர்கள், இவருக்குக் கீழே கடலோடிகளாக வேலை செய்து கொண்டிருந்தார்கள்! தமிழர் ஒருவர் மட்டும் உதவியாளராக இருந்தார். கணக்குப் பார்ப்பதற்கு ஒரு சீன இளைஞர்!

பினாங்குக்குக் கப்பலைச் செலுத்திக் கொண்டிருந்தார் நாராயணபிள்ளை! பதினாறாவது மைல் தூரத்தில், ஒரு மணல்திட்டு. கப்பல் தரை தட்டிவிட்டது! நங்கூரமிடப்பட்டது.! கப்பல் புறப்படுவது முதல், கடலோடிகளின் கடமைகள் வரையான சகல விடயங்களும் தண்டையலின் உத்தரவின் பெயரில்தான் நடக்க வேண்டும். திடீரென்று, நங்கூரமிடப்பட்ட தனது கப்பல் புறப்படுவதற்கு ஆயத்தமாக நங்கூரம் எடுக்கப்பட்ட விபரத்தை தெரிந்து கொண்டார். அவருக்குக் கீழே பணியாற்றும் நேரடி ஊழியனான பர்மாக்காரன் ஒருவன் நங்கூரத்தை அகற்றியதைத் தெரிந்து கொண்டார். ஆத்திரம் பொத்தென்று வந்தது தண்டையலுக்கு! அடுத்த வினாடி நங்கூரத்தை மீண்டும் போடும்படி உத்தரவு பிறப்பித்தார் தண்டையல். குறித்த பர்மாக்காரனை உடனடியாகக் கரையில் கொண்டு போய் விட்டுவரும்படி கட்டளையிட்டார்! கப்பலினுள்ளே இருந்த சிறிய படகொன்று வெளியே எடுக்கப்பட்டுக் கடலில் மிதந்தது! இருபத்திமூன்று பர்மாக்காரர்களும் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

கப்பல் கட்டுவதிலும், கப்பலோட்டுவதிலும் வல்வெட்டித்துறை மக்கள் சிறப்பு மிக்கவர்கள் என்பதைப் பல வெளிநாடுகளே ஒப்புக் கொண்டுள்ளன.
இந்தியா, பர்மா, பாகிஸ்தான், மலேசியா, இந்தோனேசியா, அரேபியா போன்ற நாடுகள் வல்வெட்டித்துறையின் கீர்த்தியை அங்கீகரித்துள்ளன.
ஆதாரபூர்வமாகவே இதனைக் குறிப்பிடுகின்றேன்.
உலகத்தின் எந்த ஒரு நாட்டிலும் கட்டப்பட்ட கப்பலையும், "லோயிட்ஸ்" உலக ஸ்தாபனத்தில் அப்போது பதிவு செய்ய வேண்டும்.

வல்வெட்டித்துறையில் கட்டப்பட்ட கப்பல்கள் எல்லாமே முறைப்படி அந்தந்தக் காலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. வல்வெட்டித்துறை ஒரு விசேட துறைமுகமாகவும், கப்பல் கட்டும் தளமாகவும், கடலோடிகள் வசிப்பிடமாகவும் இருந்ததாக "வே ஒவ் பெங்கோல் பைலட்" என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூலின் பிரதிகள் கொழும்பு "சிப்பிங்" அலுவலகத்திலும், துறைமுக அதிகார அலுவலகத்திலும், சுங்க இலாகாத் தலைமைப்பீடத்திலும் இன்னும் இருக்கின்றன.

"அத்திலாந்திக் கிங்!"

பன்னிராயிரம் தொன் எடையுள்ள கப்பல். ஆங்கிலேய வர்த்தக நிறுவனமொன்றுக்குச் சொந்தமான பெரிய கப்பல். சாமான்களை ஏற்றிக் கொண்டு வந்தபோது, திடீரென்று, திருகோணமலைத் துறைமுகத்திற்குச் சமீபமாக மூழ்கி விட்டது! மீட்க முயன்ற அக்கப்பல் ஊழியர்களும், உரிமையாளரும் மனம் தளர்ந்தனர்! அந்த நேரத்தில் கைகொடுத்து உதவினார் வல்வெட்டித்துறைக் கப்பல் உரிமையாளர் ஒருவர்! கப்பல் கட்டும் கலையிலும், மாலுமி சாத்திரத்திலும், வான சாத்திரத்திலும், அறிவும் ஆற்றலும் பெற்ற வெங்கடாசலம் என்ற அவர் மூழ்கிய நிலையிலேயே கப்பலை விலைகொடுத்து வாங்கினார்! எவர்தான் இப்படித் துணிந்து மூழ்கிய கப்பலை விலை கொடுத்து வாங்குவார்கள்? ஆங்கிலேயரினால் மீட்கமுடியாத, மூழ்கிய அந்தப் பென்னாம் பெரிய இராட்சதக் கப்பலை வல்வெட்த்துறையான் மீட்டு, மிதக்கவிட்டு, அலைகடலின் நடுவே அதனை மீண்டும் ஓடவிட்டான்.
நூறு ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த சம்பவம்.
கப்பலோட்டிய வல்வெட்டித்துறைத் தமிழன் வீரத்துக்கு இப்படி எத்தனையோ "சாம்பிள்"கள்!

வல்வெட்டித்துறை!

இந்தப் பெயர் எப்படி வந்தது?
றோமுக்கும், கிரேக்கத்திற்கும், எகிப்திற்கும், இந்தத் துறைமுகத்திலிருந்து "வெல்வெட்" என்ற பட்டு ஏற்றுமதி செய்யப்பட்ட காலத்திற்குப் பிறகு இப்பெயர் சூட்டப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது! வேறு நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட இந்த "வெல்வெட்", வல்வெட்டித்துறைக் களஞ்சியங்களில் நிறைத்து வைக்கப்பட்டு றோம், எகிப்து, கிரேக்கம் ஆகிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டனவாம். தரமான "வெல்வெட்"டை எடுத்துக் கொண்டு வருவதில் கைவரப் பெற்றவர்களாக விளங்கினார்கள் இந்த ஊர் வர்த்தகர்கள்!
"வெல்வெட்"டுக்குப் பெயர்போன இடமாக இவ்விடம் திகழ்ந்ததினால், "வெல்வெட்டித்துறை" என அழைக்கப்பட்டு, நாளடைவில் வல்வெட்டித்துறை எனப் பெயர் பெற்றதாகக் கூறப்படுகின்றது!
ஏதோ ஓர் உண்மை இருக்கத்தான் செய்கிறது.

—பயணம் தொடரும்

Real estate rental property

If you own property and rent it as a source of revenue, the income or loss must be reported on your tax return. If a net rental loss results, it can generally be deducted against other sources of income for the year. Expenses you incur to earn rental revenue can generally be deducted against this revenue. These expenses can include mortgage interest, property taxes, insurance, maintenance and repairs, utilities, advertising and management fees.



Business expenses

In general terms, all reasonable expenses you incur to earn business income are deductible in computing business income for tax purposes. However, there are

some specific restrictions:

- For business meals and entertainment, you can generally only claim a maximum of 50% of the expenses as a business expense.

- If you use your car for your business, you can claim business-related operating costs, including fuel, maintenance, repairs, licence and insurance. In addition, you can claim depreciation or lease costs subject to prescribed maximum amounts. Keep in mind that the business portion of these expenses will generally be computed by reference to business kilometres over total kilometres driven in a year.

Driving between your home and your business premises is not considered business travel. To support your claim for automobile expenses, keep a record of your total kilometres and business kilometres driven in the year.

Car allowance

If you're required to use your own car for business, the reasonable per-kilometre allowance you're paid is not taxable. But you must record the distance you travel.

Otherwise, the allowance is not considered reasonable and must be included in your income.

If your employer doesn't provide a tax-free per-kilometre allowance, or if you include your allowance in income because it's not reasonable, you may be able to deduct certain car expenses when calculating your income.

Home office

If you work from your home, you may be able to claim limited home office expenses. This is possible if you perform most of your employment duties from your home workspace, or you use the home workspace exclusively for job-related purposes and regularly for meetings with customers, clients or others.

The only expenses you may deduct are a proportionate share of rent relating to your home office and, if you own the home, a proportionate share of maintenance costs, such as utilities, cleaning supplies and minor repairs. As a homeowner, you cannot deduct notional rent, mortgage interest, insurance or property tax, unless you're a commission salesperson, in which case you may be able to deduct part of your insurance and property tax.

Automobile

You may claim the costs of operating a car, including capital cost allowance, if you've driven it for business purposes and/or it's available for business use.

The total cost of a car on which you can claim capital cost allowance is generally restricted to $30,000 plus goods and services tax/harmonized sales tax (GST/HST) and provincial sales tax (PST). Related interest expense is limited to $300 per month for cars acquired after 2000. If you lease your car, you can generally deduct lease costs of up to $800 per month, plus GST/HST and PST.

You cannot deduct car expenses if you're in receipt of a tax-free per-kilometre allowance, which is excluded from your income. If you received the allowance but your reasonable business-related car expenses exceed this amount, consider including the allowance in income and deducting the expenses.

Child-care expenses

Only the lower-income spouse or partner can deduct child-care expenses, unless they were infirm, confined to an institution, living separately because of a marital breakdown, or in full-time attendance at a designated educational institution in the year.

The deduction limit is $7,000 for each child under the age of seven and $4,000 for those aged seven to 16, inclusive. And if the child is eligible for the disability tax credit, the limit is $10,000. The total deduction cannot exceed two-thirds of the claimant's earned income.

► Ensure that all child-care payments for the year will be made by 31 December.

► Retain receipts supporting child-care expenses indicating the recipient's name and, where applicable, social insurance number.

► If you're a single parent attending school, you may be entitled to claim a child-care expense deduction against any source of income.

Child tax benefit



The Canada Child Tax Benefit (CCTB) system, consisting of a base benefit and a National Child Benefit Supplement (NCBS), is intended to provide assistance to lower-income families with children. If you meet an income test, you'll receive a non-taxable payment for each child under 18 years of age. For families with a disabled child, the Child Disability Benefit supplements child tax benefits.

The child tax benefit is eliminated once family net income exceeds a certain amount.

Children's fitness tax credit

You can claim a tax credit for up to $500 in fees for eligible fitness programs for each child who is under age 16 at any time during the year. Generally, an

eligible program is one that is ongoing and includes a significant amount of physical activity. The federal credit is calculated by multiplying the eligible amount by the lowest marginal tax rate.

An enhanced credit may be claimed for children under age 18 who are eligible for the disability tax credit.

Children's arts tax credit

You can claim a tax credit for up to $500 in fees in an eligible program of artistic, cultural, recreational or development activities for each child who is under age 16 at any time during the year. Generally, eligible expenses include fees paid to a qualifying entity for registration or membership of a child in an eligible program that is weekly and lasts a minimum of eight consecutive weeks or, in the case of camp, a minimum of five days.

The credit is structured in the same manner as the children's fitness tax credit. An enhanced credit may be claimed for children under age 18 who are eligible for the disability tax credit.

Tax-free savings account

Every Canadian resident (other than US citizens and green card holders) aged 18 and older should include a tax-free savings account (TFSA) as part of their investment strategy. The tax benefit of these registered accounts isn't in the form of tax-deductible contributions, but in the tax-free earning on invested funds.

For US citizens and green card holders, the decision is more complex, as income earned in the TFSA must be reported on the individual's US personal income tax return, so the tax savings may be limited and there will be additional US filing disclosures.

The mechanics of the TFSA are simple:

- You can contribute up to $5,500 annually ($5,000 prior to 2013). If you contribute less than the maximum amount in any year, you can use that unused contribution room in any subsequent year. The cumulative contribution limit for 2014 is $31,000.

- Income and capital gains earned in the TFSA are not taxable, even when withdrawn.

- You can make withdrawals at any time and use them for any purpose without attracting any tax.

- Any funds you withdraw from the TFSA — both the income and capital portions — are added to your contribution room in the next year. This means you

can recontribute all withdrawals in any subsequent year without affecting your allowable annual contributions. Recontribution in the same year may result in an overcontribution, which would be subject to a penalty tax.

Old Age Security

The Old Age Security (OAS) pension is a monthly payment available to most Canadians aged 65 and older. In order to receive benefits, you must apply for OAS with Service Canada. You should apply six months before you turn 65. However, if you apply at a later date, the pension is payable up to 11 months retroactively from the date the application is received.

Starting 1 July 2013, Canadians may voluntarily defer receipt of OAS benefits for up to five years. Those who take this option will receive a higher, actuarially

adjusted pension.

You can download an application package from Service Canada's website or you can order an application by mail.

Two other programs can provide you with additional income. The Guaranteed Income Supplement (GIS) and the Allowance program were designed to provide further assistance to low-income seniors. For more information, see the Service Canada website.

Charitable donations

You're entitled to a federal non-refundable tax credit of 15% on the first $200 of charitable donations, and 29% on donations over $200.

A first-time donor will be entitled to a one-time federal credit equal to 40% for money donations of $200 or less, and 54% for donations between $200 and $1,000. An individual is considered a first-time donor if neither the individual nor the individual's spouse or commonlaw partner has claimed a charitable donation tax credit (or the new first-time donor's super credit) after 2007. The maximum donation amount that may be claimed per couple is $1,000. This one-time credit applies to donations made on or after 21 March 2013 and before 2018.

The maximum annual claim for charitable donations is 75% of your net income for the year. Any donations beyond that may be carried forward for five years. In the case of a donation of property, the donation limit can be as much as 100% of the resulting taxable capital gain (or recapture, in the case of depreciable property) included in income.

In the year of your death and in the immediately preceding year, the donation limit rises to 100% of your net income. If you make a "gift in kind" (e.g., capital property rather than cash), special rules may apply. Unless you elect otherwise, the property is deemed to be disposed of at fair market value for capital gains purposes and you're considered to have made a donation for the same amount.





இவன் மாட்டு வண்டியின்மேல் அமர்ந்துகொண்டு தன் துணி மூட்டையைத் தலைமேல் வைத்து, பயணம் செய்து கொண்டிருந்தான், ஏன் அவ்வாறு செய்கிறாய்? எனக் கேட்டதற்கு என்னைச் சுமந்து செல்லும் மாடுகளுக்கு வலிக்கக்கூடாதல்லவா? அதற்குத்தான் என்றான். "இவன்தான் நம் நாட்டின் ஐந்தாவது மிகப் பெரிய முட்டாள்."" என்றார் அமைச்சர்.

"சரி அடுத்து"

"இதோ இவன் தன் வீட்டுக் கூரைமேல் வளர்ந்த புல்லை மேய்க்க, எருமையைக் கூரைமேல் இழுத்துக் கொண்டிருந்தான், இவன்தான் நம் நாட்டின் நான்காவது மிகப் பெரிய முட்டாள்"

"களிப்படைதோம் அமைச்சரே! களிப்படைதோம்! சரி, எங்கே அடுத்த முட்டாள்?"

"அரசவையில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் எவ்வளவோ இருக்கும்போது, அதையெல்லாம் விட்டுவிட்டு முட்டாள்களைத் தேடி, கடந்த ஒரு மாதமாய் அலைந்துகொண்டிருந்த நான்தான் மூன்றாவது முட்டாள்."

மன்னருக்குச் சிரிப்பு தாங்கவில்லை, விழுந்து விழுந்து சிரித்தார். பின்னர் "அடுத்தது" என்றார்.

""நாட்டில் எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கும்போது அதைக் கவனிக்காமல் முட்டாள்களைத் தேடிக் கொண்டிருக்கும் நீங்கள்தான் இரண்டாவது" என்றார் அமைச்சர்.

ஒரு நிமிடம் அரசவையே ஆடிவிட்டது. யாரும் எதுவும் பேசவில்லை.

"உமது கருத்திலும் நியாயம் உள்ளது. நான் செய்ததும் தவறுதான்" என ஒத்துக் கொண்டார் மன்னர்.

"சரி எங்கே முதலாவது முட்டாள்?"

அமைச்சர் சொன்னார்."மன்னா! அலுவலகத்திலும், வீட்டிலும் எவ்வளவோ வேலைகள் இருந்தாலும் அதையெல்லாம் விட்டுவிட்டு இந்த மொக்கையான ஜோக்கைப் படித்து நாட்டின் மிகப் பெரிய முட்டாள் யாரென்று தேடிக் படித்துகொண்டிருக்கிறாரே இவர்தான் அந்த முதல் முட்டாள்!"

அட ஆத்தி, கடைசியில் நம்மளையே முட்டாளாக்கிட்டாங்களே என்கிறீங்களா, இது முட்டாள் மாதம்தானே, ஆயிட்டாப் போச்சு!

நாட்டை ஆண்டுகொண்டிருந்த மன்னருக்குத் திடீரென ஒரு சந்தேகம் உதித்தது. உடனடியாக அமைச்சரை வரவழைத்தார்.

"நான் இந்த நாட்டை இவ்வளவு நன்றாகவும், புத்திசாலித்தனத்துடனும் ஆண்டு வருகிறேன், ஆனால் இந்த நாட்டிலும் முட்டாள்கள் இருப்பார்கள் அல்லவா?"

"ஆம் மன்னா!"

"அப்படியானால் அவர்களில் முதல் ஐந்து முட்டாள்கள் யார்?? அவர்களைத் தேடிக் கண்டுபிடித்துக் கூட்டிக் கொண்டு வருவது உம் பொறுப்பு" என்றார்.

அமைச்சருக்கு ஒன்றுமே புரியவில்லை, புத்திசாலியைக் கொண்டு வரச் சொன்னால் ஏதாவது போட்டி வைத்து வெற்றியாளரைக் கொண்டு வரலாம். முட்டாளைக் கொண்டு வரச் சொன்னால்?? என்ன செய்வது சொன்னது மன்னராயிற்றே, "சரி மன்னா" என்று ஒத்துக் கொண்டார்.

ஒரு மாதம் நாடு முழுவதும் பயணம் செய்து இரண்டுபேரை மட்டும் கூட்டிக்கொண்டு வந்தார். அதைப் பார்த்ததும் மன்னர், "அமைச்சரே உமக்குக் கணிதம் மறந்து விட்டதோ??"

"இல்லை மன்னா! முதலில் நடந்ததை விளக்க அனுமதிக்க வேண்டும்!" என்றார் அமைச்சர்.

"தொடரும்" என்றார் மன்னர்.

"மன்னா! நான் நாடு முழுவதும் சுற்றும்போது,

மஹாகவி குறும்பா

ஈழத் தமிழர் கவித்துவத்துக்கு தன்னிகரற்ற சான்றாக விளங்கிய முன்நிலைக் கவிஞர் மஹாகவி. ஈழத் தமிழ் இலக்கியத்தில் இடதுசாரிப் போக்குகள் வலுப்பெற்று முற்போக்கு இலக்கியமென்ற பெயரில் கோலோச்சிய நிலைமைகளில் செயற்பட்ட குழுவாதப் போக்குகள், தனித்துவமாக நின்ற இவரின் கவித்துவத்துக்கு அன்றைய காலகட்டத்தில் உரிய இடம் வழுங்கவில்லையென்பது வேதனை தருவது. பாரதிக்கு அன்று நிகழ்ந்ததுதான் இவருக்கும் நிகழ்ந்தது. இன்றாவது இத் தவறை நாம் உணர்ந்துகொண்டால் சரி. மகாகவியின் குறும்பாக்களை இங்கே தருகிறோம்.



தோசை சுட்டுச் சுட்டு வைத்தாள் பேதை
தொடர்ந்து கதைத் துண்டிருந்தான் மேதை
ஆசை உரையாடலிலே!
ஆயினும், பின்னர் கிடந்தோர்
மாசம் உழன்றான்... வயிற்று வாதை

இதோ எங்கள் சினிமா!

– திரை விலக்குபவர் பாஸ்கி ரி ராஜ் –

சென்றதடவை கிளைமெக்ஸ் என்றால் என்ன என்பது பற்றிக் கூறியிருந்தேன். அந்தக் கிளைமெக்ஸ்பற்றி இன்னொரு முக்கியமான மெட்டர் உண்டு. - அதுதான் Obligatory Scene. அடுத்த தடவை சொல்கிறேன் என்றும் சொல்லியிருந்தேன். சொல்லியாக வேண்டுமல்லவா. நீங்கள் ஒரு திரைப்படத்தைப் பார்க்கும்போது, அதன் செட்டிங் எங்லாம் முடிந்ததும், அதாவது இவர்கள் யார் யார், இங்கே என்ன பிரச்சினை என்று சித்திரித்தபின், உங்களுக்கு பிரச்சினை எப்படி முடிக்கப்படும் என்ற கேள்வி உதயமாகுமல்லவா? அந்தக் கேள்விக்குப் பதிலாக உங்கள் மனம் ஒரு காட்சியைத் தேடும். அக் காட்சியின் பெயர்தான் ஒப்லிகேட்டரி சீன். அதாவது டைரக்டர் உங்களுக்கு கட்டாயமாக வழங்க வேண்டிய காட்சி என்பது அதன் பொருள். அதைக் காணாமல் இத் திரைப்படத்தைப் பார்த்த திருப்தி உங்களுக்கு ஏற்படவே போவதில்லை. அக் காட்சியையே டைரக்டர் கிளைமெக்ஸில் உங்களுக்கு வழங்குவார். ஆனால் அத்தகைய காட்சியை ஏற்கெனவே உங்கள் மனக்கண் தன் எதிர்பார்பில் உருவாக்கி வைத்திருக்கும். இப்போது திரைப்படத்தின் கிளைமெக்ஸில் டைரக்டர் தரும் காட்சி உங்கள் எதிர்பார்ப்பில் மனக்கண் உருவாக்கி வைத்திருக்கும் காட்சியை விட அசத்தலாக அமைந்திருந்தால் நீங்கள் ஆஹா என்பீர்கள். சொதப்பலாக அமைந்திருந்தால், "அடப் போய்யா" என்பீர்கள்.



இயக்கம்: சேரன்

நடிப்பு: சர்வானந்த், நித்யா மேனன், பிரகாஷ் ராஜ், சந்தானம்

இசை: விபின்


இத்திரைப்படம்தமிழ்சினிமாஉலகில்பேசுபொருளாகியதற்கு இதன் சவால் மிக்க விநியோக முறை ஒரு காரணம். தியட்டர்களில் வெளியிடாமல் டிவிடியாக நேரடியாக வீடுகளைச் சென்று அடையும் வகையில் வெளியிட்டுள்ளார் சேரன். இது தியட்டர் உரிமையாளர்களுக்கு ஒரு கனமான அடி. சிறிய படங்களுக்கு தியட்டர்களை முடக்கிவைத்துக்கொள்ளும் கெடுபிடிகள் உச்சமைடைந்து, விநியோகஸ்தர்கள் அடிமாட்டு விலைக்கு அப் படங்களைப் பேரம்பேசும் நிலையில் சேரன் கையாண்ட இத்தகைய உத்தி அவருக்கு எதிர்பார்ததற்கு மேலான வெற்றியை ஈட்டிக்கொடுத்துள்ளது. ஆனால் தியட்டரில் படம்பார்க்கும் அந்த பூரணமான அனுபவம் இதில் கிடைக்கப்போவதில்லை. அதுவும் சிறிய தொலைக்காட்சிப் பெட்டிகளையே அதிகம் கொண்டுள்ள சராசரி மக்களுக்கு.

திரைப்படத்துக்கு வரும்போது, இதில் சின்னத்திரைக்குரிய தன்மைகள்- ஆங்காங்கே காணக்கிடைக்கின்றன. குறிப்பாக, தந்தை மகன் உறவு, வீட்டுக்குள்ளான நிகழ்வுகள் போஎ்றவற்றில். அதற்காப்பால், திரைக்கதையில் கதைப் பொருள் உண்மைக் கதையை ஒட்டியது எனும்போது மனது வலிக்கிறது. ஒரு சில வருடங்களில் மரணிக்கப்போவதை உணர்ந்துகொண்ட ஒரு இளைஞன் என்ன செய்வான்? மரணத்தை எண்ணிக் கலங்கி யபடியே எஞ்சிய வாழ்நாளையும் கழிப்பானா? இங்கே, இவன் தன் ஒவ்வொரு வினாடியையும் வீணாக்காது தன் குடும்பம் நண்பர்கள் யாவருக்கும் எத்தனை அளவு உதவ முடியுமோ அத்தனையையும் செய்ய முயற்சிக்கிறான். தான் இல்லாதபோதும் அது நிலைக்க எண்ணுகிறான். அதற்காக அவன் பல தொழில் முயற்சிகளில் இறங்கி பணம் சம்பாதிக்கிறான். சவால்களை ஏற்றுக் காலத்தை வீணாக்காது, சாதுரியமாக முடிந்ததை ஈட்டிக்கொள்ளப் பார்க்கிறான். இவற்றுக்கெல்லாம் பின்னால் அவனது மரணத்துக்கான கடிகார முள் ஓடிக்கொண்டிருப்பதே காரணம் என்பதை இறுதியில் உணரும்போது அவனது அத்தனை செயல்களையும் ஒத்துக்கொள்ள வைக்கிறது. திரைப்படத்துக்கு பெரியதோர் கனம் ஏற்பட்டுவிடுகிறது. ஆனாலும் திரைப்படத்தில் சுட்டிக்காட்டக்கூடிய குறைபாடுகள் எவையென்றால், கதை நகர்த்தல் பெரிய திருப்பங்கள் இல்லாமல் போய்க்கொண்டிருப்பது, கிளைமாக்ஸ் என்ற பாரிய மாற்றம் நிகழும் உச்சக்கட்டம் இல்லாதிருப்பது, அவனது முடிவு பற்றிய விடம் வெளித்தெரிந்த கையோடு படத்தை நிறுத்திக்கொள்ளாமல் படம் தொடர்வது, எனலாம். இருந்தாலும் திரைப்படம் மனமொன்றிப் பார்க்கக்கூடியதாக உள்ளது.



கனடாவிலிருந்து தென்னிந்திய கொலிவூட் திரையுலகுக்கு இசையமைப்பாளராக பிரவேசித்து பல படங்களுக்கு இசையமைத்துவரும் எஸ்.ஆர். ரவிப்பிரியனின் இசையில் விரைவில் வெளிவரவுள்ள தென்னிந்தியத் திரைப்படம் சாந்தன். இவர் இசையமைத்த முன்னைய திரைப்படமான மேகம் நூறு நாட்கள் ஓடியமை குறிப்பிடத்தக்கது. சாந்தன் திரைப்படத்தில் பாடலாசிரியராக, வாத்தியக் கலைஞர்களாக என 6 இலங்கைத் தமிழ்க் கலைஞர்களுக்கு தனது இசையமைப்பில் சந்தர்ப்பம் வழங்கியுள்ளார். சாந்தன் படத்தின் டைரக்டர் சாம்ராஜ். தயாரிப்பாளரும் கதாநாயகனுமாக கே. மாதவராஜ். அண்ணன் தம்பி பாசத்தை மையமாக வைத்து உருவாக்கப்பட்டுள்ளது திரைக்கதை.

திரைக்கதை பட்டறை



கனேடிய தமிழ் திரைப்பட கலைஞர் ஒன்றியத்தின் (CTFAA) ஏற்பாட்டில் பாஸ்கி. ரி. ராஜ் நிகழ்த்தும் திரைக்கதை எழுதுவது எப்படி என்ற பட்டறைத் தொடர் ஏப்ரல் 18ம் திகதி 11.30 ற்கு 2677 எக்லிங்டன் அவனியூ, ஸ்காபுறோ வில் நிகழவுள்ளது. கலந்துகொள்ள விரும்புவோர் 647-309-4514 என்ற தொலைபேசி இலக்கத்தில் ஒன்றியச் செயலாளர் திரு. ஜே.வாசனைத் தொடர்புகொள்ளலாம். மட்டுப்படுத்தப்பட்ட ஆசனங்கள் என்பதால் முற்கூட்டிய பதிவுகள் அவசியம்.



ரவி அச்சுதன் இயக்கத்தில் தயாரிக்கப்பட்டுள்ள திரைப்படம் ஐ ஸ்கிறீம். எதிர்வரும் மே மாதம் திரையிடப்படுமென எதிர்பார்க்கப் படுகிறது. ரொமான்டிக் திறிலர் என்ற ஜோர்னரில் உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் இத் திரைப்படத்தில் டனேஷ் கந்தசாமி, மிலானி நந்தகுமார் கோபிஷன் ஜெகநாதன் ஹரநியா யோகரடணராஜ் பிரதி ரட்ணம் கபீனா குகன் காண்டீபன் ராங்கநாதன் கம்ஷா சத்தியேந்திரன் நிவேதா உதயகுமார் ஆகியோர் நடித்துள்ளனர். அண்மையில் வெளிவந்த இத் திரைப்பட ட்ரெயிலர் இது ஒரு விறுவிறுப்பான திரைப்படமாக அமையுமென நம்பிக்கை தருகிறது. இத் திரைப்படம் கரேபியத் தீவுகள் உட்பட பல வெளிநாடுகளில் படமாக்கப்பட்டுள்ளதெனத் தெரிய வருகிறது.



நடிப்பு: அமைரா தஸ்தூர், தனுஷ், கார்த்திக்

இயக்கம்: கே.வி. ஆனந்த்

இசை: ஹரிஸ் ஜெயராஜ்

“அனேகி” என்றே படத் தலைப்பு தீட்டப்பட்டிருக்கவேண்டும் இப் படத்துக்கு. இது தனுஷின் படமல்ல, நாயகி அமைரா தஸ்தூரின் படமே. நாயகியின் மறுஜென்ம நினைவுகளே கதையின் புலம். என்ன செய்வது? ஹீரோவின் பெயரில்தான் படமோடும் என்பதால் அனேகன் என்று பெயரிட்டுவிட்டார்கள். இங்கே ஒன்றல்ல, இரண்டு போனஜன்ம ஞாபகங்கள் நாயகியை பீடிக்கின்றன. இயல்பாக இவை ஒன்றோடு ஒன்று கலந்தே வரவேண்டும், ஆனால் திரைப்படம் ஒரு ஒழுங்கில் பயணிக்கவேண்டுமல்லவா? அதனால் ஒன்றன்பின் ஒன்றாக வருகின்றன. கதாநாயகன் தமுஷின் வேலை, கதாநாயகியின் இக் குழப்பத்தில் சிக்குப்பட்டுத் தவிப்பது மட்டும்தான். இறுதியில் ஹீரோக்குரிய குஸ்திச் சண்டையில் ஜெயிப்பதும் கூட. இருப்பினும் போன ஜென்ம நினைவுகளில் தனுஷ் அசத்தலாக நடித்து திரைப்படத்தை முழுமையாக நிரப்பிவிடுகிறார். இப்போ கதாநாயகின் குழப்பத்தை தெளிவாக்கி திரைப்படத்தை முடிப்பதுதான் இங்குள்ள சவால். ஆனால் கதாநாயகிக்கு ஏற்பட்ட குழப்பம் இயக்குநருக்கும் ஏற்பட்டு பார்வையாளர்களையும் குழம்பிவிடச் செய்கிறது. அது எதுவென்றால், இந்த போனஜென்மக் கதைகள் உண்மையா, இல்லை போதைவஸ்துக் கலந்து மருந்து வழங்கப்பட்டதால் ஏற்பட்ட மனக்குழப்பமா என்ற ஒரு குழப்பத்தை தேவையில்லாமல் புகுத்தி, அதேவேளை போன ஜென்ம கதாநாயகியை அடையாளம் கண்டுகொள்ளும் போன ஜென்மம் தொடக்கம் இந்த ஜென்மத்திலும் வாழும் வில்லனையும் காட்டுகிறார்கள். அத்தோடு இரண்டாவது போனஜென்மக்கதை, ஒரு பைத்தியக்காரன் தெரிவித்த மர்மத்தால் கதாநாயகியின் மனதில் தோன்றியிருக்கலாமென்ற வாய்ப்பையும் காட்டுகிறார்கள்.

அதீத மர்மக்கதை எழுதப்புறப்பட்டு மர்மத்தை விடுவிக்கத் தெரியாமல் திணறுவது தெரிகிறது. எப்படியே ஒருவாறு வில்லனை ஒழித்து கதையை முடித்தாயிற்று. கார்த்திக்கை வில்லனென்று தெரியாத வில்லனாக்கி வைத்ததிலும் அந்த மர்மத்தை விட்டுவைக்கவில்லை. படம் எந்த லாஜிக்கும் வேலை செய்யாதபோதும், போன ஜென்மக் கதைகளின் அசத்தலான சித்திரிப்புக்களாலேயே நின்றுபிடிக்கிறது. கார்திக்கின் றீ என்றி, பரபரப்பாக இருக்கிறது. கிளைமெக்ஸில் வில்லனை “கொல்லாதே, கொல்லு” என்ற இழுபாடும், கொல்லாமல் கொல்வதற்கு கையாண்ட சீப்பான வழிமுறையும் (மரத்திலிருந்து கத்தி விழுவது) அலுக்க வைக்கிறது. ஆனாலும் படம் வித்தியாசமான ஒரு உலகத்திற்கு எம்மை கூட்டிச்சென்று விட்டுவிடுவதென்னவோ உண்மைதான். நாம் இன்னும் இந்த ஜென்மத்தில் இருக்கிறோமா? சற்றே கிள்ளிப் பார்த்துக்கொள்ளுங்கள்.

சினிமா விமர்சகரும், சுயாதீன திரைப்படக் கழகத்தின் இயக்குநரும், அக் கழகத்தின் வாயிலாககனடாவில் ஒரு தசாப்த காலத்துக்கு மேலாக குறுந் திரைப்படப் போட்டிகளை நிகழ்த்தி வருபவருமான திரு. ரதனின் “எதிர் சினிமா” நூல் மார்ச் 29ம் திகதி கனடாவில் வெளியிடப்பட்டது. இந் நிகழ்ச்சிக்கு மிச்சிக்கன் பல்கலைக்கழக பேராசிரியர் திரு. சொர்ணவேல் பிள்ளை சிறப்புப் பேச்சாளராக கலந்துகொண்டு உரையாற்றினார்.



திரைப்பட வாய்ப்பு



கனடாவில் படம்பிடிக்கப்படும் தென்னிந்தியத் திரைப்படமொன்றுக்கு நடிப்பாற்றலுள்ள தென்னிந்தியத் தமிழ் மற்றும் இலங்கைத் தமிழ் பேசக்கூடிய சிறுவர்கள், நடிகைகள், பாடகர்கள், டெக்நிஷன்கள் விண்ணப்பிக்க விரும்பின் 647-309-4514 என்ற தொலைபேசி இலக்கத்தில் திரு. ஜே. வாசனைத் தொடர்பு கொள்ளலாம்.

சித்தன் சினிமா

ரெயிலர் மாற்று சினிமா என்றால் என்ன? தமிழில் மாற்று சினிமா ஏதாவது வெளிவந்ததா? உலக சினிமாவிற்கும் மாற்று சினிமாவிற்கும் என்ன வித்தியாசம்? சித்தனை குடைந்து விட்டார்கள். அக்கரகாத்தில் கழுதை, தாகம், ஜெயபாரதியின் குடிசை, சேதுமாதவின் மறுபடியும், காக்கா முட்டை , பாலுமகேந்திராவின் வீடு, சந்தியாராகம், மகேந்திரனின் உதிரிப்பூக்கள், மோகமுள் இவையெல்லாம் நினைவுக்கு வருகின்றன. இவை எந்த வகை? கீழே இரண்டு படங்கள் உள்ளன. கன் அன்ட் றிங், கோப்பை இவை எந்த வகை. உலக சினிமாவைத் தேடுபவர்கள் இவையனைத்தையும் பார்க்க வேண்டும். தெஹரானிலிருந்து றியோ வரை கோப்பையையும் காணலாம் கன் அன் றிங்கையும் காணலாம். வீடும் உண்டு. காக்கா முட்டையையும் பார்க்கலாம்.



சித்தனை கேள்வி மேல் கேள்வி கேட்டு துளைக்கின்றனர். ஏற்கனவே உடம்பில் பல ஓட்டைகள். இது வேறை பிரச்சினை. என்னென்டால் உலக சினிமாக்குள்ளை தமிழ் சினிமா ஒன்றும் இல்லையா என்று. சரி திரைப்பட விழாக்களை தரிசித்த சில படங்களை இடைக்கிடை விடுவம். ஆனாலும் இப்படம் பலரையும் நிமிர்ந்து பார்க்க வைத்த படம். ஈழத் தமிழனுக்கு என்று ஒரு திரைப்பட மொழி விரைவில் உருவாகிவிடும் என்ற நம்பிக்கையளித்த படம் A gun and A ring.

சித்தனின் வேலையே ஒவ்வொரு படத்தையும் அக்கு வேறு ஆணி வேறாக கழட்டிப் போடுவது தான். பிழைகள் அல்ல முக்கியம். அடித்தளமே முக்கியம். படம் தொடங்கியதிலிருந்து எங்கை ரஜனியைக் காணேலை. கமலைக் கூட இல்லை. சரி பழைய கார்த்திக், புதுசையும் காணேலே. எங்கையோ கேட்ட குரலெண்டால் அது கங்காவின்ரை குரல். சி.எம்.ஆரிலை ஒலித்த குரல். இவரிட்டை இப்படி ஒரு நடிப்புத் திறமை இருக்கா? சூப்பர். கங்கா நன்றாக நடித்துள்ளார். மதிவாசன், - வழமையாகவே இவர் கதைச்சால் கேட்காது. படத்திலை இவரும் நல்லா நடிக்கிறார். பல கதைகளின்ரை சங்கமம். நீங்கள் எல்லாரும் பார்த்திருப்பியள். கதைகளை இணைத்து இயக்கிய லெனினுக்கு இப்படம் சவால் நிறைந்தது. சர்வதேச தரத்திற்கு எப்படி படத்தை உயர்த்துவது என்பது தெரிந்திருக்கின்றது. லெனினுக்கு கோடம்பாக்கம் தெரியாது. கொட்டும் பனியும், கொடுமை நிறைந்த எமது வாழ்க்கையின் வலி தெரியும். அதன் விளைவே சங்காயும், சர்வதேச திரைப்பட விழாக்களும். வாழ்த்துக்கள். பல விமர்சகர்களின் விடயங்களை உள்வாங்குங்கள். பட்டினத்தார் பாடியது போல் "[illegible] மரமாய் வினைந்த கனியாய் பூவாய்" அடியெடுத்து வைத்துள்ளீர்கள். அடுத்த படம் விருட்சமாய் உருவாகிவிட சித்தன் வாழ்த்துக்கள்.




கோப்பை கழுவுதல் ஒரு தரக் குறைவான ஒடுக்கப்பட்ட மக்களுக்குரியது என்பது புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் ஒரு எழுதப்படாத விதியாகவே இருந்தது. இதனை மையமாக வைத்து அமரர் குமார் மூர்த்தி எழுதிய ஒரு சிறுகதையை மையமாக வைத்து வரன் இயக்கியிருந்த படம் **கோப்பை**. இதற்கு முன்னர் இதே தொழிலை மையமாகக் கொண்டு **டிஸ் வோசிங் மெசின்** என்ற நாடகம் மேடையேற்றப்பட்டிருந்தது.

கோப்பை கழுவுபவராக வேலை செய்யும் கணவன். வீட்டில் சாப்பிட்டு முடித்தவுடன் மனைவி கோப்பை கழுவுமாறு கேட்கின்றார். கழுவுவதா விடுவதா என்பதே கணவனின் சிந்தனை. ஒரு வகையில் இது ஒரு ஆணாதிக்க வெளிப்பாடு. கோப்பை கழுவுவதல் என்பது பெண்களுக்குரியது. இரண்டாவது அவரது தொழில் மீதான வெறுப்பின் வெளிப்பாடு. இவ்விரண்டையும் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார் திலீப் குமார். ஒரு நாடகரான இவர் தனது இயல்பான நடிப்பால் படத்திற்கு கனத்தை கொண்டு வந்துள்ளார். இப்படத்தின் மற்றொரு சிறப்பம்சம் இயக்கம். மாமூலன் சிறப்பாக இயக்கியுள்ளார். ஒரு சிறு கதையை படமாக்குவது என்பதே கடினமானது. சிறுகதையில் வெளிப்பட்ட அது தாக்கத்தை படத்திலும் வெளிக் கொணர்ந்துள்ளனர். தமிழில் இது போன்ற குறும் படம் வெளிவரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதனை பார்த்து முடித்தவுடன் பட்டினத்தாரின் பாடல் ஒன்று ஞாபகத்திற்கு வந்தது. "எச்சில் என்று சொல்லி இருமகிக்கும் பேசாதீர்! எச்சில் இருக்கும் இடம் அறியீர்"



இரண்டு மனைவிகள் இருந்தால் கணவன் படும் பாடு பெரும் கடினமாகத்தான் இருக்கும். இரண்டு காதலிகள் இருந்தால் அதைவிடக் கடினம். இது அந்தக் காலம். இப்போது எதிர்மறை இரண்டு காதலன்கள் இருந்தால் என்று நிலைமை மாறுகின்றது. இன்றும் கூட மேற்கிலும் இரண்டு காதலன்கள், இரண்டு கணவன்களை சமூகமோ அரசோ ஏற்பதில்லை. பிரேசிலின் வடமேற்குப் பிரதேசத்தில் உள்ள ஒரு கிராமத்து பெண்ணிற்கு மூன்று கணவன்கள். மூவருடனும் மிகவும் சிறப்பாக தனது குடும்பத்தை நடாத்திவருகின்றார் இப் பெண். இதனை மையமாக வைத்து வெளிவந்த படம் **நான் நீ அவர்கள்**. **(Me You Them - Eu Tu Eles)**. இயக்கம் Andrucha Waddington

"நான் எனவும் நீ எனவும் நாம் இரண்டும் மற்றொன்றும் நீ எனவே சிந்தைதனில் தேர்வதுவும் எக்காலம்?" - பத்திரகிரியாரின் பாடல்



ரீதியின் தாயார், ரீதியின் தோளை தொடமுற்படும் பொழுது, "என்னைத் தொடாதே, உனது தொடுதல் எனக்கு, எனது வாடிக்கையாளரையே நினைவுபடுத்துகின்றது" எனக் கூறுகின்றாள் இதிலிருந்து ரீதியின் வாழ்க்கையை இலகுவாக புரிந்து கொள்ளலாம். ரீதியின் வாழ்க்கையை அவளது குடும்பம் சக்கையாக பிழிந்து எடுக்கின்றது. அவளது உடலை வாடிக்கையாளர்கள் இரத்த ஆற்றில் மிதக்க விடுகின்றார்கள். அவளது குடும்பத்துக்கு அவள் தேவை இல்லாத போது அவளது நிலை என்ன. இது ஒன்று பாலச்சந்தரின் படமல்ல. சில வருடங்களுக்கு முன்பாக பங்களாதேசால் ஒஸ்காருக்கு அனுப்பப்பட்ட படமே இது. Nirontor **(Forever Flows)** **(என்றைக்கும் தொடரும்)** என்பது படத்தின் பெயர்.

பட்டினத்தார் இங்கும் விட்டு வைக்கவில்லை. "எத்தனை நாள் கூடி எடுத்த சரீரம் இவை? அத்தனையும் மண் தின்பதல்லவோ".

கடவுளிடம் பேட்டி! (ஜென் கதை)

ஒரு நாள் கடவுளை பேட்டியெடுப்பதாய் கனவு வந்தது அவனுக்கு.

"உள்ளே வா" - அழைத்த கடவுள்,

"என்னைப் பேட்டியெடுக்கணுமா?"

"ஆமாம்"

உங்களுக்கு நேரமிருந்தால் கொடுங்கள்" - இது அவன்.

கடவுள் சிரித்தார்.

"என் நேரம் முடிவற்றது" எதையும் செய்யப் போதுமானது. சரி" என்ன கேட்கப் போகிறாய்?"

"மனித இனத்தில் உங்களை ஆச்சர்யப்படுத்துவது எது?"

கடவுள் சொன்னார்"

"மனிதன் ரொம்ப நாள் குழந்தையா இருக்கப் பிடிக்காமல், சீக்கிரம் வளர்ந்து பெரியவனாகிறான்" ஆனால் வளர்ந்த பிறகு குழந்தையாகவே நீண்ட காலம் இருக்கிறான். பணத்துக்காக உடல்நலனை இழக்கிறான்" பின்னர் இழந்த நலத்தைத் திரும்பப் பெற எல்லாப் பணத்தையும் இழக்கிறான்"

எதிர்காலத்தைப் பற்றியே எப்போதும் கவலையுடன் யோசிப்பதில், இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் நிகழ்காலத்தை மறந்துவிடுகிறான்" நிகழ்காலமும் எதிர்காலமும் அவனுக்கு இல்லாமலே போகிறது!

" சாகாமல் இருக்க வாழ்கிறான். ஆனால் வாழாமலே சாகிறான்"

கடவுளின் கைகள் லேசாக அசைந்தன. சில நொடிகள் மவுனம்.

"ஒரு தந்தையாக, இந்த பூமியில் உள்ள உங்களின் பிள்ளைகளுக்கு சொல்ல விரும்பும் வாழ்க்கைப் பாடம் என்ன?" மீண்டும் கேட்டான்.

கடவுளிடமிருந்து ஒரு புன்னகை.

தம்பி, யாரும் தன்னை நேசிக்க வேண்டும் என்று வலுவில் முயற்சிக்காதே" நேசிக்கப்படும் அளவு நடந்து கொள். வாழ்க்கையில் ஒருத்தன் சம்பாதிச்சது மதிப்புள்ளதல்ல" அதை எப்படிச் சம்பாதிச்சான் என்பதில்தான் அந்த மதிப்பிருக்கு"

ஒன்றை விட ஒன்று சிறந்ததுன்னு ஒப்பிடுவதே கூடாது.

எல்லாம் இருக்கிறவன் பணக்காரன் என்று நினைக்காதே" உண்மையில் யாருக்கு தேவை குறைவோ அவன்தான் பணக்காரன்!

நாம் நேசிக்கும் ஒருத்தரை புண்படுத்த சில நொடிகள் போதும்" ஆனால் அதை ஆற்ற பல ஆண்டுகள் ஆகும். நம்மை நேசிக்கும் பலருக்கு அதை சரியாக வெளிப்படுத்த தெரியாமல் இருப்பதுதான் நிஜம்"

பணம் இருந்தா எல்லாத்தையும் வாங்க முடியும்னு நினைக்கிறது தப்பு. சந்தோஷத்தை ஒருபோதும் வாங்க முடியாது. இரண்டு பேர் ஒரே விஷயத்தைப் பார்த்தாலும், அவர்கள் பார்க்கும் விதம் வேறு வேறாக இருக்கும் என்பதைப் புரிந்து கொள்.

ஒரு நல்ல நண்பனுக்கு அடையாளம், சக நண்பனைப் பற்றி எல்லாம் தெரிந்து வைத்திருப்பதும்.. எந்த சூழலிலும் அவனை விரும்புவதுமே!

அடுத்தவனை மன்னிக்கத் தெரிந்தால் மட்டும் போதாது, தன்னைத் தானே மன்னித்துக் கொள்ளும் தன்மை வேண்டும்".

நீ சொன்னதை மற்றவர் மறக்கலாம்" நீ செய்ததையும் மறந்து போகலாம்.. ஆனால், உன்னால் அவர்கள் பெற்ற உணர்வை ஒருபோதும் மறக்க மாட்டார்கள்!"

பேட்டி முடிந்தது என்று சொல்லும் விதமாக கண்களால் சிரித்தார் கடவுள். அவரது கதவுகள் மூடின"

தேவையானது கிடைத்த சந்தோஷத்துடன் ,

விழித்தெழுந்தான் அவன்!

ஆசாரக்கோவை மணித்துளிகள்

நாம் டேபிள் மனேர்ஸ் என்றும் சோஷல் எத்திக்ஸ் என்றும் இன்று சொல்பவை அன்றே பண்டைக்காலத் தமிழ் நூல்களின் தொகுப்புக்களில் ஒன்றான பதினெண் கீழ்க்கணக்கில் உள்ள, முள்ளியார் என்னும் புலவரால் எழுதப்பட்ட ஆசாரக்கோவை எனும் இந் நீதிநூலில் சொல்லப்பட்டுள்ளன. இன்று நாம் கடைபிடிக்கும் முறையோடு ஒப்பிட்டுப் பாருங்கள் சென்ற இதழ் தொடர்ச்சி இது. தொடர்ந்தும் வரும்.

5 எச்சிலுடன் தீண்டத் தகாதவை

(இன்னிசைச் சிந்தியல் வெண்பா)

'எச்சிலார், தீண்டார் - பசு, பார்ப்பார், தீ, தேவர்,
உச்சந் தலையோடு, இவை' என்ப் யாவரும்
திட்பத்தால் தீண்டாப் பொருள்.

பசு, பார்ப்பார், தீ, தேவர், உச்சந்தலை ஆகியவற்றை எச்சிலையுடையார் எவரும் தீண்டார்.

6 எச்சிலுடன் காணக் கூடாதவை

(இன்னிசைச் சிந்தியல் வெண்பா)

எச்சிலார், நோக்கார் - புலை, திங்கள், நாய், நாயிறு,
அத்தக வீழ்மீனோடு, இவ் ஐந்தும், தெற்றென,
நன்கு அறிவார், நாளும், விரைந்து.

புலையும், மதியும், நாயும், சூரியனும், மீனும் ஆகியவற்றை எச்சிலையுடையார் கண்ணால் காண மாட்டார்.

7 எச்சில்கள்

(இன்னிசைச் சிந்தியல் வெண்பா)

எச்சில் பலவும் உள் மற்று அவற்றுள்,

இயக்கம் இரண்டும், இணைவிழைச்சு, வாயில்-

விழைச்சு, இவை எச்சில், இந் நான்கு.

மல மூத்திரங்கள் இயற்றிய இயக்கம் இரண்டொடு, இணை எச்சில், வாயினால் வழங்கிய எச்சில் ஆகிய நான்கினையும் பாதுகாக்க வேண்டும்.

8 எச்சிலுடன் செய்யக் கூடாதவை

(இன்னிசைச் சிந்தியல் வெண்பா)

நால் வகை எச்சிலும் நன்கு கடைப்பிடித்து,

ஒதார், உரையார், வளராரே, - எஞ் ஞான்றும்

மேதைகள் ஆகுறுவார்.

இந்நான்கு எச்சிலையும் கடைப்பிடித்து ஒன்றினையும் ஒழுகாதவர், வாயால் எதையும் சொல்லார், கண்துயிலார் எப்போதும் அறிவுடையவராக இருப்பர்.



ஐசக் நியூட்டன் சொன்னது...

நான் அதிக தூரம் பார்க்கிறேன் என்றால், (நான் அதிகமாகக் கண்டுபிடித்திருக்கிறேன் என்றால்,) அது மிகப் பெரிய மனிதர்களின் தோள்களில் அமர்ந்து கொண்டதால் தான். (முன்னோர்களின் அறிவைப் பகுத்து ஆராய்ந்ததால் தான்.)

உலர்ந்த திராட்சை



கட்டி லுறுந்தேனிற் கண்டு பதமுறவே
ஊட்டுந்தி ராட்சியது கொண்டார்க்கு - வாட்டுகின்ற
சிக்மலத் தோடுபித்தம் சீறுமழ றானொழியும்
தொக்கு ளுதிரமிகுஞ் சொல்

குணம்: தேனில் பதமாக ஊறப்போட்டுலர்த்திய திராட்சைப் பழத்தை உண்ணப் பழைய மலத்தை வெளியாக்கும். மேக அழலைத் தணிக்கும். உதிரப்பெருக்கை யுண்டாக்கும்.

செய்கை: மலகாரி, காமவிரித்தினி

உபயோகிக்கும் முறை: 1 -3 தோலா நிறை உலர்ந்த திராட்சைப் பழத்தை அரை ஆழாக்கு கொதிக்கிற ஜலத்தில் போட்டு 15 -20 நிமிடம் வரையில் அப்படியே வைத்துப் பின்னர் பிசைந்து வடிகட்டிக் கொடுக்கலாம். இதனால் மலம் இளகும். இரைப்பையும் குடலும் சுத்தப்படும். தாதுவிருத்தி யுண்டாகும். நுரையீரலையும் நீர்த்தாரையையும் பற்றிய விரணங்கள் ஆறும். இதனைக் காடியிலரைத்துக் கொடுக்கக் காமாலை போம். இதற்குச் சமன் மிளகு சேர்த்து அரைத்துக் கொடுக்கக் கல்லடைப்பு, நீரொழுக்கு முதலியவை போம். இப் பழத்தை அடிக்கடி வாயிலிட்டுச் சுவைத்துக்கொண்டிருக்க நாவின் அரோசகம் போம். இதனை ஆட்டுக் கொழுப்போடு சேர்த்து அரைத்துப் பருக்களின் மீது போட உடைத்துக்கொள்ளும். இந்தப் பழத்துடன் மொச்சைப்பருப்பு, மாவு, சீரகம் சேரத்தரைத்துப் பீஜ வீக்கத்திற்குப் பற்றுப்போட வீக்கம் போம்.

-நன்றி: பதார்த்த குண விளக்கம் (கண்ணுச்சாமி பிள்ளை)

நலம் தரும் முத்திரைகள்



மூட்டுமுத்திரை

மூட்டுகளில் பிரச்சினைகள் உள்ளவர்கள்மூட்டுமுத்திரை(Joint Mudra) என்று சொல்லப்படுகின்ற இந்த முத்திரையையும் செய்து பலன் பெறலாம். இந்த மூட்டு முத்திரையைச் செய்யும்போது அனைத்து விதமான மூட்டு வலிகளும் மறையும். ஆனால் முழுமையான பலன் கிடைக்க வேண்டுமென்றால் வலி மறையும்வரை இந்த முத்திரைதயைத் தொடர்ந்து செய்யவேண்டும்.

வலது கை: வலது பெருவிரலின் நுனிப்பாகத்தை வலது மோதிர விரலின் நுனிப் பாகத்தால் தொடவும். பிற மூன்று விரல்களும் வளைவின்றி நேராக இருக்கட்டும்.

இடது கை: இடது பெருவிரலின் நுனிப்பாகத்தை இடது நடுவிரலின் நுனிப்பாகத்தால் தொடவும். பிற 3 விரல்களும் வளைவின்றி நேராக இருக்கட்டும். முழுக் கவனமும் முத்திரையிலும் மூச்சு சீராக இருப்பதிலும் இருக்கட்டும்.

அமரும் முறை: முதுகு முத்திரையை செய்வதுபோல் அமரலாம்.

நேரம்: ஒரு முறைக்கு 15 நிமிடங்கள் வீதம் ஒரு நாளில் 3 முறை. காலை, மதியம், இரவு செய்யலாம்.



காதல் பண்ணப் பழகலாமா?

ஒரு அனுபவஸ்தனின் அட்வைஸ்–8

–பாஸ்கி



இப்போ என்ன? திருமணத்துக்கு முன்னரே எம் துணை எமக்கு ஒத்துவருமா என்று பார்த்துக்கொள்ள வேண்டும். இதுதானே இந்தத் தடவை சொல்வதாக போனதடவை சொல்லி முடித்த மெட்டர். ஒகே!

நமது குல வழக்கம் அதற்கு விடுவதில்லை. என் அம்மம்மா சொன்னா, தான் மண மேடையில்தான் தன் கணவனை யாரென்று பார்த்ததாக. ஏன் இதைவிட பால்ய திருமணம் வேறு எம் பழங்காலத்துக் கொடுமை! பெண்விடுதலை பாடிய பாரதிக்கே இதுதானே நடந்தது. இன்றும் அங்கே இங்கே நிலவுகிறதாம். இந்தக் குல வழக்கத்தால் எமக்குள் ஒரு குற்ற உணர்வு மனத்தடையாக அமைந்து விடுவதுண்டு. அதுவும் குறிப்பாகப் பெண்களுக்கு. அதனால் அவர்கள் தமது வருங்காலத் துணையை நிதானமாக, அவதானமாக, தெளிவான ஐடியாவுடன் தேடுவதில்லை.

அவர்கள் தமக்கான வாழ்க்கைத் துணைக்காக ஆண்களை எடை பார்க்கும்போது மனதுக்குள் ஒரு பதட்டம் வந்து சேர்ந்துவிடுகிறது. திருட்டுக் காரியம் செய்வதுபோல் மனது அடித்துக்கொள்கிறது. தான் அவரை நோட்டம் பார்ப்பது அவருக்குத் தெரியக் கூடாது, தெரிந்தால் தனக்கு அவமானம் என்று மனம் கூசுகிறது. அதைத்தான் ஒரு சினிப்பாடல் இப்படிச் சொல்கிறது...

உன்னை நான் பார்க்கும்போது
மண்ணை நீ பார்க்கின்றாயே
விண்ணை நான் பார்க்கும்போது
என்னை நீ பார்க்கின்றாயே...

பெண்களின் இக் குணத்தை அடையாளம் கண்டு அதை எம் ஆண்வர்க்கம் அவர்களுக்கான நற்குணங்களுக்கு ஓர் லட்சணமாக்கி, "அப்படியே இருந்துவிடு பெண்ணே," என்று உபதேசிக்கிறது.

ஆனால் இப்படி நேரே பார்க்காமல் நிலத்தைப்பார்த்து, நகத்தால் நிலம் கீறி எப்படி முன்னால் இருப்பவரை எதிர்கால வாழ்க்கைத்துணையென நிட்சயம் செய்துகொள்வது? படத்திற்கும் பாட்டிற்கும் சுவையாக இருந்தாலும் பெரும் பாலும் இத் தேர்வு தவறாகவே முடியும். அந்தப் பதட்டமும், நாணமும், எதிரே நிற்பவர் தனக்குப் பொருத்தமானவர்தானா என்பதை பரிசீலிக்கும் அனைத்து கேள்விகளையும் உறையச் செய்துவிட்டு, தனக்குள் ஏற்பட்ட தடுமாற்றத்தையே அவரைத் தான் தெரிவுசெய்வதற்கான அறிகுறியாக ஏற்க வைத்துவிடும்.

எம் கலாசார மற்றும் வளர்ப்பு முறையின் கட்டுக்குள் நிற்கின்ற பெண்கள்தான் இப்படியென்றால், முன்னேறிய பெண்கள்கூட தங்கள் தெரிவில் தோல்வியடைவதற்குக் காரணம் அவசர முடிவும் தேர்வு பற்றிய தெளிவின்மையும்தான். அவர்கள் ஆண்களோடு சகஜமாகப் பழகக்கூடியவர்களாக இருந்தாலும், பத்தாம் பசலிப் பெண்களின் பதட்டம், நாணம், கூச்சம் போன்ற தடைகள் இவர்களுக்கு இல்லாவிட்டாலும் இவர் சரியான தெரிவை மேற்கொள்வதில்லை.

ஏனெனில் இவர்கள் உண்மையில் "தங்கள்" துணையை தெரிந்தெடுப்பதென்பதில்லை. தங்களைச் சூழ்ந்துள்ள வட்டாரங்களின் தாக்கத்தால் ஏற்பட்ட "பொது அபிப்பிராயத்துக்கு" உரிய துணையையே தெரிவு செய்கிறார்கள். இது ஒரு புதிர்போல இருக்கலாம் உங்களுக்கு. அதனால் விளக்குகிறேன். நாம் ஒரு சினிமா ஹீரோ பற்றிய பிரேமைக்கு எப்படி உள்ளாகிறோம்? நாம் மட்டுமன்றி, நம்மைச் சூழ்ந்திருப்பவர்களும் விசிறிகளாகி, அந்த ஹீரோவிற்கு எம்மைச் சூழ்ந்துள்ளவர்கள் மத்தியிலான பிரபலத்தால் கவரப்பட்டு, அவர்மீது கிறேஸியாகிறோம். இது வெளிப்படையாக உணரக்கூடிய விடயம்.


ஆனால் வெளிப்படையாகத் தெரியாமலே எமது மனதுக்குள் எமக்கான துணை எப்படியான அம்சங்களைக் கொண்டிருக்க வேண்டுமென்ற சில கோடுகள் எம்மைச் சூழ்ந்துள்ளவர்களது விருப்பு வெறுப்பு, மற்றும் அபிப்பிராயங்களின் தாக்கத்தால் எமக்குள் ஏற்பட்டு விடுகின்றன. இது உண்மையில் ஒரு பொது அபிப்பிராயம் - ஆனால் அதை நாம் எமது அபிப்பிராயமென நினைத்துக் கொள்கிறோம். இப்போது நாம் அந்த அபிப்பிராயத்துக்கு ஏதுவான ஒருவரையே தேர்ந்தெடுக்க விளைவோம்.

உதாரணமாக, எனது நண்பர்கள் சுற்றத்தார் மற்றும் சமூகத்தில் டாக்டர் என்றால் உயர்வானதென்ற ஒரு பொது அபிப்பிராயம் நிலவுகையில், நாம் ஒரு டாக்டரைச் சந்திக்கையில் அந்தப் பொது அபிப்பிராயம் எமக்குள் ஏற்படுத்தியுள்ள எண்ணம் முன்னிலைப்பட்டு, வேறு எதையும் சிந்திக்காது அவரைத் தெரிவு செய்துவிடும். அவரது வேலைப் பழு, நேரமின்மை, மற்றும் குறைபாடுகளை, பொருத்தமின்மைகளை, மனது பெரிதுபடுத்துவதில்லை. இந்த டாக்டர்போலவே, பாடகர், நடிகர், விளையாட்டு வீரர், என்றவாறோ, அழகானவர், நிறமானவர், ஸ்டைலானவர் என்றவாறோ நாம் தெரிவு செய்வதெல்லாம் இந்தத் தேர்வு பொது அபிப்பிராயத்திற்காக நாம் தேர்ந்த தேர்வேயன்றி எமக்கான சொந்தத் தேர்வு இல்லை. அதனால், வாழ்க்கையை வாழத்தொடங்கும்போது எமது சொந்த அபிப்பிராயங்களுக்கும், இந்த கற்பனை அபிப்பிராயங்களுக்கும் இடைவெளி தோன்றத் தொடங்கும்.

அப்படியானால் எமது சொந்தத் தேர்வு என்பது என்ன? இதுதானே கேள்வி. அதற்கு முதலில் நான் யார் என்பதை முதலில் அடையாளம் காணுதல் வேண்டும். நான் எனும்போது, எனக்குள் இருக்கும் இன்னொரு நான்-முன்னர் அதையிட்டுநிறையவே விளக்கிவிட்டேன். அந்த நானை எப்படி அடையாளம் காண்பது? அது எனது படிப்பு, தகுதி, அந்தஸ்த்து போன்றவற்றால் உருவாக்கப்பட்டதல்ல. உண்மையில் அந்த நானை எனக்கே தெரியாது. அது தலைப்படும்போது, வெளியே நானாக நினைத்துக்கொண்டிருக்கும் நான் விலகிக்கொள்ளும். ஒரு சாமியார் "உயிர்களிடத்தே அன்பு காட்ட வேண்டும்" என்று போதனை செய்துகொண்டிருக்கும்போதே, அவரையறியாமலே அவரின் கை அவரைக் குத்தும் நுளம்பை சடக்கென அடித்துவிட்டு மறுபடி சாந்தி பாவனை காட்ட வந்து நிற்குமே, அதுபோல, என்னையறியாமலே அந்த நான் வெளிப்பட்டு மறையும். இதை நாம் இன்னர் கெரக்டர் என்கிறோம்.

எனவே எமக்கு வேண்டியதெல்லாம் எமக்குள் இருக்கும் அந்த இன்னர் கரெக்டருக்குள்ள ஆசா பாசங்கள், உணர்ச்சிகள், இச்சைகள், சுபாவங்கள், கனவுகள், கற்பனைகள், லயிப்புகள், ரசனைகள், அளவீடுகள், பெறுமானங்கள் என்ன என்பதை குறைந்தபட்சம் ஓரளவாவது அனுமானிக்க முயல்வதுதான்.

முதலில் அதற்கு ஒரு முயற்சி பண்ணுங்கள். பலவிதமாக உங்களை நீங்களே சோதித்துப் பாருங்கள். எவையெவற்றில் நீங்கள் போலியாக ஆர்வங் காட்டுகிறீர்கள், எவையெவற்றில் உண்மையாக ஆர்வங்காட்டுகிறீர்கள் என்பதை நீங்களே இனங்கண்டுகொள்ளப் பாருங்கள். உங்களைப் பாதிக்கும் விடயங்களை நீங்கள் முகம்கொடுக்கும்போது எந்தக் கட்டத்தில் உங்கள் இன்னர் கெரக்டர் வெளிப்படுகிறது என்பதை மறுபடி சிந்தித்துப் பாருங்கள். உங்கள் சகிப்புத்தன்மையின் எல்லைகள் எவையெவற்றில் எவ்வாறுள்ளதெனப் பார்த்துக்கொள்ளுங்கள். உங்கள் ஒவ்வொரு மதிப்பீடுகளின் பின்னாலும் உங்கள் இன்னர் கெரெக்டரின் கை உள்ளதா என்பதை செக்பண்ணுங்கள். நீங்கள் வெளிக்காட்டும் நடை உடை பாவனைகளில் இயல்பானதற்கும் வித்தியாசம் உள்ளதா எனப் பாருங்கள். பார்த்து வைத்திருங்கள் அடுத்த இதழில் சந்திக்கும்போது அவற்றை ஆராய்ந்து, உங்கள் சோடியைத் தெரிவுசெய்வது எப்படி என்று பார்க்கலாம்.



புலம்பெயர் தமிழரின்
ஆரோக்கியம் கெடுகிறதா?



பரம்பரை அமைவுகளையும் சூழ்நிலைகளையும் காரணிகளாகக் கொண்டு, வழக்கத்திற்கு அதிகமான அளவில் மிகவும் இலகுவாக ஆரோக்கியம் பாதிக்கப்படும் நிலை, தமிழ் சமூகத்தின் மத்தியில் பொதுவானதாகவுள்ளது. மரபு வழித் தோற்றங்கள் இருப்பினும், கலாச்சார வழிமுறைகளின் தரமும் நம் மத்தியில் பெருகி வரும் இந்த ஆபத்தான நிலைக்குப் பகுதிக் காரணம். தெற்கு ஆசிய மக்களை நீரிழிவு நோயானது பிரித்தானியாவின் மிகுதிப் பிரஜைகளிலும் பார்க்க ஆறு மடங்கு அதிகமாகப் பாதிப்பதும், இருதய நோய் நான்கு மடங்கு அதிகமாகத் தாக்குவதோடு, பத்திலிருந்து பதினைந்து வருடங்கள் முன்பாகவே ஏற்படுவதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. கேடயச் சுரப்பி நோய், மார்பகப் புற்றுநோய், வைட்டமின் டி குறைபாடு என்பனவும் அதிகளவில் காணப்படுகிறது. தெற்கு ஆசிய உணவில் உள்ள அதிகப்படியாக உள்ள மாப்பொருள், சர்க்கரை போன்றவை அடங்கிய உணவு வகைகளோடு, மேற்கில் அதிகளவில் கிடைக்கும் ஜங் ஃபுட் வகைகளும் சேரும் நிலையில், உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படுவதில் ஆச்சரியமில்லை. தமிழ் சமூகத்தின் திறந்த மனப்பான்மையற்ற தன்மை, அவர்களின் ஆரோக்கியத்திற்கு ஆபத்தான நிலையை அதிகரிக்கச் செய்வதாக மேற்கத்தய மருத்துவர்கள் கருதுகிறார்கள். அத்தோடு, வெவ்வேறு விதமான உடற்பயிற்சிகளை முயற்சிப்பதில் அக்கறை குறைந்த நிலை, இளம் குழந்தைகள் பாடசாலைக்குப் பின் கிளப்புகளுக்குப் போவதை அதைரியப்படுத்தும் தன்மை என்பன தமிழ் குடும்பங்கள் கூடுதல் பாதுகாப்பை நோக்கி உள்ளது போல் இருந்தாலும் பிள்ளைகளின் சரீரச் செயற்பாடுகளை மட்டுப்படுத்துகின்றன.



சிலர் தங்கள் வாழ்வியல் வழிகளில் சிக்கிக் கொண்டு, தாய் நாட்டின் பரம்பரை வழக்கங்களைப் பின்பற்றித் தனியாகப் பிரிந்து நின்று, உணவுக் கட்டுப்பாட்டையும், உடற் பயிற்சியையும் முயற்சித்துப் பார்க்க இஷ்டமில்லாமல் உள்ளனர். இதனால் உடல்நலப் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கும் தமிழர்கள், தங்களை நடனங்கள் போன்ற உடற் பயிற்சிகளில் ஈடுபட்டு ஒவ்வொரு கிழமையும் உடற் பயிற்சியோடு சார்ந்த பழக்கங்களை ஏற்படுத்திக் கொள்வது அவசியமென ஆலோசனை கூறுகின்றனர் வைத்தியர்கள்.

குறிப்பாக இந்தியாவிலிருந்து அல்லது இலங்கையிலிருந்து மேற்கு நாடுகளுக்குக் குடியேறிய தமிழர்களுக்கு உடற்பயிற்சி செய்து கொள்வது சிரமமான காரியமாக இருக்கக் கூடும். தாய் நாட்டில் மக்கள் கடுமையாக உழைத்து, தினசரி வாழ்வில் மிகவும் சுறு சுறுப்பாக இயங்கியவர்களாயினும் உடற்பயிற்சிப் பழக்கம் கொண்டவர்களாக இவர்கள் இல்லை. மேற்கில் வளர்ந்த குழந்தைகளுக்கு உடற்பயிற்சி பற்றியும், ஆரோக்கியம் பற்றியும் இங்கு பாடசாலைகளில் கற்பிக்கப்படுவதால் அவர்களின் பெற்றோரிற்கு ஆரோக்கியம் பற்றிக் கற்றுக் கொள்ள உதவுவது மிகவும் இன்றியமையாத ஒன்று. ஆரோக்கியத்தின் முக்கிய பகுதியானது, ஆரோக்கிய உணவுப் பழக்கத்தைப் பின்பற்றுவதாகும். தமிழர் உணவு வகைகளில் அதிக கொழுப்பும், சர்க்கரையும் உள்ளடங்கியிருப்பதால் அவைகள் மிகவும் ஆரோக்கியமாக வழிகளில் சமைக்கப்பட முடியும்.

ஆரோக்கியமற்ற உணவு வகைகளுக்குப் பதிலாக ஆரோக்கியமானவற்றை மாற்றாக உபயோகிக்க சிபாரிசு செய்யும் பிரித்தானிய டாக்டர் தயாபரன் உதாரணமாக, சூரியகாந்தி எண்ணைக்கு அல்லது தாவர எண்ணை வகைகளுக்குப் பதில் தேங்காய் எண்ணையை உபயோகிக்கும்படியும், தவிடு தட்டாத அரிசியை (Brown) பச்சை அரிசிக்குப் பதில் உபயோகிக்கும்படியும், நெய்யைக் கணிசமான அளவு குறைக்கும் படியும் ஊக்கப்படுத்துகிறார். மத்திய தரைக் கடல் நாடுகளின் உணவு வழமையை கிழக்கிற்குரிய ஆகார வகைகளில் புகுத்தும் முறைமையைக் கூட அவர் சிபாரிசு செய்கிறார். அத்தோடு, மத்திய தரைக் கடல் நாடுகளின் உணவு வழமையில் மீன், ஒமேகா-3 எண்ணை வகைகள், வாட்டிய காய் கறி வகைகள் அடங்கி இருப்பதாகவும், அவை இருதயத்திற்கு மிகவும் உகந்ததாக அமைந்துள்ளதாகவும், அவை கறி வகைகளோடு இலகுவில் இணையக் கூடியவை எனவும் அவர் மேலும் கூறுகிறார்.

இயல்புக்கு மாறான பலவிதமான செயல்களால், வளர்சிதை மாற்ற அறிகுறிகள் எனப்படும் நீரழிவு நோய், இருதய நோய் என்பன ஏற்படுவதும், இது தமிழர்கள் மத்தியில் அதிகமாகக் காணப்படுகிறது. இது வைட்டமின் டி குறைபாட்டோடும் தொடர்புடையது. வைட்டமின் டி ஊட்டச்சத்தை பிரதானமாக வழங்கும் சூரிய ஒளியை வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் பெற்றுக் கொள்வதில்லை. அத்தோடு தோல் கறுத்து அழகிழந்து விடுமென்பதால் சூரிய ஒளியை ஆசிய நாட்டவர் தவிர்ப்பதும் ஒரு காரணம். இதற்கு மாற்றாகக் குறைந்த பட்சம் பத்து நிமிடங்களேனும் வெயிற் காலங்களில் சூரிய ஒளியில் வெளியில் சென்று வருமாறும், அல்லது வைட்டமின் டி குளிசைகளை உபயோகிக்குமாறும் வைத்தியர்கள் பரிந்துரைக்கின்றனர்.

மதுபான வகைகளை அருந்தும் பழக்கம் கட்டுப்படுத்தப்பட வேண்டியதும், புகைப்பழக்கம் முழுமையாகத் தவிர்க்கப்பட வேண்டியதும் அவசியமான மற்றைய விடயங்கள். இதற்கான சுகாதார நிலையங்களின் உதவிகளை நாடுவது களங்கமென தமிழ் சமூகம் கருதுவது அதன் அடையாளமான குணாதிசயங்களில் ஒன்றாக உள்ளது. அது மாற்றப்பட்டு, மது, புகைப் பழக்கங்களால் வாடுபவர்கள் மீட்சிபெற ஊக்குவிக்க வேண்டியது எமது கடமை.

- (நன்றி : உலகத் தமிழ் செய்திகள்)

மார்க்கெட்டில் விற்கிறது பற்கரி



பண்டைய காலம்முதல் தமிழர்கள் பல் துலக்க கரி, உப்பு, வேம்புக் குச்சி, ஆலம் வேர், கருவேலம் வேர் போன்றவற்றைப் பயன்படுத்தி வந்தனர். இடையிலே பற்பொடி வந்தது. அமெரிக்க கொம்பனியான கோல்கேட் முதன்முறையாக 1873ல் வணிக ரீதியாக பற்பொடியைத் தயாரித்து குடுவைகளில் அடைத்து "கோல்கேட் பற்பொடி" என்று அறிமுகப்படுத்தியது. அப்போது உப்புக்கரியில் பழக்கப்பட்டிருந்த தமிழரை பற்பொடிக்கு மாற்ற அது செய்த விளம்பரம் இப்படி இருந்தது.

"ஆளு இவ்வளவு பலம் ஆனா பல்லு எவ்வளவு மோசம்!
"உடம்புக்கு பாதாமும், பிஸ்தாவும் ஆனால் பல்லுக்கு கரியும், உப்புமா?"

இப்படி பற்பொடி பாவனைக்கு வந்து, அதன் பின் பேஸ்ட்டுகள் பாவனைக்கு வந்து, நாம் உப்புக்கரிப் பழக்கத்தைக் கைவிட்டு நெடுநாளாகிவிட்டது. இப்போது மீண்டும் கரிதான் பல் சுத்திகரிக்க மிக உகந்த சாதனமென ஆராய்ச்சி முடிவுகள் சொல்வதாகச் சொல்லி மீண்டும் கரியை எமக்கே அறிமுகம் செய்கிறார்கள். அதே அமெரிக்க கம்பனி கோல்கேட் இப்போது

"உங்கள் பேஸ்ட்ல உப்பு இருக்கா?
உங்க பிரஷ்ல கரி இருக்கா ?"

என்று விளம்பரம் செய்கிறது. காலம் எப்படி மாறுகிறது பாருங்கள்.


கரியென்பதை வெறும் கரியாக அல்லாமல் தூண்டப்பட்ட கரி - அதாவது "அக்டிவேட்டட் சார்க்கோல்" என்று ஆக்கி இப்போது பல்துலக்கப் பயன்படுத்துகிறார்கள். அப் படி அக்டிவேட் பண்ணுவது என்பது என்னவென்றால் கரித் துணிக்கைகளில் கூடுதலான துவாரங்களை உண்டாக்குவது. இதனால் ஒரு கிறாம் கரியின் மேற்பரப்பு 5400 சதுர அடியாக விரிந்து அதன் அகத்துறிஞ்சும் பரப்பு அதிகரித்து இப்போது கெட்ட வாயுக்கள் மற்றும் படிவுகளை வீரியமாக அகத்துறிஞ்சி விடுகிறது.

செத்தாண்டா சேகரு!

மனைவி கணவனுக்கு சர்ப்ரைஸ் கொடுக்க நினைத்து, கிச்சனுக்கு போய் புது நம்பரில் இருந்து ஃபோன் செய்தாள்!

மனைவி: ஹலோ டார்லிங்..

ஹஸ்பன்ட்: அப்புறம் கோல்பண்ணு செல்லம், அந்த பிசாசு கிச்சன்ல தான் இருக்கு...



கரி இயல்பிலேயே பல்லின் மேற்பரப்புக்களில் படியும் கோப்பி, தேனீர், வைன், போன்றவற்றின் கறைகளை மட்டுமல்ல, காவி என்று நாம் அழைக்கும் பிளேக் என்ற பக்டீரியாச் சுரப்பால் ஏற்படும் கடினமான படிவையும் அகற்றும் தன்மை கொண்டது. அக்டிவேட்டட் சார்க்கோல் இதை வினைத்திறனுடன் செய்ய வல்லது என்கிறார்கள். அத்தோடு இந்த அக்டிவேட்டட் சார்க்கோலுடன் ஹைட்ரஜன் பரெக்சைட் போன்ற வெண்மைப்படுத்தும் ஏஜென்டுகளைக் கலந்து கருமையடைந்த, அல்லது மஞ்சல் படர்ந்த பற்களை வெண்மையாக்கவும் பயன்படுத்துகிறார்கள்.

இருந்தாலும், நமக்கு ஒரு கேள்வி இருக்கிறது. "அது ஏன்டாப்பா 142 வருடங்களுக்கு முன் எங்கள் கரித்துண்டைப் பிடுங்கி வீசிப்போட்டு, இப்ப அதே கரியைச் சோடித்து, அதை இதைச் சொல்லிக்கொண்டு உன்ர மல்டி நேஷனல் லேபல ஒட்டி எங்களுக்கே விக்கிறியே, இது உனக்கே நல்லாயிருக்கா?



ஆண்களின் சங்கடம்

டாக்டர்.எம்.கே.முருகானந்தன்

கணவனுக்கு ஒரு பிரச்சினை. அது மனைவியையும் கூடப் பாதிக்கிறது. ஆனால். இருவருமே வெளிப்படையாகப் பேசத் தயங்குகிறார்கள். அது என்ன பிரச்சினை..?

விரைந்த உணர்ச்சியிழப்பு

விந்து முந்துதலை ஆங்கிலத்தில் Premature ejaculation என்பார்கள். இதுதான் ஆண்களை மிக அதிகமாகப் பாதிக்கும் பாலியல் பிரச்சினையாகும். பத்து ஆண்களில் ஒருவர் என்ற விகிதத்தில் பாதிக்கப்பட்டுள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன. உறவின் போது பெண் உணர்வின் உச்ச கட்டத்தை எய்துவதற்கு முன்னரே ஆணுக்கு உணர்வின் உச்ச கட்டம் எட்டி விந்து வெளியேறிவிடுவதைத்தான் விந்து முந்துதல் என்கிறோம்.

இது ஆண்மைக் குறைபாட்டினால் ஏற்படுவதல்ல. இங்கு ஆண் உறுப்பு விறைப்படைவதில் பிரச்சனை இருப்பதில்லை. பொதுவாக இது இளமைப் பருவத்தில் அதிகம் ஏற்படுகிறது. காலம் செல்லச் செல்ல, வயது முதிர முதிர தங்கள் உணர்வுகளைக் கட்டில் கொண்டுவர ஆண்களால் முடிகிறது. இருந்தபோதும் பல நடுத்தர வயதில் உள்ள ஆண்களையும் இது பாதிப்பதும் உண்மையே.

எந்தளவு நேரத்தில் உச்ச கட்டத்தை அடைவது உசிதமானது என்பதைப் பற்றி சரியான தகவல்கள் இல்லை. இருந்தபோதும் 2006 ல் Congress of the European Society for Sexual Medicine சமர்பிக்கப்பட்ட ஆய்வின் பிரகாரம் பொதுவாக விந்து முந்துவதாகக் கருதும் ஆண்களுக்கு சராசரியாக 1.8 நிமிடங்களில் வெளியேறியது. சாதாரணம் எனக் கருதும் ஆண்களுக்கு 7.3 நிமிடங்கள் தாக்குப் பிடிக்கத்தக்கதாக இருந்தது. இருந்தபோதும் 25 நிமிடங்கள் வரை எடுத்த சில ஆண்களும் கூட தமக்கு விந்து முந்தி வெளியேறிவிடுவதாகக் கவலைப்பட்டதுண்டு.

எனவே இந்தப் பிரச்சனை பற்றி வெவ்வேறு மனிதர்களுக்கு வெவ்வேறு அளவுகோல்கள் இருக்கும் என்பது தெளிவாகிறது. இருந்தபோதும் 2.5 சதவிகிதமான ஆண்களுக்கு பெண் உறுப்பினுள் நுழைந்த பின்னர் 90 செகண்டுகள் கூட தாக்குப் பிடிக்க முடியாதிருந்தது. இதனால், தங்கள் ஆண்மையே பாதிப்புக்கு உள்ளாகி விட்டதாகவும் மனைவியைத் திருப்திப்படுத்த முடியவில்லையே எனவும் பல ஆண்கள் மனம் புழுங்குகிறார்கள். இயலாமையால் ஆற்றாமையால் மனப்பதற்றம், சோர்வு போன்றவற்றுக்கும் ஆளாகிறார்கள்.

அதேநேரம், அவர்கள் மனைவிமாரோ "இவர் தன்ரை வேலை முடிந்ததும் நடையைக் கட்டி விடுகிறார். என்னைக் கவனிப்பதில்லை" என மனத்திற்குள் குமுறுகிறார்கள். மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் இருவருமே துன்புறுகிறார்கள்.

காரணங்கள்

இது ஒரு பரவலான பிரச்சினை ஆன போதும் இதற்கான அடிப்படைக் காரணம் தெளிவாகப் புரியவில்லை. இருப்பினும் உயிரியல் காரணங்களும் மனோவியல் காரணங்களும் இணைந்தே இருப்பதை வைத்தியர்கள் உணர்கிறார்கள். இதனால்தான், இதற்கான சிகிச்சையும் கூட பல் வழிப்பட்டதாகவே அமைகிறது.

பதற்றமான சூழ்நிலைகளில் ஆரம்ப காலங்களில் உறவு கொண்டவர்களுக்கு இது கூடுதலாக நடப்பதாக தெரிகிறது. உறவின் போது நிதானத்தைக் கடைப்பிடித்து, செயல் முறைகளில் துரித ஸ்கலிதத்திற்கு இடம் அளிக்காத மாற்று முறைகளைக் கையாள்வது நல்ல பலனைக் கொடுக்கிறது. இதுதவிர சில மருந்து மாத்திரைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

இவை தவிர, சில வெளிப் பூச்சு களிம்புகளும் பலன் அளிக்கும் என நம்பப்படுகிறது. விந்து முந்தும் பிரச்சினை உள்ள ஆண்களின் உறுப்பின் முனையில் உள்ள மொட்டுப் பகுதியானது ஏனையவர்களதை விட தூண்டப்படும் போது கூடியளவு உணர் வினைத்திறனைக் கொண்டிருப்பதே முந்துவதற்குக் காரணம் என்று நம்பப்படுகிறது.

இதனால், அப்பகுதியை சற்று மரக்கச் செய்யும் விறைப்பு மருந்துகள் (Topical anaesthetics) உதவும் என்ற கருத்து நிலவுகிறது. இம் மருந்துகள் உறுப்பின் மொட்டுப் பகுதியின் உணர்நிலையை (Sensitivity) சற்றுக் குறைப்பதன் மூலம் விந்து விரைவதைத் தாமதப்படுத்துகின்றன. ஆயினும், விந்து வெளியாகும் உணர்வையோ, திறனையோ பாதிப்பதில்லை. பாவனையில் உள்ள இம் மருந்துகளின் ஆற்றல் பற்றிய சிறப்பான ஆய்வுகள் செய்யப்படாத போதும் கிடைக்கும் ஆய்வு முடிவுகளானது இவை ஓரளவு செயற் திறன் கொண்டவை என்பதை உறுதிப்படுத்துகின்றன.

களிம்பு மருந்துகளை விட விசிறப்படும் (Spray) மருந்துகள் உபயோகிப்பதற்கு சுலபமானவை. அத்துடன், விசிறியவுடன் உலர்ந்து விடுவதால் பாவிப்பதும் வெளிப்படையாகத் தெரியாது. இது உறுப்பை மருந்தால் அசிங்கப்படுத்தவோ மனத் திடத்தை குறைக்கவோ செய்யாது. பக்க விளைவுகள் குறைவு. தேவைப்படும் போது மட்டும் உபயோகித்து விட்டு நிறுத்தி விடலாம். புது மருந்துகள் பற்றிய ஆய்வுகளும் இப்பொழுது செய்யப்படுகின்றன.

மனப்பதற்றம், மனச்சோர்வு ஆகியவற்றிற்கு உபயோகிக்கப்படும் (Selective serotonin reuptake inhibitors (SSRIs) and antidepressants with SSRI-like effects) போன்ற சில மருந்துகளும் உதவலாம். இவற்றை மருத்துவரின் ஆலோசனையுடன் பயன்படுத்தலாம்

குடும்ப வாழ்வில் முந்துவதைவிடவும் பிந்துவதை விடவும் இணைந்து ஓடுவதே நல்லது. ஆனால், கணவன் மனைவி இடையே நம்பிக்கையும் புரிந்துணர்வும் விட்டுக் கொடுப்புகளும் நிலவினால் இது ஒரு பிரச்சினையே இல்லை .




SUN CITY
SUPER MARKET
OPEN 7 DAYS
8.30AM-10.30PM
SUN CITY
SUPER MARKET
திறந்திருக்கும் நேரங்கள்
வார நாட்கள்: மு.ப. 9.30 - பி.ப: 9.30
வார இறுதி நாட்கள்: மு.ப. 8.30 - பி.ப. 10.00
இலங்கை, இந்திய, கரேபியன் நாடுகளில் இருந்து தருவிக்கப்பட்ட உடன் மீன் வகைகள் மற்றும்
ஊர் ஆட்டிறைச்சி
ஊர்க் கோழி
காட்டுப் பன்றி
புதிய சினிமா படங்கள்
மரக்கறிகள்
பழங்கள்
மளிகைப்பொருட்கள்
கனவாய், உடன் நண்டு, கோழி சுத்தம் செய்து கொடுக்கப்படும்.
சிறிய கட்டணம் அறவிடப்படும்
ஒவ்வொரு வாரமும் 50, 100 டொலருக்கு மேல் பொருட்கள் கொள்வனவு செய்பவர்களுக்கு ஒரு பொருளை சிறப்பு விலையில் 5 சதத்திற்கு பெறலாம்.
உணவகங்களுக்கு தேவையான Boneless mutton வெட்டிக்கொடுக்கப்படும்.
இறாத்தல்
$4.75
மட்டுமே
SUN CITY PLAZA
Unit 18 2761 Markham Road, Scarborough, M1X1M4
Between Mcnicoll & Finch at Markham and Nashdene
e-mail: shop@suncitymarket.com
416- 724-6666
STEELS AVE EAST
MC NICOLL AVE
Nashdene
MARKHAM ROAD
FINCH AVE EAST





விரல்களில் வர்ண ஜாலம்

விரல்கள்தான் ஓவியம் வரைகின்றன. ஆனால் அவ் விரல்களையே ஓவியமாக்கி விடுகிறார்கள் இந்த ஓவியர்கள். வெறுமெனே ஐந்து விரல்களைக் கொண்டு மனிதன் எத்தனை நுணுக்கமான காரியங்களை எல்லாம் செய்கிறான் என்று எண்ணும்போது வியப்பாகத்தான் இருக்கிறது. எம்மைப் போல ஐந்து விரல்களைக் கொண்ட விலங்குகள் குரங்குகள் மட்டுமென்றே கூறலாம். கூர்ப்பின் பாதையில் எனைய விலங்குகளில் பயன்பாட்டுத் தேவைக்கேற்ப இவ் ஐவிரல் முடிவு அவயவங்கள வடிவத்திலும் எண்ணிக்கையிலும் மாறிவிட்டன. ஆனால் அந்தக் குரங்குக்கு எம்போல் விரலிருந்தென்ன. அவ்விரல்களால் நுணுக்கமான வேலைகளை செய்ய முடியாது. மனிதனில் அது முடியுமானது எவ்வாறென்றால் அது ஒரு சின்னஞ் சிறிய மாற்றத்தால்தான். ஆனால் அது மிகப்பெரும் ஆற்றலை நல்கிய அற்புதமான மாற்றம். என்னவெனில். குரங்குகளின் விரல்களை அவதானித்தீர்களா ? அவற்றின் எல்லா விரல்களும் ஒரே திசையில் மடிவுறும். ஆனால் மனிதனிதனின் கையில் பெருவிரலானது ஏனைய விரல்களுக்கு எதிர்த்திசையில் மடியும். அதனால் அது மற்றைய அனைத்து விரல் நுனிகளையும் தொடக்கூடியதாக அமைந்துள்ளது. இப்படி ஒரு சிறு மாற்றம் எத்தனை படைப்புகளை வழங்க வழி வகுத்திருக்கிறது பார்த்தீர்களா! சரி இப்போது இங்கே அதே விரல் கொண்டு தீட்டிய ஓவியங்களைத்தான் பார்க்கிறீர்கள். ஆனால் இவை அந்த விரல்களிலேயே தீட்டிய ஓவியங்கள். விரலோவியங்கள்! கல்லைக் கண்டால் நாயைக் காணோம், நாயைக் கண்டால் கல்லைக் காணோம் என்பார்களே. அர்த்தம் தெரியுமா? கல்லாலான நாயின் சிலையொன்றைப் பார்க்கிறீர்கள் - அது நாயாகத் தான் தெரியும். கல்லாய்த் தெரியாது. தெரிந்தால் அச்சிலை சிலையேயல்ல. அதுபோல இங்கே பாருங்கள். விரல் தெரிகிறதா?

ஆதி & அச்சு





நீலிக் கண்ணீர் வடித்த ஒரு பேயின் கதை!

பழந்தமிழ் இலக்கியப் பேய்க்கதை.

விவேக சிந்தாமணியில் "பெண்களை நம்பாதே."
என்று ஒரு பாடல் வருகிறது (பாடல் 30)

உடனே கொல்லும் விசத்தை நம்பலாம்,
பழியைக் கருதாத ஒரு வணிகனை
வழிமறித்துக் கொலை செய்த
பழையனூர் நீலியை நம்பலாம்,
கொடிய மும்மதங்களை உடைய
மலை போன்று வளர்ந்த யானையையும் நம்பலாம்...
என்று சொல்லிக்கொண்டே போய்

"நடை குலுக்கி முகம் மினுக்கி
நகை நகைத்திடு மாதரை நம்பொணாது
மெய் நம்பொணாது மெய் நம்பொணாது மெய்
காணுமே" என்று முடிகிறது.

யார்இந்தப் பழையனூர் நீலி ?


தமிழ்நாட்டை உலுக்கிய பயங்கரப் பேய் நீலி. புறநானூறு முதலிய 18 சங்க இலக்கிய நூல்களில் ஏராளமான பேய்க் கதைகள் வருகின்றன. ஆயினும் நீலி என்ற பேய்தான் தமிழர்கள் மனதில் பெரும் அச்சத்தை ஏற்படுத்திய பேய். பல நூற்றாண்டுகளாகப் பலரும் பாடல்களில் உவமையாகக் கூறும் அதி பயங்கர தமிழ்ப் பேய். திரு ஆலங்காட்டுக்குப் பக்கத்தில் பழையனூர் இருக் கிறது. அங்கே நீலிக்கு ஒரு கோவிலும் உண்டு. தமிழில் நீலிக் கண்ணீர் வடிக்காதே என்ற பழமொழியும் இருக்கிறது. நீலியின் கதை தெரியாதோருக்கு இது என்ன என்று தெரியாது. நீலி கதை இரண்டு ஜன்மங்களில் நடந்த கதை.

நவக்ஞானி என்ற பார்ப்பனி காசியில் தந்தையுடன் வசித்துவந்தார். அவருடைய தந்தை காஞ்சீபுரத்தில் இருந்து வந்த ஒரு வணிகரை விருந்துக்கு அழைத்தார். அவர் ஏற்கனவே திருமணமாகியும் கூட விருந்து கொடுத்தவரின் மகளான நவக்ஞானியை மணம் புரிந்தார். ஊருக்குத் திரும்பிய அவர் வீட்டுக்கு வரும் முன்னரே ஆலங்காட்டில் நவக்ஞானியக் கொலை செய்து விடுகிறார். அவளுடைய மறு அவதாரம்தான் நீலி. அந்தப் பெண்ணுடன் வந்த அண்ணன் தூக்குப் போட்டு இறக்கிறான். மறு பிறப்பில் நீலியாகப் பிறந்த பெண்ணும் அண்ணனும் பேயாகத் திரிந்து ஆடு மாடுகளை வதம் செய்கின்றனர். அவ்விருவரையும் பெற்றெடுத்தோர் ஒரு வேல மரத்தில் கட்டி விட்டு விட்டுப் போய்விடுகிறார்கள் நீலி, தன் கணவர் தரிசன செட்டியாகப் பிறந்ததை அறிந்து பழிவாங்கக் காத்திருந்தாள். தரிசன செட்டிக்கு எப்படியோ உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்பது தெரிந்தது. மந்திர தந்திரம் அறிந்தோரிடம் இருந்து தன்னைப் பாதுகாக்க ஒரு மந்திர வாளை பெற்றுக் கொண்டார்.

இது இப்படி இருக்க நீலியின் அண்ணன் தங்கியிருந்த வேல மரத்தை பழையனூர் வணிகர்கள் கலப்பை செய்ய வெட்டிச் சென்றுவிட்டனர். அந்தப் பேய்க்கிருந்த வீடும் போய்விட்டது. அதுவும் பழிவாங்கக் காத்திருந்தது. இதற்கிடையில் அதன் தொல்லை தாங்காதபடி ஒருவர் அந்த பேய்க்கு முடிவுகட்டுகிறார்.

நீலியின் ஆத்திரம் தரிசன செட்டி மீது மட்டும் இல்லாமல், வேளாளர் மீதும் பாய்ந்தது. உரிய தருணத்துக்காக கத்திருந்தாள். நீலி வேறு ஒரு தந்திரம் செய்தாள். ஒரு மரக் கிளையை ஒடித்து அதைக் குழந்தையாக ஆக்கி ஊர் ஜனங்கள் அனைவரையும் கூட்டி தரிசன செட்டி தன் கணவர் என்றும் அவர் பெற்ற குழந்தைதான் இது என்றும் கதறி அனுதாபத்தைப் பெற்றாள். (இதுதான் நீலிக் கண்ணீர் !!) ஊர் ஜனங்களின் கெட்ட காலம்,70 வேளாளர்கள் பஞ்சாயத்து கூடி அவளுடன் செல்ல உத்தரவிட்டனர். பெண்ணுடனும் குழந்தையுடனும் இரவில் தங்கும் போது வாளுக்கு வேலை இல்லை என்று கூறி அதை விட்டுப் போகச் சொல்லினர். தரிசன செட்டிக்கு பயம் வந்தது. எவ்வளவோ மன்றாடியும் வாளை விட்டுத் தூங்கவேண்டிய தருணம் வந்தது. இதற்குக் காரணம் 70 பேரும் "உங்கள் உயிருக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்தால் நாங்கள் 70 பேரும் தீக்குளித்து உயிர்விடுவோம்" என்று சூளுரைத்ததுதான்.

நீலிப்பேயின் ஆற்றலை அறியாத அப்பாவிகள் அவர்கள். அன்றிரவு தரிசன செட்டியைத் தீர்த்துக்கட்டியது நீலிப் பேய். மறு நாள் சத்தி
த்துக்குக் கட்டுப் பட்ட 69 பேர் தீக்குளித்து உயிர் நீத்தனர். இதுதான் அன்றைய தமிழரின் பெருமை. உண்மைக்கும் சொன்ன சொல்லுக்கும் அவ்வளவு மதிப்பிருந்த காலம் அது. ஒருவர் மட்டும் ஒளிந்து கொண்டார். விடுவாளா நீலி? அவன் ஒளிந்திருந்த கழனிக்குப் போய், அவன் மகள் போல நடித்து அவனையும் ஏமாற்றிக் கொன்றாள்.



சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரட்டைக் காப்பியங்களில் ஒரு நீலி வருகிறாள். அவள் முற்பிறப்பில் கோவலனைச் சபித்ததால்தான் கோவலன் கொலை உண்டான் என்பது சிலப்பதிகாரத்தின் பூர்வ கதை.

நீலி கொன்றது 70,1 பேர் மட்டும் அல்ல. புளியங் கொப்பை ஒடித்து குழந்தை ஆக்கினாள் அல்லவா? அதையும் காலுக்கடியில் போட்டு மிதித்துக் கொன்றதாக பழையனூர் கதைகள் கூறுகின்றன.. அந்த இடங்கள் இன்னும் பழையனூரில் இருக்கின்றன.



மனவெளி கலையாற்றுக்குழு வழங்கும்
17வது
அரங்காடல்
DANCE & PERFORMING ARTS
26 SUN
APRIL 2015
1ST SHOW 1:15 PM
2ND SHOW 6:00 PM
யாழினி ஜோதிலிங்கத்தின்
நீ.லை.ம்
ஒளவையின்
காற்றெல்லாம் தென்றல் அல்ல
ஐஸ்வர்யா சந்துருவின்
சிருஷ்டி
மெலிஞ்சி முத்தனின்
மோகப்பறவை (தென்மோடி நாடகம்)
Flato
Markham Theatre
171 Town Centre Blvd.
Markham Ontario
L3R 8G6 (Warden & Hwy 7)





இரு மதங்கள் பல உலகெங்கும் இன்றும் நடந்த வணணம்தான் உள்ளன. உணவுக்காகப் பலியிடப்படும் விலங்குகள் ஒருபுறமிருக்க, வெறும் மூட நம்பிக்கைகளுக்காக, மற்றும் செய்வினை சூனியங்களுக்காக, மதங்களின் பெயராலும் தெய்வங்களின் பெயராலும் நடத்தப்படும் மிருக வதைகள் வெறும் கொலையன்றி வேறு எந்தவிதமான நியாயமும் அற்றவை. ஆனால் அவற்றை பெரும் கூட்டம் கூட்டமாக மக்கள் திரண்டு வேடிக்கை பார்ப்பதும், ஆரவாரம் செய்து ஆதரவளிப்பதும் மனிதத்துவத்தை கேள்விக்கிடமாக்கி விடுகின்றன. மனிதருக்கு எந்த விதத்திலும் தீங்கு இழைக்காத, பதிலுக்கு நன்மையே செய்யும் விலங்குகளே இவ்வாறு நயவஞ்சகமாகக் கொல்லப்படுகின்றன. வெறும் கிணறு வெட்டித் தண்ணீர் காண்பதற்கே கோழி அறுத்துப் பலிகொடுக்கும் மூடப்பழக்கம் முதல், பேயோட்ட, மழை பெய்ய, தத்துக் கழிய, புதையல் கிடைக்க, சாபம் விலக, பாவங் கழிக்க, பீடை ஒழிய, நேர்த்திக் கடன் தீர்க்க... என்று வரிசா வரிசையாக நமக்கு மிருகப் பலி கொடுத்துப் பழகி, அதன் கொடுமை உணராப் பாறாங்கல்லாய் மனம் மரத்து விட்டது. அதுதான் போகட்டும் ஒற்றைக் கொலை. ஆனால் இங்கே பாருங்கள். நீங்களே மலைத்துப் போவீர்கள். ஜீவகாருணியம் பற்றிப் பேசும் இந்து மதத்தில்தான் உலகின் மிகப்பெரும் மிருக வதையும் நடக்கிறது என்பது எத்தனை இந்துக்களுக்குத் தெரியும்?

ஆம். இது நிகழ்வது உலகின் ஒரே இந்து நாடாக இருந்த நேபாளத்தில் தான். 27 மில்லியன் மக்கள் வாழும் நேபாளத்தில் 80 வீதமானவர்கள் இந்துக்கள். இந் நேபாளத்தில் பாரியாப்பூர் என்ற இந்திய எல்லையோர நகரத்தில் அமைந்துள்ள காந்திமை என்ற பெண் தெய்வத்துக்குத்தான் இந்தக் குருதிப் படையல். ஆதிஷ்டமும், சுபீட்சமும் கிடைக்குமென்று கூறி ஐந்து வருடத்துக்கு ஒருமுறை நடத்தப்படும் இரண்டு நாள் திருவிழாவிற்கு சுமார் 5 மில்லியன் மக்கள் கூடுவர்.

சுமார் மூன்று லட்சம் வரையிலான விலங்குகள் உயிரோடு கொல்லப்படுகின்றன. முதலில் ஒரு எலி, ஆடு, சேவல், பன்றி, புறா என்ற ஐந்து மிருகங்களை பலி கொடுத்து ஆரம்பித்து வைக்கப்படும் இந்தப் பலியாட்ட விழாவில் சுமார் ஒரு லட்சம் ஆடுகள், ஏழாயிரம் வரையிலான எருமை மாடுகள், இதர விலங்குள் என்று கொலை மேல் கொலையாகக் கொன்று குவித்து, தங்கள் குலதெய்வத்தின் மனம் குளிரப் பண்ணுகிறார்கள் இந்த மனித மிருகங்கள். மாடுகள் மட்டும் சுமார் நாலாயிரம் முதல் ஐயாயிரம் வரை தலை வெட்டிக் கொல்லப்படுகின்றன. தலைகளும் முண்டங்களுமாக ஒரு குருஷேத்திர யுத்தத்தில் வெட்டிச் சரிக்கப்பட்ட உடல்கள் போல் கண்ணுக்கெட்டிய தூரம் வரை பலிக்களத்தில் மடிந்து கிடக்கின்றன நாம் கோமாதா குலமாதா என்று கொண்டாடிய இந்த மாடுகள். கத்திகளில் இரத்தம் வழிய, விலங்குகளை வெட்டி வெட்டிச் சரித்து, வியர்வையை வழித்தெறியும் இத் திருத்தொண்டர்களின் கோரத் தாண்டவத்தைக் கண்டு களித்துக் கரகோஷம் செய்ய முண்டியடிக்கும் பெருங்கூட்டம் பெண்களும் ஆண்களுமாய் அலைமோதும்.

2009ல் மட்டும் இரண்டரை லட்சம் விலங்குகள் இத் திருவிழாவில் இந்தியாவிலிருந்தும் பல பலியிடப்பட்டன. கடைசியாக கடந்த வருடம் நவம்பரிலும் நடந்திருக்கிறது ஆயிரம்பேர் விலங்குகளை இந்த உலக மகா மிருகவதை. இதற்கு ஒரு கதை: 260 வருடங்களுக்கு முன்னர் பகவான் சௌத்திரி என்ற நிலப்பிரபு மக்வான்பூர் எனுமிடத்தில் சிறை வைக்கப்பட்டிருந்தானாம். அவன் கனாக் கண்டானாம். காந்திமை என்ற தெய்வம் கனவில் வந்து சொன்னதாம் தனக்காக இரத்தப்பலி கொடுப்பதாக வாக்களித்தால் அவனது அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்ப்பதாக. அவனும் வாக்களித்தானாம். மறுநாள் கண் விழித்தபோது அவன் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டு விட்டானாம். விடுதலையான முதற் காரியமாக அவன் அவனுடைய நாட்டுப் பூசாரி அவனுக்கு வழங்கிய ஆலோசனைக்கமைய, அன்று முதல் பலிகொடுக்க ஆரம்பித்தானாம். அப்போது மண் கூஜா ஒன்றுக்குள்ளிருந்து ஒளியொன்று தோன்றியதாம்.



சுமார் ஒருலட்சம் ஆடுகள், ஆறாயிரம் ஏழாயிரம் எருமைகள், இதர விலங்குகள் என்று கொலைமேல் கொலை யாகக் கொன்று குவித்து, தங்கள் குலதெய்வத்தின் மனங்குளிரப் பண்ணுகிறார்கள் இந்த மனித மருகங்கள்!



இப்படித் தோன்றிய "பலி கொடுத்தல், பாப விமோஷனம்", என்ற பகுத்தறிவிற்கு அப்பாற்பட்ட அறிவீனமான கொள்கை, இலட்சோப லட்ச அப்பாவி விலங்குகளைக் இன்று கொன்று தள்ள வழி செய்கிறது. இதில் மற்றொரு கொடுமை என்ன வென்றால் இங்கே பலியிடுவதற்காக ஒட்டிக் கொண்டு கள்ளமாக எல்லை தாண்டி உள்ளே நுழைகிறார்கள். இந்திய உச்ச.நீதிமன்றம் இப்படி மிருகப் பலிக்காக விலங்குகளை சட்டவிரோதமாக எல்லை கடந்து ஓட்டிச் செல்வதைத் தடுக்கும்படி இந்திய அரசைக் கோரியுள்ளபோதும் எல்லைக்காவல்கள் தடுத்தால் தெய்வகுற்றமாகி விடுமென அஞ்சி கண்டும் காணாமல் இருந்து விடுகிறார்களாம். எல்லாம் சரி. இப்படியாக மிருக வதைக்கான கின்னஸ் சாதனையை இன்றைய நவீன உலகிலும் அரங்கேற்றிக்கொண்டு, பண்டைய தமிழன், முல்லைக் கொடிக்குத் தேர் கொடுத்தான், புறாவுக்காகத் தசை கொடுத்தானென்றுகூறி எம் ஜீவகாருணியத்தைப் பெருமைபட்டுக்கொள்வது எத்தனை போலித்தனம்! ●



முதியோர் நலன் பற்றிய இந்தப் பக்கத்தில் இதுவரை பல உபயோகமான விடயங்களைப் பகிர்ந்தபடியே தற்போது முதியோர் ஆரோக்கியம் பற்றிய விடயங்களில் கவனம் செலுத்தி வருகிறோம். இந்தவகையில் ஒஹிப் அட்டை பற்றிய விபரங்களை சென்ற தடவை தந்திருந்தோம். இவ்விதழில் நாம் எமது மருத்துவ உதவிக்கான ஒன்டாரியோ அரசாங்கத்தின் ஒன்டாரியோ மருந்து நலன் எனப்படும் ஒடிபி திட்டம், அதாவது ஒன்டாரியோ ட்ரக் பெனிபிட் புறோகிறாம் பற்றிப் பார்ப்போம். பலர் இதுகுறித்து குழப்பமான தகவல்களைக் கொண்டுள்ள நிலையில் இவை உங்களைத் தெளிவுபடுத்தும் எனக் கருதுகிறோம். நாம் தரும் தொடர்புகளைப் பயன்படுத்தி சந்தேகங்களைத் தீருங்கள்.

முதியோர் ஆரோக்கியமும் மருத்துவ நலத் திட்டமும்

ஒன்டாரியோ ட்ரக் பெனிபிட் புறோகிறாம் (ODB)

நீங்கள் 65 வயது அல்லது அதற்குக் கூடியவராக இருந்து ஒஹிப் கார்ட் வைத்திருந்தால் இந்தத் திட்டத்தில் நன்மை பெற அருகதையுள்ளவராகிறீர்கள். இதற்கெல்லாம் நீங்கள் விண்ணப்பிக்கத் தேவையில்லை. உங்களுக்கு 65 வயது வருவதற்கு 2 மாத்திற்கு முன்னரே உங்களுக்கு சுகாதார அமைச்சிடமிருந்து கடிதம் வரும். உங்கள் தற்போதய முகவரி அவர்களிடம் உள்ளதாவென உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். ஒருவேளை உங்கள் முகவரி மாறிவிட்டதானால் அமைச்சுக்கு அறிவிக்க வேண்டும். இதனை www. ontario.ca/addressschange என்ற இணையத்தளம் மூலம் அல்லது ஒரு சேவை ஒன்டாரியோ இணைத்தளம் மூலம் செய்துகொள்ளலாம்.

நீங்கள் 65 வயதை அடைந்து அடுத்த மாதம் 1ம் திகதியிலிருந்து இத் திட்டத்தின் நலன்களை நீங்கள் பெற முடியும். உங்கள் மருந்துச் சீட்டையும் ஆரோக்கிய அட்டையையும் (ஒஹிப் காரட்) மருந்தகத்துக்கு எழுத்துச் சென்று நீங்கள் ஓ.டி.பி. க்கு அருகதை உள்ளவரெனத் தெரிவியுங்கள். அவர்கள் தங்கள் கம்யூட்டர் சிஸ்டத்தில் சரிபார்த்துவிட்டு உங்களுக்கு மருந்துகளை வழங்குவர்.

டிடக்டபிள் பேமன்ட் மற்றும் கோ-பேமன்ட்

ஒடிபி நலனுக்கான வருடம் ஆகஸ்ட் 1ம் திகதி ஆரம்பிக்கின்றது. இதன்படி ஒரு வருடத்தின் ஆகஸ் 1ம் திகதிமுதல் மறுவருடம் அதே திகதிவரை ஒருவருடத்துக்கான கட்டணங்கள் அடங்குகின்றன. டிடக்டபிள் பேமன்ட் என்றால் உங்களுக்கு இனாமாக ஒதுக்கப்பட்டுள்ள ஒரு தொகையிலிருந்து உங்கள் மருந்துகளுக்கு அறவிடப்படும் தொகை கழிக்கப்பட்டுச் செல்வதாகும். இதன்படி 100 டொலர்கள் வரை உங்கள் மருந்துகளுக்கான தொகை கழிக்கப்பட்டுச் செல்லும். அதற்குமேல் செலவாகும்போது உங்களுக்கு கோ- பேமன்ட் முறை கைகொடுக்கும். கோ-பேமன்ட் என்பது, செலவாகும் தொகையில் ஒரு பகுதியை நீங்கள் செலுத்துவதாகும். இதன்படி, மருத்துவர் எழுதிய மருந்தின் கட்டணத்தில் 6.11 டொலர் வரை நீங்கள் கோ-பேமன்ட்டாகச் செலுத்துவீர்கள்.

நீங்கள் குறைந்த வருமானமுடைய முதியவராக இருந்தால் உங்களுக்கு வேறொரு தெரிவும் உண்டு. அதாவது, உங்கள் டிடக்டபிள் பேமன்டைக் கைவிட்டுவிட்டு, கோ-பேமன்டை மட்டும் செலுத்த விரும்புவதாக நீங்கள் விண்ணப்பித்தால் உங்கள் கோ-பேமன்ட் 2 டொலராக குறைக்கப்படும். இப்போது நீங்கள் வாங்கும் மருந்துக்கு 2 டொலர் வரையே செலவு செய்யவேண்டியிருக்கும். ஆனால் இலவசமான 100 டொலர் வரையிலான கழிவு கிடையாது. 100 டொலருக்கு மேல் அதிகப்படியான மருந்து செலவுகளைக் கொண்ட முதியவர்களுக்கு இது வாய்ப்பாக அமையும். ஆனால் இந்த மாற்றுத் திட்டத்தைப் பெற நீங்கள் விண்ணப்பிக்க வேண்டும். இந்த விண்ணப்பப் படிவம் உள்ளுர் மருந்தகத்தில் கிடைக்கும். இல்லையேல் 1-800-575-5383 என்ற இலக்கத்தை அழையுங்கள். அல்லது www.ontario.ca/ru6 என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளுங்கள்.

காப்பு உள்ள மருந்துப் பொருட்கள்

இந்த ஒடிபி திட்டம் சுமார் 3800 மருந்துப் பொருட்கள், சத்துணவுப் பொருட்கள், நீரிழிவு பரிசோதனைப் பொருட்கள் ஆகியவற்றுக்கு செல்லுப்படியாகும். இவை ஒன்டாரியோ ட்றக் பெனிபிற் போமுலறி மற்றும் கொம்பாற்றிவ் ட்றக்ஸ் இன்டெக்ஸ் எனும் பட்டியலில் பட்டியலிடப்பட்டுள்ளன. இவற்றை நீங்கள் பெற ஒரு தகைமை பெற்ற மருத்துவரே உங்களுக்கான மருந்துகளை எழுதியிருக்க வேண்டும். அத்தோடு அங்கீகரிக்கப்பட்ட மருந்தகத்திலேயே இவற்றை நீங்கள் வாங்க வேண்டும்.

காப்பு அற்ற மருந்துப் பொருட்கள்

பின்வரும் பொருட்களுக்கு ஒடிபி திட்டத்தில் காப்பு அளிக்கப்படுவதில்லை

- ஒன்டாரியோவுக்கு வெளியே நீங்கள் வாங்கும் மருத்துவர் எழுதிய மருந்துகள்

- அமைச்சின் ஆரோக்கிய வலைத் தொடர்புத் தொகுதியுடன் இணைந்தில்லாத ஒரு ஒன்டாரியோ வைத்தியரின் அலுவகத்தில் நீங்கள் வாங்கும் மருத்துவர் சீட்டில் எழுதிய மருந்துகள்.

-ஊசி மருந்து ஏற்றும் குழாய்கள். வெல்லப் பரிசோதனைத் துண்டுகள். வெல்வப் பரிசோதனை கருவிகள். மூக்குக் கண்ணாடிகள். செயற்கைப் பல் செட்டுகள். காது கேட்டல் உதவு கருவிகள். நீளக் காலுறைகள்.

எனினும் மிக விசேடமான நிலைமைகளின்கீழ் விதிவிலக்கான அணுகல் திட்டத்தின் கீழ் (எக்செப்ஷனல் அக்ஸஸ் புறோகிறாம்) ஒடிபி பட்டியலில் காணப்படாத மருந்துகள் உள்ளடக்கப்படக்கூடும். இதற்கு ஒரு வைத்தியர் உங்கள் சார்பாக விண்ணப்பிக்க வேண்டும்.

நீரிழிவு பரிசோதனைப் பொருட்கள்

இவை நீரிழிவு உடையோர் தமது இரத்தத்திலுள்ள வெல்ல அளவு மற்றும் சிறுநீரிலுள்ள கீற்றோன் அளவுகளைப் பரிசோதித்துக் கொள்ளப் பயன்படுத்தும் பொருட்களாகும். நீங்கள் ஒடிபி திட்டத்தில் காப்புப் பெறத் தகமை பெறுபவராகவும் நீரிழிவு நோய் உடையவராகவும் இருந்தால் இவற்றைப் பெற்றுக்கொள்ள வழியுள்ளது. இதற்கு நீங்கள் ஓர் ஒன்டாரியோ வைத்தியரிடமிருந்து நீரிலிவினைப் பரிசோதிக்க அங்கீகர்க்கப்பட்ட பெருட்களுக்கான மருந்துச் சீட்டொன்றைப் பெற்றிருக்க வேண்டும். இத் திட்டத்தின்படி நீங்கள் அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் இருக்கும் நீரிழிவுப் பரிசோதனைப் பொருட்களின் செலவுக்கான காப்பு உங்களுக்கு வழங்கப்படும். இது தொடர்பான விபரங்களை அறிந்துகொள்ளும் முகவரி:

Ontario Drug Benefit Program
1-886-532-3161
TTY: 1-800-387-5559
www.ontario.ca/h8h



MAYAS FURNITURE
www.mayasfurniture.ca
(416) 669 - 1214
18 MONTHS NO PAYMENT NO INTEREST
PRICE MATCHED 100% GUARANTEED
NO TAX*
WE PAY THE FOR YOU!
8 Pcs Bedroom Set
Reg. $2500
$1499
3 Pcs Recliner Sofa
Reg. $1800
$999
3 Pcs Sofa Set
Reg. $1200
$889
3 Pcs Sofa Set
Reg. $1100
$799
8 Pcs Bedroom Set
Reg. $1200
$849
5 Pcs Dining Set
(Solid Wood)
Reg. $650
$399
Sectional Sofa
Reg. $999
$675
3 Pcs Sofa Set
Coffee Table
Free
Reg. $1100
$789
Samy Maadam
From
$149
Orthopedic+ Luxury Mattress
Box Free
Mayas
Reg. $950
$689
Queen Size
One Side+ Pillow Top Mattress
Mayas
Reg. $450
$295
Queen Size
Reg. $300
$195
Single
Orthopedic+
Mayas
Reg. $250
$145
Single
Reg. $350
$245
Queen
Free Delivery
Store Hours: Sat & Sun : 9.00 am - 9.00 pm & Mon - Fri :10.00 - 9.00 pm
2950 Kennedy Road, Unit 9, 8 & 7, Scarborough, ON M1V 1T1
காசா உணவகத்திற்கு அருகாமையில்
N
Mayas
Kennedy Rd.
Finch Ave. East